
# 2014 அவ்யக்த முரளி



<u>**பொருளடக்கம் - 10**</u>

**18.01.2014** பிரம்மாபாபாவின் விசேஷமான அறிவுரை (படிப்பினை) -பாப்தாதா இருவரின் நினைவு சொரூபமாகுங்கள் -தந்தையைப் பின்பற்றுங்கள்!

**31.01.2014** திடீரென்று நடப்பவைகளுக்கு முன்பே சுதாரிப்புடன் இருந்து தன்னை சக்திசாலி ஆக்கிக் கொள்ளுங்கள். குஷியுடன் இருந்து திருப்தியான வாயுமண்டலத்தை உருவாக்குங்கள். கூடவே ஒவ்வொரு ஏரியாவிலும் (செய்தி) கொடுப்பதற்கான காரியத்தை செய்து முடியுங்கள், தற்போது எவரது புகாரும் இருந்து விடக்கூடாது!

**14.02.2014** பரமாத்ம அன்பிற்குத் தகுதியுள்ள குழந்தைகள் அன்பைக் கொடுத்து மற்றும் எடுத்துக் கொண்டே தந்தையைப் பின்பற்றி தானும் தடைகளற்றவராகுங்கள் மற்றும் தனது தொடர்பில் வருபவர்களையும், உடனிருப்பவர்களையும் தடைகளற்றவராக்குங்கள்!

**27.02.2014** <u>சிவ அவதாரத்தின்</u> போது வீணானவைகளை முடிப்பதற்கான பரிசை பாபாவிற்குத் தாருங்கள், விசேசமான கவனம் வைத்து ஒரு மாதத்திற்கு தடையற்ற நிலையை அனுபவம் செய்யுங்கள்!

**15.03.2014** வாழ்க்கையில் தினமும் ஹோலி (தூய்மை) ஆகி தூய்மையின் அதிர்வலைகளை நாலா புறமும் பரப்ப வேண்டும், முடிந்ததை முடிந்ததாக்கி வெற்றியினுடைய வரதானத்தை சொரூபத்தில் கொண்டு வர வேண்டும்!

**30.03.2014** எப்பேற்பட்ட சுற்றுப்புற சூழ்நிலையைப் பார்த்தாலும் பாபாவின் அன்பு (சிநேகம்) மற்றும் சகயோகத்தின் மூலமாக முன்னோக்கி சென்று கொண்டே இருங்கள், ஒவ்வொருவருடைய சிறப்புத்தன்மையைப் பாருங்கள். தானும் தீவிர முயற்சியில் ஊக்கம் மற்றும் உற்சாகத்தில் இருக்க வேண்டும் மற்றும் உடன் இருப்பவர்களுக்கும் ஊக்கம் உற்சாகத்தைக் கொடுக்க வேண்டும்!

**12.10.2014** தீபாவளி திலாராம் (மனதைக் கொள்ளை கொள்பவர்) மற்றும் தீபங்களின் நினைவார்த்தமாகும் -ஒவ்வொரு குழந்தையின் உள்ளத்திலும் திலாராம் நிறைந்திருக்கின்றார்!

**05.11.2014** உங்களுடைய ஒளி வீசும் திவ்ய சொரூபம் உங்களிடம் வருபவர்களுடைய தீபமும் ஒளி வீசும்படி அதே போலவே இருக்க வேண்டும், உங்களின் சாதாரண சொரூபம் அவர்களின் கண்களுக்குத் தென்படக்கூடாது!

**30.11.2014** திலாராமை (உள்ளத்திற்கு ஓய்வு அளிப்பவர்) உள்ளத்தில் வீற்றிருக்கச் செய்து சந்திப்பை கொண்டாடி

சதா குஷியாக இருக்க வேண்டும். அமிர்த வேளை ஒரு நாளின் ஆரம்பமாகும். எனவே அமிர்தவேளையில் அமிர்தத்தை நிச்சயமாக அருந்த வேண்டும்!

**25.12.2014** புதிய வருடத்தில் தீவிர புருஷார்த்தத்தில் கவனம் செலுத்தி, முன்னேறிக் கொண்டே செல்ல வேண்டும், தன்னை சோதித்து மாற்றிக் கொள்ள வேண்டும். கடைசி (தேர்வு) சோதனை திடீர் என்று ஏற்படும். எனவே ஒவ்வொரு பாடத்திலும் பாஸ் மார்க் எடுக்க வேண்டும், சதா கூடவே இருக்க வேண்டும். மேலும் கூடவே இராஜ்யத்திலும் வர வேண்டும்!

தனிப்பட்ட சந்திப்புகள் -பார்ட்டிகள் **etc**

ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

## 18.01.2014 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## பிரம்மாபாபாவின் விசேஷமான அறிவுரை (படிப்பினை) -பாப்தாதா இருவரின் நினைவு சொரூபமாகுங்கள் -தந்தையைப் பின்பற்றுங்கள்!

இன்றைய நாளில் அனைவரின் மனதிலும் விசேஷமாக பிரம்மாபாபாவின் நினைவு நிறைந்து இருக்கிறது இன்றைய நாள் பிரம்மாபாபா சாகார ரூபத்திலிருந்து அவ்பக்த பாகத்தை நடிப்பதற்காக சென்றதன் விசேஷமான ஞாபகார்த்த நாளாகும். மேலும் அமிர்தவேளையில் இருந்தே பாப்தாதா பார்க்கின்றார்; ஒவ்வொரு குழந்தையின் மனதிலும் கண்களிலும் விசேஷமாக பிரம்மாபாபா நிறைந்து இருந்தார். இன்றைய நினைவு நாளில் தான் பிரம்மாபாபா அவ்யக்த ரூபத்தில் பாகத்தை நடிப்பதற்கு நிமித்தமானார். சாகாரத்தில் (ஸ்தூல ரீதியிலும்) பிரம்மாபாபாவின் கூடவே சந்திப்பைக் கொண்டாடிய குழந்தைகள் மிகவும் குறைவானவர்கள் தான், அவர்களது நெற்றியிலும் பிரம்மாபாபாவின் சரித்திரம், வார்த்தை வரதானமாக நினைவில் இருக்கிறது. அவர்கள் குறைவானவர்கள் தான். இப்போது எண்ணிக்கை அதிகமாக வளர்ந்திருக்கிறது. ஆனாலும் இப்போதும் கூட அவ்யத்த ரூபத்தில் பாலனை தந்து கொண்டு இருக்கின்றார். பிரம்மாபாபாவை நினைவு செய்து சாகார ரூபத்தில் பாகத்தை நடித்து பிரேரணையை எடுத்தவர்கள், கூடவே இருந்தவர்கள் மிகவும் குறைவானர்கள் ஆனால் இப்போது நீங்கள் அனைவரும் கூடவே இருப்பவர்களாக உள்ளீர்கள். சாகார ரூபத்தில் (நேரில்) பார்க்காவிட்டாலும் பரவாயில்லை, இப்போது அவ்யக்த ரூபத்தில் பாலனை எடுத்துக் கொண்டு இருக்கின்றீர்கள். இப்போது பிரம்மாபாபாவின் அவ்யக்த ரூபத்தில் பாலனை (வளர்ப்பு) எடுத்துக் கொண்டிருப்பவர்கள் கை உயர்த்துங்கள். சாகாரத்தில் இருக்கும்போது

உள்ளவர்கள் அல்ல! அவ்யக்த ரூபமான பிறகு வந்தவர்கள் கை உயர்த்துங்கள் அவ்யக்த பிரம்மாபாபா எவ்வளவு பாலனை அவ்யக்த ரூபத்தில் இருந்து தந்து கொண்டிருக்கின்றார். சிவபாபாவும் கூடவே உள்ளார். ஆனாலும் பிரம்மாபாபா அவ்யக்த ரூபத்தில் இருந்து பாலனை தந்து கொண்டிருக்கின்றார், ஏனெனில் பிரம்மாபாபா சாகார உடலில் இருந்த காரணத்தால் ஸ்தாபனையில் நல்ல நல்ல பாகத்தை நடித்தார், சிவபாபாவுடன் கூடவே பிரம்மாபாபாவும் இருந்தார், யார் பிரம்மாபாபாவின் காலத்தில் இருந்தார்களோ அவர்கள் கை உயர்த்துங்கள். மிகவும் குறைவு வந்திருப்பவர்களில் குறைவாக உள்ளனர். இன்னும் இருக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொரு குரூப்பிலும் வருவார்கள்.

மேலும் இன்று பிரம்மாபாபாவின் நாளாக இருப்பதால் அமிர்தவேளையில் இருந்தே சிவபாபாவின் நினைவுடன் கூடவே பிரம்மாபாபாவின் நினைவும் உள்ளது. சாகாரத்தில் பிரம்மாபாபாவின் பாலனை பெற்றவர்கள் கை உயர்த்துங்கள். மிகவும் உயரமாக உயர்த்துங்கள். குறைவாகவே உள்ளனர். மேலும் இப்போது அவ்யக்த பிரம்மாவிடம் பாலனை எடுத்துக் கொண்டிருக்கின்றீர்கள். ஆகையால் தங்களை பிராமணர் என்று கூறிக் கொள்கின்றீர்கள். சாகாரத்தில் பிரம்மாபாபாவுடன் பாகம் ஏற்று நடித்தது என்பது பாக்கியத்தின் அடையாள மாகும் ஆனால் இப்போது இரண்டு தந்தையர்களும் சேர்ந்தே குழந்தைகளுக்கு சேவை செய்து கொண்டிருக்கின்றார்கள். எவ்வளவு பாக்கியசாலிகள் நீங்கள்! பாப்தாதா குழந்தைகளின் பாக்கியத்தைப் பார்த்து ஆஹா குழந்தாய்! ஆஹா என பாட்டு பாடுகின்றார். ஆனாலும் இப்போது கூட இரண்டு பேரும் சேர்ந்தே குழந்தைகளுக்கு சேவை செய்து கொண்டிருக்கின்றார்கள். ஆக பிரம்மாபாபாவின் பாகம் விசேஷமானது. இரண்டு தந்தையர்களையும் பின்பற்றுங்கள், ஏனெனில் அனைவரின் மனதிலும் பிரம்மாபாபாவின் நினைவு உள்ளது. கூடவே இன்றைய விசேஷ நாளில் அனைவரின் மனதிலும் அமிர்தவேளையில் இருந்து பாப்தாதா இரண்டு பேரின் அறிவுரை அடிக்கடி நிளைவிற்கு வந்து கொண்டேயிருக்கிறது. பிரம்மாபாபாவின் விசேஷமான அறிவுரை: பாப்தாதாவின் நினைவு சொரூபமாகுங்கள். தனியாக பாபாவும் அல்ல, தனியாக பிரம்மாபாபாவும் அல்ல, இருவரையும் நினைவு செய்யுங்கள்.

இருவரின் பாலனையும் முன்னால் செல்வதற்கு உதவி செய்து கொண்டேயிருக்கும். இன்றைய நாள் அனுசாரம் அனைவரின் மனதிலும் விசேஷமாக பிரம்மாபாபாவின் நினைவு உள்ளது, மேலும் தந்தையைப் பின்பற்றுங்கள், ஏனெனில் சாகாரத்தில் உங்களைப் போன்று தான் பிரம்மாபாபாவும் வாழ்ந்து வந்தார். மேலும் பிரம்மாபாபா சதா கூறுகின்றார் பாப்தாதா இருவரையும் பின்பற்றுங்கள். பிரம்மாபாபா சாகாரத்தில் இருக்கும்போது குழந்தைகளோடு நடிக்கும்போதும், வெளியில் சேவையில் இருக்கும்போதும், எப்படி பாகத்தை ஏற்று நடித்தார். இது மாதிரி நீங்கள் பிரம்மாபாபாவைப் பின்பற்றுங்கள். மேலும் பாப்தாதா பார்த்தார் குழந்தைகள் இருவரையும் பின்பற்றி நடந்து கொண்டு தான் இருக்கிறார்கள். பாபாவின் மனதில் தினமும் அமிர்த வேளையில் அந்த மாதிரி செல்ல குழந்தைகள், யார் பின்பற்றுகின்றார்களோ, அவர்களுக்கு விசேஷமாக அன்பு நினைவுகளைத் தருகின்றார் ஆஹா, குழந்தாய் ஆஹா! என்ற வரதானமும் தருகிறார்.

மேலும் இன்றைய நாளில் பிரம்மாபாபாவின் விசேஷத்தைப் பார்த்தீர்கள், கேட்டீர்கள் அதே மாதிரி பின்பற்றுகிறீர்கள் தானே! பிரம்மாபாபாபாவும் உங்களை மாதிரி சாகாரத்தில் (ஸ்தூல வாழ்க்கையில்) அனைவரது சம்மந்தத்தில் இருந்து வந்த நடைமுறை வாழ்க்கையைச் கேட்டும், பார்த்தும் உள்ளீர்கள். பிரம்மாபாபா இன்று விசேஷமாக பாப்தாதா இரண்டு பேரையும் பின்பற்றக்கூடிய குழந்தைகளை (எமர்ஜ் செய்து) முன்னால் கொண்டு வந்து விசேஷமான நினைவினைத் தருகின்றார். பிரம்மாபாபாவின் அன்பு நினைவை ஏற்றுக் கொண்டீர்களா? மிகவும் உளப்பூர்வமான அன்பினைத் தந்துள்ளார். அன்பு என்றால், தந்தையை பின்பற்றும் வரதானம் கிடைப்பதாகும். அப்படி என்றால், நீங்கள் அனைவரும் பாப்தாதாவைப் பின்பற்றுகிறீர்கள் தானே! யார் அவ்வாறு செய்வார்களோ அவர்கள் கை உயர்த்துங்கள். பிரம்மாபாபாவை சாகாரத்தில் பார்க்காவிட்டாலும் சரி வாழ்க்கை சரித்திரத்தைக் கேட்டு பிரம்மாபாபாவின் மனதின் சந்திப்பை நிகழ்ச்சியைப் பின்பற்றி வாருங்கள். பிரம்மாபாபாவிற்கு குழந்தைகளைப் பார்த்து அதிகமாக மகிழ்ச்சியாக உள்ளது. ஆகையால் பின்பற்றுவதை ஒருபோதும் விட்டுவிடாதீர்கள். பாப்தாதா, இருவரையும் பின்பற்றுங்கள் ஏனெனில் பிரம்மாபாபா உங்களைப்

போல் சாகாரத்தில் பாகத்தை நடித்தார், மேலும் வெற்றி அடைந்தார். இன்றைய நினைவு நாள் பிரம்மாபாபாவின் வெற்றியின் நாளாகும். தந்தையைப் பின்பற்றினார் அல்லவா? பிரம்மாபாபா மற்றும் சிவபாபாவைப் பின்பற்றுவீர்களா? யார் பின்பற்றுகின்றார்களோ அவர்கள் கை உயர்த்துங்கள். நல்லது அனைவருமே கை உயர்த்துகின்றார்கள். மிக மிக வாழ்த்துக்கள். வாழ்த்துக்கள்.

இன்று அமிர்தவேளை அவ்யக்த பிரம்மாபாபா விசேஷமாக உளப்பூர்வமாக, மிகவும் சினேகத்துடன் ஒவ்வொரு குழந்தையையும் மிக அன்பாக எதிரில் கொண்டு வந்து (எமர்ஜ் செய்து) அன்பு நினைவுகளைத் தந்துள்ளார். சம்பூர்ணம் ஆவதற்கான ஆர்வம் உற்சாகம் வந்து விடும் அளவிற்கு சாகாரமாக (ஸ்துலமாக) அன்டைப் பொழிந்தார். ஆக உங்கள் மனதில் பிரம்மாபாபாவைப் போன்று சாகாரத்தில் பாகத்தை நடிப்பதற்கான உணர்வு உள்ளதல்லவா? நேரில் பார்க்கவில்லை ஆனால் கேட்டுள்ளீர்கள் தானே? பிரம்மாபாபா தனது சாகார வாழ்வில் என்னென்ன செய்தார்? எப்படி அன்பு நெறியை வெளிக்காட்டினார். தந்தையைப் பின்பற்றக் கூடியவர்கள் தானே? பின்பற்றப்போகிறவர்கள் கை உயர்த்துங்கள், செய்து கொண்டிருக்கிறீர்கள்? ஏனெனில், பிரம்மாபாபாவோடு அனைவருக்கும் அன்பு உள்ளது. சாகாரமாய் (நேரில்) பார்க்காமலிருக்கலாம் ஆனால் பிரம்மாபாபாவின் பாலனையைக் கேள்விப்படும்போதே அவரைப் பின்பற்ற வேண்டுமென மனதில் எழுகிறது.

ஆக இன்று பிரம்மாவின் விசேஷ நினைவு தினமாகும் மேலும் பிரம்மாபாபா அனைத்து குழந்தைகளையும் மண்டலங்களையும் எதிரில் கொண்டு வந்தார். (எமர்ஜ்) மண்டலத்திலோ நீங்கள் அனைவரும் இருந்திருப்பீர்கள்தானே! ஆக ஒவ்வொருவருக்கும் அன்பு நினைவுகளைக் கூறினார். அன்பு நினைவு கிடைத்ததா? கை உயர்த்துங்கள். மிகவும் அன்புடன் நினைவு செய்தார், ஆஹா எனது குழந்தைகளே ஆஹா! அருமைக் குழந்தைகளே ஆஹா மேலும் தற்போது கூட பிரம்மாபாபா அவ்யத்த (சூட்சமமாக) ரூபத்தில் சந்தித்துக் கொண்டிருக்கிறார். ஆக அனைவரும் பாப்தாதாவின் பாலனையில் வளர்ந்து கொண்டிருக்கிறீர்கள் அல்லவா? அவ்வப்போது தவற விட்டு விடுகிறீர்களா? ஆக அதன்படி நடந்து கொண்டிருப்பவர்கள்,

கவனம் வைத்துள்ளோர், பிரம்மாபாபா, சிவபாபா இருவரையும் பின்பற்றும் உற்சாகம், ஆர்வம் உள்ளதோ அவர்கள் கை உயர்த்துங்கள் நல்லது. அனேக குழந்தைகள் பிரம்மாபாபாவைப் பார்க்காதிருக்கலாம் ஆனால் இவர் நமது தந்தை என அறிகிறீர்கள் தானே? பிரம்மாபாபாவை நினைவு செய்யும் போது எளிதில் நடைமுறையில் பாலனையின் சக்தி கிடைக்கிறது. அனேகருக்கு கஷ்டமாகவே உள்ளது ஆனால் பிரம்மாபாபா எவ்வளவு துல்லியமாக தனது பாகத்தை நடித்துள்ளார்? அவ்வாறே பாபாவைப் பின்பற்ற வேண்டும். பிரம்மாபாபா கூட எதிர் நோக்கினார், ஆனால் அதில் பாஸாகி விட்டார். உங்கள் அனைவருக்கும் கூட இந்த திட சங்கல்பம் உள்ளது. இறுதி வரை பாகத்தை நடித்து பாஸ் ஆகியே தீர வேண்டும் வெற்றி இருக்கவே இருக்கிறது. ஏற்கனவே உள்ளதா? அல்லது இனிமேல் தான் ஆக வேண்டுமா? வெற்றி எதிரிலேயே உள்ளது. நிச்சயம் தானே! நமது வெற்றியைக் கொண்டாடும் காலமாகுமிது, சங்கமயுகத்தின் விசேஷமும் இதுவே எனவே காலத்தின் அருமையை உணர்ந்து உபயோகித்துக் கொண்டே செல்லுங்கள். பாப்தாதாவைப் பின்பற்றுவது சங்கமயுகத்தின் வரதானமாகும். அனைவரும் வரதானத்தை உபயோகிக்கிறீர்களா? கை உயர்த்துங்கள். பிரம்மாபாபா மற்றும் சிவபாபா பாப்தாதாவின் வரதானம் நடத்திக் கொண்டிருக்கிறது.

இன்று பிரம்மாபாபாவின் நினைவு தினமாகும். ஆக அதிகாலையிலிருந்தே பிரம்மாபாபாவிற்குப் பல ஆண்டுகளாக சாகாரத்தில் (ஸ்தூல வாழ்க்கையில்) பாலனை (வளர்க்கும்) செய்யும் கவனம் இருந்தது நினைவில் வருகிறதல்லவா? பிரம்மாபாபா எவ்வாறு செய்தார்? எவ்வளவு அன்பை நிராகார பாபாவிடமிருந்து பெற்றார், பிறருக்கும் கொடுத்தார்? இன்று பிரம்மாபாபாவை நேரில் பார்த்தவர்கள் ஒரு சிலரே உள்ளனர். அவ்வாறு நேரில் பார்த்தவர்கள் நன்றாக கை உயர்த்துங்கள் நல்லது. இவர்கள் அனைவரும் பெரும் பாலோர் சகோதரிகள்? ஆக இன்று பிரம்மாபாபா விசேஷமாக அனைத்து குழந்தைகளுக்கும் பழையவர்களானாலும் சரி, புதியவர்களானாலும் சரி அனைவருக்கும் உளப்பூர்வமான அன்பினை வழங்கியுள்ளார். எதில் பிரம்மாபாபா வந்துள்ளார், கை உயர்த்துங்கள், அனைவரது உள்ளத்திலும் வந்துள்ளார், ஏனெனில் படத்தையோ அனைவரும் பார்த்துள்ளனர்.

ஆக இன்றைய தினம் பாப்தாதா இருவரின் நினைவு வருகிறது ஆனால் இன்று விசேஷ தினம் காரணமாக யாரெல்லாம் பாலனையைப் பெற்றுள்ளனரோ பிரம்மாபாபாவின் மூலம் அவர்களுக்கு நினைவு அதிகம் வருகிறது. பிரம்மாபாபா கூடவே இருந்தார், நடைமுறை வாழ்வில் பாலனையைப் பெற்றவர்களுக்கு விசேட அன்பினை அவர்களது சிரத்தின் மீது நன்றாக கை வைத்து வழங்கினார், கொடுத்தது என்னவோ அனைவருக்கும் தான், முதலில் அவர்களுக்குக் கொடுத்தார். பிறகு அனைவருக்கும் வழங்கினார். இன்று பிரம்மாபாபாவின் நினைவு தினம் ஆன காரணத்தினால் பிரம்மாபாபாவின் நினைவு விசேஷமாக உங்கள் ஒவ்வொருவருக்கும் வழங்கினார் நல்லது. தற்போது நேரமாகி விட்டது, இன்று யாரை சந்திக்க வேண்டும்.

**இன்று சேவை இந்தூர் மண்டலம் -அங்கு அலௌகீக விடுதியில் வசிக்கும் குமாரிகளும் வந்துள்ளனர், மொத்தம் 7-ஆயிரம் பேர் வந்துள்ளனர்:** மிகவும் நன்று! பெரும்பான்மையாக இந்தூர்காரர்கள் வந்துள்ளனர். இந்தூர்காரர்கள் கை உயர்த்துங்கள். வாழ்த்துக்கள் நல்லது! செய்தியை சூட்சும வதனத்திற்கு எடுத்துச் செல்லும்போது பிரம்மாபாபா குறிப்பாக குழந்தைகளே ஆஹா குழந்தைகளே ஆஹா! என நினைவு செய்கிறார். இந்தூர்காரர்கள் எல்லோரும் புருஷார்த்தத்தில் மிகவும் முனனே உள்ளீர்கள் இல்லையா? எவரும் பின்னாலிருக்க வேண்டாம் பின்னாலிருப்பவர் களது பிராப்தியும் பின்னால் தானே இருக்கும். எனவே சதா நம்பர்-1 எப்போதும் ஒவ்வொரு காரியத்திலும் நம்பர் 1-ல் சென்றே ஆக வேண்டும். இப்போது இந்தூர் மண்டலம் இருக்கலாம் ஆனாலும் அனைத்து மண்டலங்களிலிருந்தும் வந்திருக்கிறீர்கள்தான். ஆக அனைவருக்கும் பிரம்மாபாபாவின் சார்பில் விசேஷ அன்பு நினைவுகள்! இந்தூர்காரர்கள் கை தூக்குங்கள். நன்கு உங்கள் பாகத்தை செய்தீர்கள், சேவையின் பலனை தாங்களும் அடைந்தீர்கள், பிறருக்கும் வழங்கினீர்கள், நன்றாகச் செய்தீர்கள்.

**இரட்டை வெளி நாட்டினர் 400-பேர் வந்துள்ளனர்:** குறிப்பாக இரட்டை வெளிநாட்டினருக்கு இரட்டை அன்பு நினைவுகள் பாப்தாதாவை விஷ்வ கல்யாணியாக பிரபலப்படுத்துவதில் வெளிநாட்டினர்

நிமித்தமாயுள்ளனர். முதலில் பாரத் கல்யாணியாக இருந்தீர்கள். தற்போது விஷ்வ கல்யாணி பெயர் மிகவும் பிரபலம். ஆக வெளிநாட்டினர் அற்புதம் செய்துள்ளனர். பாப்தாதாவும் விசேஷமாக வெளிநாட்டினருக்கு உளப்பூர்வமாக ஆசிகளை வழங்குகிறார். பாபாவை அறிந்து கொண்டு விட்டனர். சேவையும் செய்கின்றனர். வெளி நாட்டு சேவைகளை எப்போதும் கேட்டுக் கொண்டுதானிருக்கிறோம். நல்ல உற்சாகம் ஆர்வத்தோடு முன்னேறிக் கொண்டிருக்கின்றனர். மேலும் முன்னேறுவர் (கை தட்டுங்கள்).

**கல்கத்தா குழுவினர்** மூன்று ஸ்தலங்களிலும் பூவலங்காரம் நன்கு செய்துள்ளனர்: யாரெல்லாம் பூவலங்காரம் செய்தவர்கள் வந்துள்ளனரோ நன்றாக வரட்டும். பாப்தாதா குழந்தைகளைக் கண்டு மிகுந்த மிகிழ்ச்சியடைகிறார். உங்களது வீட்டுக்கு வந்துள்ளீர்கள் இல்லையா? சேவை காரணமாக ஆங்காங்கு பிரிந்துள்ளீர்கள். மற்றபடி அனைவருமே மதுபன் வாசிகள் நல்லது. பாப்தாதாவிற்கு ஒவ்வொரு குழந்தையும் உள்ளத்தில் வீற்றிருக்கிறார்கள். எங்கிருந்தாலும் சரி, உள்நாட்டிலோ வெளி நாட்டிலோ உள்ளத்திற்கு ஓய்வளிக்கும் திலாராமின் உள்ளத்தில் இடம் பிடிக்க வந்துள்ளீர்கள். நல்லது.

**தாதி ஜானகியுடன்:** (லண்டன் செல்கிறார் எனவே மகிழ்ச்சி) சதா குஷியாய் உள்ளீர்கள். பாபாவும் துணையாக இருப்பார்.

**மோகினி சகோதரியுடன்:** குஷியுடனிருப்பதால் குஷியே உங்களை நடத்திச் செல்கிறது. பாபாவின் நினைவுடன் குஷியும் நடத்திச் செல்கிறது.

**பிரிஜ் மோகன் சகோதரருடன்:** (ஓம் சாந்தி ரிட் சென்டர் வாசிகள் மற்றும் மோஹித் சகோதரரின் நினைவை பாபாவிடம் கூறினார்.) அவருக்கும் எமது நினைவைத் தாருங்கள். டோலியும் தாருங்கள்.

**ரமேஷ் சகோதரருடன்:** உடல் சௌகரியம் தானே!

**கோலக் சகோதரருடன்:** நலமா? எப்போதும் நன்றாகவே இருக்க வேண்டும். வேறு எந்த கேள்வியும் கூடாது. (அனைவருக்கும்) அனைவரும் நன்றாகவே இருப்பர்.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 31.01.2014 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## திடீரென்று நடப்பவைகளுக்கு முன்பே சுதாரிப்புடன் இருந்து தன்னை சக்திசாலி ஆக்கிக் கொள்ளுங்கள். குஷியுடன் இருந்து திருப்தியான வாயுமண்டலத்தை உருவாக்குங்கள். கூடவே ஒவ்வொரு ஏரியாவிலும் (செய்தி) கொடுப்பதற்கான காரியத்தை செய்து முடியுங்கள், தற்போது எவரது புகாரும் இருந்து விடக்கூடாது!

இன்றைய சபை சினேகம் மற்றும் நினைவு சொரூபத்தின் ஸ்திதியில் உறுதியாக தென்பட்டுக் கொண்டிருக்கிறது. ஒவ்வொருவரின் மனதிலும் உலக நன்மையின் உற்சாகம், ஆர்வம் நிறைந்திருக்கிறது. எதிரில் இருந்தாலும் சரி, தூரத்தில் இருந்தாலும் சரி ஆனால் முழு பிராமண குடும்பத்தின் உள்ளத்து சிநேகத்தில் நிறைந்திருக்கிறது. இந்த சினேகம் பரமாத்மா மற்றும் ஆத்மாவின் சினேகத்தின் சந்திப்பு பற்றற்றதும் மிகவும் அன்பானதும் ஆகும். இன்று பாப்தாதா நாலா புறங்களில் உள்ள குழந்தைகளை சக்தி வாய்ந்த ரூபத்தில் பார்த்துக் கொண்டிருந்தார். எங்கு சக்தி இருக்கி;ன்றதோ அங்கு வீணானது தாமாகவே முடிந்து போகின்றன. சக்தி நிறைந்த தந்தை மற்றும் சக்தி வாய்ந்த குழந்தை, இந்த சக்தி வாய்ந்த ஆத்மா மற்றும் பரமாத்மா சந்திப்பு மிகவும் அன்பானதும் பற்றற்றதுமானதாகும். மேலும் இந்த சந்திப்பு சங்கமயுகத்தில் மட்டுமே கிடைக்கின்றது. பரமாத்மா மற்றும் ஆத்மாக் களின் இந்த சந்திப்பு கோடியில் ஒரு ஆத்மாவிற்குத் தான் அனுபவம் ஆகிறது. இந்த பரமாத்மா மற்றும் ஆத்மாக்களின் சந்திப்பு கல்பத்தில் இப்பொழுது, சங்கமயுகத்தில் மட்டுமே நடக்கிறது. மேலும்

அந்த சௌபாக்கியசாலி, பன்மடங்கு பாக்கியசாலி ஆத்மாக் களாகிய நீங்கள் எதிரில் சந்திப்பை கொண்டாடிக் கொண்டிருக்கிறீர்கள். அனைவரின் உள்ளத்திலும் தற்சமயம் இந்த சந்திப்பின் பாக்கியம் கிடைக்கிறது. அனைவரின் மனதிலும் எனது பாபா என்னுடையவர் என்கிற உணர்வு எழுகிறது,

பாப்தாதா தற்போது இங்கே இதனை விரும்புகிறார். மேலும் அநேக ஆத்மாக்களுக்கு என்னுடைய பாபா மற்றும் ஆஸ்திக்கு அதிகார உரிமை உள்ளோராக ஆக்குங்கள், இன்று உலகில் துக்கம், அசாந்தி மற்றும் அற்பகால சுகங்கள் பரவிக்கிடக்கின்றன. அந்த ஆத்மாக்களுக்கு நிரந்தரமான சாந்தி, சுகத்தை சிறிதாவது அனுபவம் அவசியம் செய்வியுங்கள். ஏனெனில் இந்த சமயத்தில் மட்டுமே அனுபவம் செய்விக்க முடியும். இந்த சமயத்தில் தான் ஆத்மாக்களை பரமாத்மாவோடு சந்திக்கச் செய்யும் வரதானம் உள்ளது. முழு கல்பத்தில் ஆத்மா பரமாத்மாவின் சந்திப்பு, அறிமுகம், சம்மந்தம் மற்றும் ஆஸ்தி இந்த சமயத்தில் தான் கிடைக்கக்கூடும். ஆக, தற்போது ஒவ்வொரு குழந்தைக்கும் அந்த ஆத்மாக்களின் மீது அவர்கள் உள் நாட்டைச் சார்ந்தவர்களானாலும் சரி. அயல் நாட்டை சார்ந்தவர்களானாலும் சரி, அவர்கள் மீது இரக்கம் வரவேண்டும். எந்த ஏரியாவைச் சார்ந்தவராயினும் சரி எங்களுக்கு அறிமுகம் கிடைக்கவில்லை என்று அவர்களிடமிருந்து புகார் வரக்கூடாது. இதுவே உங்களது விசேஷ சேவையாகும். சேவை என்னவோ நாலா புறங்களிலும் செய்து கொண்டிருக்கிறீர்கள் ஆனால் அருகாமையில் உள்ள இடங்கள் தங்கி விடக் (விடுபட்டுவிடக்கூடாது) கூடாது. அங்கிருந்து புகார் வரக்கூடாது. எங்களது பாபா வந்துள்ளார், ஆனால் எங்களுக்கே தெரியவில்லை! இந்த பொறுப்பு நிமித்தமாய் இருக்கும் குழந்தைகள் உங்களுடையது. எதுவரை முடியுமோ அதுவரை பாபாவின் செய்தியைக் கட்டாயம் கொடுங்கள். எந்த ஏரியா அவ்வாறு கொடுக்கப்படாமல் உள்ளது என்று குறிப்பெடுங்கள். எங்களுக்குத் தெரியாமல் போய் விட்டதே என்ற புகார் எழக்கூடாது. கொடுக்க வேண்டியது உங்கள் பொறுப்பு. அவர்கள் அறிந்தாலும் சரி, அறியாவிட்டாலும் சரி அவருக்கு தெரியட்டும்.

ஆகையினால் ஒவ்வொருவரும் உங்களது பகுதியின் அக்கம் பக்கத்தில் செய்தி கிடைக்காமல் எவரேனும் உள்ளனரா என்று சோதியுங்கள். அவர்களது பாக்கியம் அவர்களுடையதாகும் ஆனால் செய்தியை கொடுக்க வேண்டியது பாக்கியவான் ஆத்மாக்களாகிய உங்கள் கடமை ஆகும் அது சிறிய கிராமமாக இருந்தாலும் சரி, பெரிய நகரமாக இருந்தாலும் சரி செய்தியைக் கொடுக்க வேண்டியது பாக்கியவான் ஆத்மாக்களின் கடமையாகும். நமது பகுதியில் செய்தி சேர்ந்துள்ளதா என்று சோதனை செய்யுங்கள். எந்த பகுதியின் புகாரும் இருந்து விடக்கூடாது. ஏனெனில் பெரும்பாலும் முக்கிய நகரங்களில் சென்று சேர்த்துள்ளீர்கள் ஆனால் மீண்டும் சோதனை செய்துப் பாருங்கள். எந்தவொரு பகுதியிலிருந்தும் எமது பாபா வந்துள்ளார் எங்களுக்குக் கூறவில்லையே என்கிற புகார் வந்து விடக்கூடாது. சோதனை செய்கிறீர்கள் தான், பாப்தாதாவும் பார்க்கிறார். பிறகும் அவரவர்கள் பகுதியில் எவ்வளவு முடியுமோ எங்கு யாரும் செல்லவில்லையோ அங்கு செய்தியைக் கொடுக்க வேண்டியது உங்களது கடமை ஆகும்.

சிறிய பகுதியானலும் சரி அது உங்கள் பகுதிக்கு அருகாமையில் இருந்தால் குறித்து வைத்துக்கொள்ளுங்கள். சிறிய பகுதியானாலும் சரி, அவர்கள் கூட உங்கள் மீது புகார் சொல்ல முடியும். எமது பாபா வந்துள்ளார் எங்களுக்குத் தெரியாமல் போனது எமது பாபா என்கிறார்கள். ஏனெனில் அனைவருடைய தந்தை அல்லவா! ஆக நீங்கள் ஏன் கூறவில்லை எனவே சோதனை செய்யுங்கள். உங்கள் பகுதியில் நாலா புறமும் செய்தியைக் கூறி உள்ளீர்களா அப்போது தான் உங்கள் பொறுப்பு நிறைவு பெறுகிறது. இது ஒரு சிறிய பகுதி. ஆனாலும் அவர்களும் பாபாவின் குழந்தைகள் தானே நமது அனைவரின் தந்தை வந்துள்ளார் என்பதை குறைந்தபட்சம் யாரையாவது அனுப்பியாவது கூறுங்கள். சிறிய ஏரியாவாக இருந்தால் யாராவது சிறியவர்களையாவது அனுப்பி வையுங்கள் ஆனால் அவர்கள் பாபாவைத் தெரியாமல் போய் விடக்கூடாது. ஏனெனில் இறுதி நேரம் திடீரென வரும், சொல்லிக் கொண்டு வராது. உங்களது நாலா புறமும் செய்தியைக் கொடுக்கும் கடமையை அவசியம் பாருங்கள். ஒருவேளை உங்களது ஏரியாவில் சேவை ஏதுமில்லையென்றால் பக்கத்து பகுதியில் உள்ளவரை அந்த சேவைக்கு நிமித்தமாக்குங்கள். எந்த ஆத்மாவிற்கும் கிடைக்காமல் போய் விடக் கூடாது. செய்தி கிடைக்க

வேண்டும். மற்றபடி அவர்களது பாக்கியம் ஆக ஒவ்வொரு வரும் தங்களது ஏரியாக்களை சோதனை செய்ய வேண்டும். அது சிறிய சந்தாக இருந்தாலும் சரி, மக்கள் சாதாரணமானவர்களாக இருந்தாலும் சரி, ஆனால் குழந்தைகள் தானே. பாபா வந்துள்ளார் என்பது அவர்களுக்குத் தெரிய வேண்டும். எந்த முறையில் செய்தாலும் சரி, எங்களுக்குத் தெரியாமல் போய் விட்டதே என்ற குறை இருக்கக்கூடாது. இது உங்களது கடமையாகும். ஏனெனில் எந்த சூழ்நிலையும் எந்தச் சமயத்திலும் திடீரென வரக்கூடும். அதற்கு முன் உங்களது கடமையை செய்து முடியுங்கள். எங்களுக்குத் தெரியாமல் போய் விட்டது என்ற புகார் இருந்து விடக்கூடாது. யாரையாவது அனுப்பி வையுங்கள். எந்த பகுதிக்காவது எவராவது அருகாமையில் இருக்கலாமலைலவா? ஏனெனில் திடீரென்று ஏதேனும் கலகம் ஆரம்பித்து விடலாம் ஏதேனும் இன்னும் பாக்கி இல்லையே என சோதனை செய்வது உங்களது கடமையாகும். பிறரது பகுதி ஆனாலும் சரி என்ன செய்யலாமென்று வழி கேளுங்கள். கேட்காமல் செய்து விடாதீர்கள். வழி கேட்டு செய்து முடியுங்கள். ஏனெனில் திடீரென எதுவும் நடக்கலாம். எனவே இன்று பாப்தாதா உள்நாடு மற்றும் வெளிநாட்டுக் குழந்தைகள் அனைவருக்கும் ஜாடைமாடையாகக் கூறுகிறார், உங்களது பகுதியை சோதனைச் செய்யுங்கள், பெரியவர்களிடம் வழி கேட்டு காரியங்களைச் செய்வியுங்கள் ஆனால் செய்யாமல் இருந்து விடக்கூடாது. மீட்டிங் போடுகிறீர்கள் இல்லையா? அப்போது ஒருவர் பிறரோடு கலந்து பேசி செய்யலாம். நேரம் திடீரென வரலாம் என்றே பாப்தாதா கூறுகிறார். எனவே செய்து விடுவோம். நல்லபடியாக நடக்கும் என்று சொல்லிக் கொண்டு இருப்பதே சிலரது சம்ஸ்காரமாக உள்ளது. காரியத்தில் வருவதில்லை. இதனை பாபா அனைவருக்கும் நினைவூட்டுகிறார். உங்களது பகுதியை சோதனைச் செய்யுங்கள். வேறு யாராவது செய்ய விரும்பினால் அவர்கள் மூலமாவது செய்வியுங்கள். ஏனெனில் காலத்தின் மீது எந்த நம்பிக்கையுமில்லை. சிறுசிறு விஷயங்களில் திடீர் திடீரென நடந்து விடுகின்றன. நீங்கள் உங்கள் பகுதியைப் பார்த்துக் கொள்ளுங்கள். அக்கம்பக்கத்தில் உங்களது பகுதி எவ்வளவு உள்ளதோ அங்கு செய்தி தரப்படாமல் இருந்து விடவில்லையே! புகார் வந்து விடாத அளவுக்கு கவனமாய்ப் பாருங்கள்.

மற்றபடி நீங்கள் அனைவரும் பாபாவின் செல்லக் குழந்தைகள் பாபாவின் உடையவர்கள் ஆகி விட்டீர்கள். அவர்களும் எவ்வளவு செல்லமானவர்கள். பாப்தாதாவும் கூட அருமையான குழந்தைகளைப் பார்த்து குஷி அடைகின்றார். ஆஹா குழந்தைகளே ஆஹா புருஷார்த்தம் செய்வதில் களைத்துப் போய் விடாதீர்கள். ஏதேனும் சிறிய பெரிய விஷயங்கள் வருகிறது என்று சொன்னால் உதவியைக் கேட்டுப் பெறுங்கள். எவரிடமிருந்தும் உதவி கேட்க வேண்டாம் என்றால் யோக பலத்தின் மூலம் சோதனை செய்து அதற்கு ஏதேனும் உதவியைக் கேளுங்கள்.

எனது பகுதியில் செய்தி கிடைக்கவில்லை என்று எவரேனும் இருந்து விடவில்லையே என்று ஒவ்வொருவரும் சோதிக்க வேண்டும். ஏன் பாப்தாதா இவ்வாறு கூறுகிறார் என்று நீங்கள் நினைக்கலாம். ஏனெனில் பாப்தாதா பார்க்கிறார். அனேக குழந்தைகளினுடைய அவர்களது பொறுப்பிலுள்ள பக்கத்து பகுதியில் கூட முழுமையாக செய்தி தரப்படவில்லை. எனவே பாப்தாதா ஞாபகப்படுத்திக் கொண்டிருக்கிறார். ஏதேனும் காரணத்தால் அப்பகுதியில் செய்தி தரப்படாமல் தங்கி விட்டது. எனவே அதற்குத் தீர்வு கண்டு செய்தியை அவசியம் தாருங்கள். இன்று பாபா ஜாடைமாடையாகக் கூறுகிறார். ஏதேனும் புகார் இருந்து விடவேண்டாம். எனவே உங்களது பகுதியை சோதிக்க வேண்டும். சேவை செய்வோர் தேவையெனில், உங்கள் மண்டல தலைமையகத்திற்குக் கூறுங்கள். அவர்கள் உதவி செய்யட்டும். ஆக இன்று பாப்தாதா சேவைக்கான சைகை செய்கிறார். சேவையின் கூடவே வேறு என்ன சமிக்ஞை செய்கிறார்? தன்னை சம்பன்னமாக்குவதற்கு! தன்னை கவனிக்க நேரமே இல்லாது அந்த அளவு சேவையில் மூழ்கிப் போய் விடலாகாது. சுயம் தன்னையும் பாருங்கள், நேரத்தையும் பாருங்கள். மற்றபடி எல்லோரும் குஷியாக நிறைந்திருக்கிறீர்களா? குஷியாக இல்லையெனில், யார் மீது பாவனை, நம்பிக்கை உள்ளதோ அவர்களிடமிருந்து யோக பலத்தைப் பெறுங்கள். ஏனெனில் பாப்தாதா அறிவார். சிறுசிறு விஷயங்கள் எப்போது வேண்டுமானாலும் வரலாம். எனவே தன்னை விழிப்புடன் கவனமாய் வைத்திருங்கள், நமது இஷ்டமே யார் எவ்வளவு தான் கூறினாலும் தான் தன்னை கவனமாய் வைக்க வேண்டும்.

ஆக இன்று பாப்தாதா சேவை மற்றும் சுயம் தன்னை எவரெடியாக இருக்க நினைவூட்டுகிறார். திருப்தியின் சூழ்நிலையே எங்கும் நிலவ வேண்டும். ஏதேனும் அதிருப்தி ஏற்பட்டால், சிறிது பெரிதாய் ஏதேனும் நடக்கத் தான் செய்யும், அதற்கு தன்னை சக்திசாலியாக நிச்சயம் ஆக்கிக் கொள்ள வேண்டும். திடீரென நடப்வைகளுக்காகத் தயாராக இருங்கள் என இன்று பாப்தாதா சமிக்ஞை செய்கிறார். இது தெரியாதே என்று கூற வேண்டாம். நடக்கும், திடீரென நடக்கும்! உங்கள் அனைவரது மனமும் அப்போதுதான் லேசாகும். எனவே தான் பாப்தாதா உங்களை சோதியுங்கள் என நினைவூட்டுகிறார். பாபா சமமாய் ஆக வேண்டும் என பாபா விரும்புகிறார். புரிந்து கொள்வதில் அனைவருமே புத்திசாலிகள் தான்! ஆனால் பாபா விரும்புவது எண்ணம், சொல், செயல் சம்பந்தம் தொடர்பு இந்த அனைத்து விஷயங்களிலும், ஏதேனும் திடீரென நடந்தால் அதனை எதிர்கொள்ள முடியுமளவு உங்கள் ஸ்திதி உள்ளதா? இதைத்தான் பாப்தாதா விரும்புகிறார். ஆக சக்திசாலியான ஆத்மா சதா விழிப்புடனிருக்க வேண்டும். எப்போதும் தீவிர முயற்சியிலிருக்க வேண்டும். சுய மாற்றம் மற்றும் நாலா புறமும் மாற்றத்தில் உதவியாளர்கள் ஆக இவ்விரண்டையும் சோதிக்க வேண்டும்.

மற்றபடி அனைவரும் ஓ.கே.தானே? கை உயர்த்துங்கள். ஓ.கே. தானே? பாப்தாதா முன்னாலிருப்போரின் கைகளைப் பார்க்கிறார். பின்னாலிருப்போரின் கை தெரியவில்லையே தற்போது பின்னாலிருப்போர் கை உயர்த்துங்கள். நல்லது. அனைவருமே பாப்தாதாவின் உள்ளம் நிறைந்த அன்பு நினைவுகளைப் பெற்றுக்கொள்ளுங்கள். எங்களுக்கு பாபாவின் அன்பே தெரியாதே என்று எவரும் நினைக்க கூடாது. அப்படி யாராவது இருக்கிறீர்களா? இல்லை தானே! தெரியும் தானே பரமாத்ம அன்பு என்றால் என்னவென்று தெரியுமா? தெரியும் என்போர் கை உயர்த்துங்கள். பெரும்பலோர் உயர்த்திவிட்டனர். யாரேனும் அவ்வாறு உயர்த்தவில்லையெனில், கை உயர்த்த வெட்கமாக உள்ளது. இந்த தடை உள்ளது. ஏதேனும் இடையூறு உள்ளது என்றால் உங்களது தாதியிடம் அல்லது உங்களுக்கு நம்பிக்கையாய் உள்ள பெரிய தாதியிடமோ கூறி விடுங்கள். உள்ளேயே வைத்திராதீர்கள். ஏதேனும் சிகிச்சை பெற வேண்டும். ஏனெனில், நடப்பது திடீரென நடக்கும். அந்த

சமயத்தில் புருஷார்த்தம் செய்ய முடியாது. இப்போதே சோதியுங்கள். ஏதேனும் திடீரென நடந்தாலும், தன்னைக் காத்துக் கொள்ள அவ்வளவு சக்தியுள்ளதா? வாயுமண்டலத்தில் இந்த பிரபாவத்தை ஏற்படுத்துங்கள். பிறருக்கும் உதவியாளர்கள் ஆக வேண்டும். இதனை சோதிக்க வேண்டும். அனைவரும் புரிந்து கொண்டீர்கள்தானே, புரிந்ததா? புத்திசாலிகளோ அனைவரும் தான் அப்படியில்லை பாப்தாதாவிறகுப் பிடித்துள்ளது. அவ்வாறு கூறுவதில்லை. புரிந்து கொள்வோர்தான் ஆனால் அவ்வப்போது சற்று அதிகமாக நேரத்தை எடுத்துக் கொள்கின்றனர்.

நல்லது. நாலா பக்கங்களிலும் தூரமாக இருப்பவர்களுக்கும். அருகாமையிலிருப்பவர்களுக்கும் யார் தங்கள் மீது கவனம் வைக்கிறார்களோ அவர்களுக்கு மிக அதிக நல்வாழ்த்துக்கள். ஏமாற்றப்பட்டு விடக்கூடாது. கவனமாக இருங்கள். கவனம் கொடுக்கிறீர்கள். மேலும் கொடுத்துக் கொண்டே இருக்க வேண்டும். அதாவது உதவி தேவைப்பட்டால் நிமித்தமாயிருப்பவர்களிடமிருந்து பெற முடியும். யாரை அணுகுவது என்பதல்ல. நிமித்தமாக யார் இருக்கிறார்கள் என்று தெரியுமல்லவா? தாதிகள் இருக்கிறார்கள் அல்லவா! தாதாக்கள், (பெரிய சகோதரர்கள்) தாதிகள் இருக்கிறார்கள். எந்த ஒரு தவறையும் தங்களிடம் வைத்துக் கொள்ளாதீர்கள். ஒருவேளை தவறு நடந்து விட்டதென்றாலும் பாப்தாதாவிடம் தவறை உணர்ந்து பச்சாதாப்படுவதன் மூலம் முடித்து விடவேண்டும். சேமித்து வைக்கக்கூடாது. பாப்தாதா ஒவ்வொருவருடைய கணக்கையும் பார்த்தாரானால் அது எப்படி இருக்க வேண்டும்? ஓ.கே. வெரி குட் (மிக நல்லது) அப்படியிருக்கிறதா? நல்லது. இதில் கை உயர்த்துங்கள். எல்லோருமே கை உயர்த்துகிறார்கள். பாருங்கள். தாதி வாருங்கள். வந்து கை உயர்த்தியிருப்பதைப் பாருங்கள். கை உயர்த்துங்கள். எல்லோரும் நல்லப்படியாக இருக்கிறீர்களா? நன்றாக இருக்கிறார்கள். ஆம். தாதி வாருங்கள். தாதியை அழைத்து வாருங்கள். இன்று மோகினி வரவில்லையா? நல்லது. வந்திருக்கிறீர்கள்.

சேவை பஞ்சாப் மண்டலம், 8000-பேர் வந்திருக்கிறார்கள்: பஞ்சாப்காரர்களுக்கு வரதானம் இருக்கிறது. ஆரம்பத்தில் அமிருதசரஸில் சென்டர் திறக்கப்பட்டது. குருமார்கள் நிறைய பேர்

இருந்தனர். பஞ்சாப்காரர்கள் எல்லோர் மீதும் வெற்றி யடைந்தார்கள். சென்டர் நிர்விக்னமாக நடக்க சம்மதித்தார்கள். இதற்காக பாப்தாதா பஞ்சாப்காரர்களுக்கு நன்றியைத் தெரிவிக்கின்றார். குருமார்களின் இடத்தில் சத்குரு வெற்றியடைந்து காட்டினார்கள். நன்றாகச் செய்தார்கள். குருமார்களின் ஆசனத்திற்கிடையே பிரம்மா குமாரிகளின் சென்டர் நிலையாக இருந்தது. மேலும் நிர்விக்னமாகவும் நடந்தது. நிர்விக்னமாக நடந்ததல்லவா? பாஞ்சாப்பிலிருந்து வந்திருக்கும் டீச்சர்கள் கை உயர்த்துங்கள். நல்லது. முயற்சி நன்றாகச் செய்தீர்கள். மேலும் இப்போதும் கூட பஞ்சாப் சேவையில் வந்திருக்கிறீர்கள் அல்லவா?

மோகினி சகோதரி: நன்றாக இருக்கிறீர்களா? (பாபா தங்களுடைய வரதானத்தால் நான் நன்றாக இருக்கிறேன்) வாழ்த்துக்கள். சுகமாக இருக்கிறீர்கள். மேலும் சுகமாகவே இருப்பீர்கள். என்ன வேண்டுமானாலும் நடக்கட்டும். பாபா மேரா பாபா (என்னுடைய பாபா) இது தான் மருந்து சுகமாக இருப்பீர்கள். பரவாயில்லை.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 14.02.2014 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## பரமாத்ம அன்பிற்குத் தகுதியுள்ள குழந்தைகள் அன்பைக் கொடுத்து மற்றும் எடுத்துக் கொண்டே தந்தையைப் பின்பற்றி தானும் தடைகளற்றவராகுங்கள் மற்றும் தனது தொடர்பில் வருபவர்களையும், உடனிருப்பவர்களையும் தடைகளற்றவராக்குங்கள்!

இன்று அன்புக் கடலான தந்தை, நாலா புறமுள்ள ஒவ்வொரு குழந்தைகளுக்கும் மிக மிக மிக அன்பினைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார். இந்த பரமாத்ம அன்பானது முழு கல்பத்திலும் இப்போது சங்கமயுகத்தில் தான் பிராப்தி ஆகிறது உலகிலுள்ளவர்கள் இன்றைய தினத்தை அன்பின் தினம் என்று கூறுகிறார்கள் ஆனால் குழந்தைகள் உங்களுக்காக சங்கமயுகத்தின் ஒவ்வொரு நாளும் பாபாவின் அன்பை அடைவதற்கானது இன்றைய தினத்தின் (நினைவுச்சின்னம்) அடையாளப்படி பாப்தாதாவிற்கு எதிரில் குழந்தைகள் நீங்கள் இருக்கிறீர்கள் ஆனால் பாப்தாதாவின் உள்ளத்தில் நாலா புறமுள்ள குழந்தைகள், அதாவது வெளி நாட்டில் இருக்கலாம், அல்லது கிராமத்தில் இருக்கலாம், ஆனால் ஒவ்வொரு குழந்தையும் பாபாவின் உள்ளத்திற்கு செல்லமானவர்கள். அவ்வாறே இந்த சங்கமயுகத்தில் தான் பரமாத்மாவின் அன்பிற்கு தகுதியுள்ளவராக இருக்கிறீர்கள ஆனால் இன்று விசேஷமாக இன்றைய உலகக் கணக்கின்படி அன்பின் தினமாகும். அதனால் பாப்தாதாவும் நாலா புறமுள்ள ஒவ்வொரு குழந்தைக்கும் எல்லையற்ற அன்பை சதா ஊக்கம், உற்சாகத்தில் பறக்கக்கூடிய அன்பை ஒவ்வொரு

குழந்தைக்கும், அன்பிற்குத் தகுதியுடைய குழந்தைகளுக்கு ஒவ்வொரு குழந்தையையும் முன்னால் கொண்டு வந்து கொடுத்துக் கொண்டிருக்கிறார். நீங்களோ முன்னால் இருக்கிறீர்கள் ஆனால் பாப்தாதாவிற்கு முன்பு நாலா புறமுள்ள குழந்தைகள், அன்பிற்குத் தகுதியுள்ள குழந்தைகள் அன்பைக் கொடுத்துக் கொண்டும், எடுத்துக் கொண்டும் இருக்கிறார்கள். அதைத்தான் இன்றைய தினத்தைக் கொண்டாடுவதற்குக் காரணமாகக் கூறுகிறார்கள் ஆனால் ஒவ்வொரு குழந்தையும் ஒவ்வொரு சங்கமயுக நேரத்தில் பரமாத்ம அன்பிற்குத் தகுதியுடையவர் ஆவார்கள். இந்த அன்பிற்குரிய ஆத்மாக்கள், பாப்தாதாவிற்குப் மிகப் பிரியமான பாபாவின் செல்லக் குழந்தைகளாக இருக்கின்றனர். இந்த பரமாத்ம அன்பானது சங்கமயுகத்தின் ஒரு பிறவியில் மட்டும் தான் கிடைக்கிறது. இந்த அன்பு அனேக பிறவிகளின் துக்கம், வலியை அழித்து சதா குஷி என்ற டானிக்கை ஊட்டக் கூடியதாக இருக்கிறது. ஒவ்வொரு குழந்தையும் பரமாத்ம அன்பிற்கு உரிமையுள்ள ஆத்மாக்கள் ஆவர். இன்றைய தினம் பாப்தாதா ஒவ்வொரு குழந்தைகளின் உள்ளத்தின் அன்பை எடுத்துக் கொண்டும், கொடுத்துக் கொண்டும் இருக்கிறார். நீங்கள் அனைவரும் அன்பின் சொரூப ஆத்மாவாகி தனது சொரூபத்தைக் காட்டிக் கொண்டிருக்கிறீர்கள். ஒவ்வொரு குழந்தைகளின் கண்களில், நெற்றியில் பரமாத்ம அன்பு நிறைந்திருக்கிறது இப்போது உங்கள் ஒவ்வொருவருக்கும் மற்ற சகோதர சகோதரிகளை பரமாத்ம அன்பிற்குரியவராக ஆக்குவதற்கான ஊக்கம் உற்சாகம் சதா உள்ளத்தில் இருக்கிறது.

பாபாவிற்குச் சமமாக ஆகியேத் தீர வேண்டும் என்ற ஊக்கம் உற்சாகம் ஒவ்வொரு குழந்தையின் மனதில் இருப்பதை பாப்தாதா இன்று பார்த்துக் கொண்டிருக்கிறார். தந்தையைப் பின்பற்றக் கூடியவர்கள் தானே! எவ்வாறு பாபாவிற்கு ஒவ்வொரு குழந்தையிடத்தும் முயற்சியில் வரிசைக்கிரமம் இருந்தாலும் கூட பாபாவின் அன்பு சதா இருக்கிறது. ஒவ்வொரு குழந்தைக்கும் அமிர்தவேளை பாப்தாதா விசேஷமாக நாலா புறமும் அன்பு நினைவுகளையும், சக்திகளையும் வரதானமாகக் கொடுத்துக் கொண்டிருக்கிறார். அவ்வாறு பிரபுவிற்குரியவராவது குழந்தைகளின் பாக்கியமாகும். இப்போது பாப்தாதாவிற்கு வேறு சங்கல்பம் இருக்கிறது. சொல்லட்டுமா?

சொல்லட்டுமா? சொன்னால் நீங்கள் செய்ய வேண்டியது இருக்கும்! செய்யக் கூடியவர்கள் கையை உயர்த்துங்கள். தைரியமோ நன்றாக இருக்கிறது. பாப்தாதா மகிழ்ச்சி அடைகின்றார். மேலும் தைரியம் வைக்கும் குழந்தைகளுக்கு பாப்தாதாவின் உதவியும் உள்ளது. இப்போது இந்த அதிசயத்தை செய்து காட்டுங்கள் -ஒவ்வொரு குழந்தையும் தடைகளற்றவராகி பாபாவிற்குச் சமமாக ஆக வேண்டும். இலட்சியமோ அனைவருக்கும் இருக்கிறது ஆனால் நடு நடுவே சில தடைகள் தளர்வடையச் செய்து விடுகிறது. இப்போது பாபா இதையே விரும்புகிறார். அதாவது ஒவ்வொருவரும் தனக்கு லட்சியத்தை வைத்து தடைகளற்றவராக, மனதால், சொல்லால், சம்பந்தம் மற்றும் தொடர்பில் தடைகளற்றவராக சதா பாபாவிற்குச் சமமாகி பிறரையும் ஊக்கம் உற்சாகத்தில் கொண்டு வந்து அவர்களுக்கு உதவியாளராகி அவர்களையும் கூட தடைகளற்றவராக ஆக்க வேண்டும். ஒவ்வொருவரும் தனது சேவை நிலையத்தை நிர்விக்னமாக்கி அனைவரது ஆசீர்வாதங்களையும் எடுக்க வேண்டும். ஒவ்வொரு சேவை நிலையம் அல்லது ஒவ்வொருவரும் எங்கு இருக்கிறீர்களோ, வீட்டிலோ, சென்டரிலோ ஆனால் இந்த திட சங்கல்பம் செய்யுங்கள் மற்றும் செய்து காட்டுங்கள் -நான் நிர்விக்னமாக இருக்கிறேன், உடன் இருப்போரையும் நிர்விக்னமாக்கக்கூடிய சேவை செய்வேன். குறைந்ததிலும் குறைந்தது ஒவ்வொரு சென்டரும் தனது உடனிருப்போருக்கு உதவியாளராகி, நிர்விக்னமாக்கக்கூடிய சேவையில் வெற்றியடைய வேண்டும். பாப்தாதா இப்போது சேவா கேந்திரமாகட்டும், தனக்காகட்டும், எங்கே வேண்டுமானாலும் இருக்கலாம், தன்னை நிர்விக்னமாக்கி எண்ணத்தளவில் கூட வீணானது முடிந்து விட்டது; அம்மாதிரி ஆக வேண்டும், ஆக்க வேண்டும். இது முடியுமா?

எனவே இன்றிலிருந்து பாருங்கள். அனைவரும் கை உயர்த்துகின்றனர். பின்னால் இருப்பவர்கள் கையை அசையுங்கள் நல்லது. அதனால் இன்றிலிருந்து தன்னை நிர்விக்னமாக்கி மேலும் எங்கு இருக்கின்றீர்களோ, அந்த இடத்தை, உடன் இருப்பவர்களை நிர்விக்னமாக்குவோம் (தடைகளற்றவர்களாக) என்ற இந்த திட சங்கல்பம் செய்கிறீர்களா இப்போதிருந்து? உடன் இருப்போரையும் ஆக்க முடியுமா? இதில் கையை உயர்த்துங்கள். யோசித்து யோசித்து

கையை உயர்த்துகின்றனர். எப்போது உங்களை உலகை மாற்றக்கூடியவர்கள் என்று சொல்லிக் கொள்கிறீர்களோ அப்போது உலகை மாற்றுவதற்கு முன்பு எங்கு இருக்கின்றீர் களோ அந்த இடத்தையும் நிர்விக்னம் (தடைகள் இல்லா) ஆக்குவீர்கள் தானே! லட்சியம் வையுங்கள். எப்படி தன்னை நிர்விக்னமாக்கி இருக்கிறீர்களோ, எண்ணத்தில் வெற்றி இருக்கிறதோ அப்படி உடன் இருப்போரையும், வாயுமண்டலத்தையும் கூட ஆக்குவீர்களோ அப்போது தான் தனது இராஜ்யம் வரும் அல்லவா! அதனால் இப்போது இன்றைய தினம் பாப்தாதா இந்த காரியத்தைக் கொடுக்கிறார் அதாவது தாங்கள் ஆகியிருக்கிறீர்கள். பாப்தாதாவிற்கு மகிழ்ச்சியே ஆனால் உடன் இருப்போரையும் நிர்விக்னம் ஆக்க வேண்டும் ஏனெனில் தனது இராஜ்யம் ஸ்தாபனை ஆகிறது அல்லவா! அதனால் இராஜ்யத்தில் அனைவரும் இருப்பார்கள் தானே! எனவே சங்கல்பம் செய்யுங்கள், உடனிருப்பவர்களிடமிருந்து எவ்வளவு முடியும் உதவி பெறுங்கள். உதவி பெற்றாவது ஆக்க வேண்டும். இந்த சங்கல்பம் செய்ய முடியும் தானே? செய்ய முடியுமெனில் கை உயர்த்துங்கள். கையோ அனைவரும் உயர்த்துகிறீர்கள். மிக நல்லது நல்லது தைரியம் உள்ளது. எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம், தனது வாயுமண்டலத்தை எதுவரை உங்களது பகுதி மண்டலம் உள்ளதோ, (அதுவரை அங்குள்ள) ஒவ்வொருவரும் நிர்விக்னமாக இருக்கும் அளவிற்கு உங்களது வாயுமண்டலம் அவ்வளவு சக்திசாலியாக இருக்க வேண்டும் (powerful). இது முடியுமா? முடியுமா? யார் முடியும் என நினைக்கிறீர்களோ அவர்கள் கை உயர்த்துங்கள். பின்னால் இருப்பவர்கள் கை உயர்த்திக் கொண்டிருக்கிறீர்கள், அவ்வாறே செய்யுங்கள்! கையை உயர்த்தியோ குஷியாக்கி விட்டீர்கள், வாழ்த்துக்கள்! நல்லது சங்கல்பம் செய்தீர்கள் அல்லவா, செய்ய வேண்டும். ஏன்? தன்னுடன் இருப்பவர்கள் அல்லது தொடர்பில் இருப்பவர்கள், அவர்களையும் உடன் இருப்பவர்களாக்க (சாத்தி) வேண்டும் அல்லவா? வரிசைக்கிரமமாக ஆவீர்கள் தான், இது பாபாவுக்கும் தெரியும் ஆனாலும் வித்தியாசம் தெரியும் தானே! அதனால் இன்றிலிருந்து விசேஷமான எண்ணத்தை எழுப்புங்கள் அதாவது தனது தொடர்பில், அருகாமையில் உள்ளவர்களையும் கூட நிர்விக்னமாக்க வேண்டும். ஆக்க முடியுமா? ஆக்க முடியுமா? ஆக்குவீர்களா? முதல் வரிசை கை உயர்த்தவில்லை. தனது இராஜ்யத்தையோ கொண்டு வர வேண்டும் தானே! அதனால்

இராஜ்யத்தில் உடன் இருப்போரையும் அழைத்துச் செல்ல வேண்டும் அல்லவா! அவர்களை விட்டுவிடு வீர்களா? ஒருவருக்கொருவர் துணையாகி லட்சியம் வைத்தீர்கள் என்றால் தைரியம் உங்களுடையது உதவி பாபாவுடையது. இது முடியுமா? முடியுமென்றால் கை உயர்த்துங்கள். கையோ அனைவரும் நன்றாக உயர்த்துகிறீர்கள். கை உயர்த்தி பாப்தாதாவை குஷிப்படுத்துகிறீர்கள்.

எனவே பாப்தாதா நேரம் (time) கொடுக்கிறார், தனது தொடர்பில் வரக் கூடியவர் களை தனக்கு சமமாக துணைவர்களாக்குங்கள் (சாத்தி). நாலா புறமுள்ள பிராமணர்கள். சதா நிர்விக்னமாக ஆக முடியுமா அல்லது கடினமா? முடியும் என யார் நினைக் கிறீர்களோ அவர்கள் கை உயர்த்துங்கள் நல்லது. இந்த முதல் வரிசை முடியுமா? அடுத்த சீஸன் வரை நேரம் கொடுக்க வேண்டுமா ?அல்லது இப்போதேவா? இப்போதே முடியுமா? உடன் இருப்பவர்களை தனக்குச் சமமாக ஆக்க வேண்டும். வரிசைக்கிரமமாக இருப்பார்கள் ஆனால் அவர்களை எந்த ஒரு தடை ரூபமாகவும் ஆகி விடாத அளவிற்கேனும் ஆக்குங்கள். இது முடியுமா? விக்ன ரூபம் ஆகாதவாறு? முதல் வரிசை முடியுமா? முன்னால் உள்ளவர்கள்? நல்லது தைரியம் நன்றாக உள்ளது. எனவே அடுத்த சீஸனில் வரும்போது இந்த நல்ல செய்தியை கேட்போம். இதைக் கொண்டு வருவோம். நாம் முயற்சி செய்து கொஞ்சம் கடின உழைப்பு கூட செய்ய வேண்டியது வரும் ஆனாலும் கூட இருப்பவர்களை, அக்கம் பக்கத்தில் உள்ளவர்களை நிர்விக்னம் ஆக்குவோம் என்று நினைப்பவர்கள் கை உயர்த்துங்கள். கையோ மிக நன்றாக உயர்த்துகிறீர்கள், சபாஷ் சபாஷ்! இப்போது பாப்தாதா ஒவ்வொரு மாதமும் ரிசல்ட் (முடிவு) பார்ப்பார். முடியுமா? முடியுமா? முதல்வரிசை கை உயர்த்தவில்லை! ஏனெனில் அனைவரும் நிமித்தமாகியிருக்கிறீர்கள் அல்லவா! அதனால் நிமித்தமானவர்களுக்கோ கவனம் கொடுக்க வேண்டியிருக்கும். நல்லது, தைரியம் உங்களுடையது, உதவி பாபாவுடையது.

எனவே இப்போது பாபாவிற்குச் செய்து காட்டுவீர்கள் தானே? பாப்தாதா பார்ப்பார். பாப்தாதா, யார் நடைமுறையில், கூட இருப்பவர்களை அவ்வாறு நிர்விக்னமாக ஆக்குகிறார்களோ, அவர்களுக்கு பரிசு (gift) கொடுப்பார் ஆனால் நீங்கள் சொன்னீர்கள் என்றால் சிறிது

விசாரணையும் (enquiry) செய்வார். இதற்குத் தயாரா? முதல் வரிசை நல்லது. தைரியம் வைப்பவர்களுக்கு பாபாவுடைய உதவி இருக்கிறது மேலும் கிடைத்துக் கொண்டே இருக்கும். நல்லது.

இன்றைய தினம் அன்பின் தினம் ஆகும். எனவே அன்பில் அனைத்தும் எளிதாகி விடுகிறது அதனால் எப்படி நீங்கள் அனைவரும் தைரியம் வைத்தீர்களோ அதேபோல் உதவியும் பாபா செய்வார், உடன் இருப்போரும் உதவி செய்வார்கள். அதனால் நடைமுறையில் தென்படும் மாற்றம் ஆக வேண்டும் தானே! என்னவெல்லாம் சிறிய, பெரிய விஷயங்கள் இருக்கிறது அல்லவா, அவைகளை நீங்களே மாற்றம் செய்துவிடுங்கள். சொல்ல வேண்டியதில்லை. எதைச் செய்ய வேண்டும் எதைச் செய்யக் கூடாது என்று தெரிந்த புத்திசாலி நீங்கள், அதனால் என்ன செய்யக் கூடாதோ, அதை செய்யாதீர்கள், அவ்வளவு தான்.

பாப்தாதா இப்பொழுது உலகத்தை மாற்றுபவர் ஆவதற்காக ஒவ்வொருவரையும் நிர்விக்னமாக வேண்டும் மற்றும் உடன் இருப்பவரையும் ஆக்க வேண்டும் என்று விரும்புகிறார். ஏனென்றால் உலகத்தை மாற்றுபவர்கள் எனும் போது ஒருவருக்கொருவர் கூட இருப்பவரை மாற்றுவது என்ன கடினமா! எனவே ஒவ்வொருவரும் கவனம் வைக்க வேண்டும். நாம் நமது வாயுமண்டலத்தை உடன் இருப்பவரை நிர்விக்னமாக ஆக்கியே தீர வேண்டும். உலகத்தை உருவாக்கக் கூடியவர்களுக்கு பாப்தாதாவோ சிறிய வேலை கொடுத்துக் கொண்டிருக்கின்றார். சங்கல்பம் செய்கிறீர்கள் என்றால் கை உயர்த்துங்கள். சங்கல்பம் செய்பவர்கள் (அனைவரும் கையை உயர்த்தினார்கள்) கையை உயர்த்தியோ, குஷியைப்படுத்தி விட்டீர்கள். வாழ்த்துக்கள்! வாழ்த்துக்கள்! வாழ்த்துக்கள்! இப்பொழுது அடுத்த முறை வரும் பொழுது மகிழ்ச்சியான செய்தியை சொல்வீர்கள் தானே? சொல்வீர்களா, சொல்வீர்களா? இதில் கை உயர்த்துங்கள். தனக்கு அருகாமையில் உள்ள துணைவர்களை நிர்விக்னம் ஆக்குங்கள், சின்னஞ்சிறு வேலை கொடுக்கின்றார், அனைவருக்கும் சொல்லவில்லை. நல்லது.

பாப்தாதாவிற்கு மஜா (போதை) வந்திருக்கிறது. எப்பொழுது குழந்தைகள் தைரியம் வைக்கிறார்கள் அல்லவா அப்பொழுது பாப்தாதாவிற்கு மிகுந்த குஷி உண்டாகிறது. மேலும் தைரியம் வைக்கும் குழந்தைகளுக்கு பாபா உதவி அளிக்கின்றார், துணையோ இருக்கவோ இருக்கிறது. அதனால் அடுத்த முறை ரிசல்ட் (Result) என்ன பார்ப்போம். ஒவ்வொருவரும் உடன் இருப்பவர்களை தனக்குச் சமமாக ஆக்குவீர்கள் தானே! இதில் கை உயர்த்துங்கள். கையை உயர்த்துவதோ மிக நன்றாக இருக்கிறது. பாப்தாதா மகிழ்ச்சி அடைகின்றார், கையை உயர்த்துவதிலும் தைரியம் வைத்தீர்கள், செய்வதில் ஒருவருக்கொருவர் துணையாக வேண்டும், எனவே அனைவருக்கும் மகிழ்ச்சி தானே? யார் குஷியாக இருக்கிறீர்களோ கை உயர்த்துங்கள், யார் குஷியை ஒருபொழுதும் இழப்பதில்லை, சதா குஷியாக இருக்கிறீர்களா? சதா குஷியாக? பின்னால் உள்ளவர் சதா குஷியாக இருக்கிறீர்களா? நீளமாக கையை உயர்த்துங்கள். நல்லது. சதா குஷியாக இருக்க வேண்டும், ஆக்க வேண்டும், விருப்பம் தானே! ஆக்க வேண்டும் ஏனெனில் தனது இராஜ்யம் ஸ்தாபனை ஆக வேண்டும், செய்ய வேண்டுமென்றால் கூட இருப்பவர்களையும், உடன் அழைத்துச் செல்வீர்கள் தானே! நல்லது.

**கிழக்கு மண்டலம் (ஈஸ்டர்ன் ஜோன்), தமிழ்நாடு, நேபாளம், அஸ்ஸாம், பெங்கால், பீஹார், ஒரிஸாவில் இருந்து 17,000-பேர் வந்திருக்கிறார்கள்:** (அனைவரையும் வரிசைக்கிரமமாக எழுப்பினார்கள்) ஒவ்வொரு இடத்தினுடைய மண்டலம், துணைமண்டலத்தின் பொறுப்பான பெரிய சகோதரிகள் எழுந்தனர். இப்பொழுது இலட்சியம் வையுங்கள் அதாவது எந்த ஏரியா சேவைக்காக உங்களுக்கு கிடைத்திருக்கிறதோ, அதனை நிர்விக்னமாக ஆக்கியே தீர வேண்டும், நீங்கள் சங்கல்பம் செய்யுங்கள். ஏனென்றால் இராஜ்யத்தை ஸ்தாபனை செய்ய வேண்டும். அரைக்கல்பம் இராஜ்யம் நடக்கும் எனவே இதற்காக கொஞ்சம் இங்கங்கு சுற்றி வந்து உழையுங்கள், யார் தலைமைப் பொறுப்பில் இருக்கிறீர்களோ, அவர்கள் அனைத்து இடத்திற்கும் சென்று முயற்சி செய்து பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுங்கள். பிரச்சினைகளோ ஒன்று போல் தான் இருக்கின்றன, ஆனால் ஒவ்வொருவரும் தன்னுடைய ஏரியாவில் பிரச்சினையை முடித்து வெற்றிமூர்த்தி ஆக வேண்டும் சரிதானே? கையை உயர்த்துங்கள். நல்லது. எனவே அடுத்த முறை

அப்பொழுது கேட்போம், உங்களுடைய ஏரியாவில் இருந்து தடைகள் முடிந்து விட்டதா? கேட்கட்டுமா? ஏனென்றால் ஆக வேண்டியது நீங்கள் தான், யாரெல்லாம் அமர்ந்து இருக்கிறார்களோ, அவர்களுக்கு தான் முதலில் தான் ஆகி, பிறரையும் ஆக்க வேண்டும். இராஜ்யம் ஸ்தாபனை ஆகுமென்றால். இங்கிருந்து தான் சமஸ்காரத்தை எடுத்து செல்வோம் அல்லவா? ஆகும்! ஒன்றுமில்லை. பாப்தாதாவும் உதவியாளர் ஆவார். ஏதாவது அம்மாதிரி பிரச்சினை (problem) வந்தது என்றால் யக்ஞத்திற்கு எழுதி அனுப்புங்கள், சரியாகும், எப்படி உதவி செய்ய முடியுமோ, உதவி கிடைக்கும், தடைகளற்றவர் ஆகியே தீர வேண்டி யிருக்கும். அப்பொழுது தான் தனது இராஜ்யம் ஸ்தாபனை ஆகும். மிக நல்லது.

**அயல்நாட்டு சகோதர, சகோதரிகள் 400-பேர் வந்துள்ளனர்:** இந்த இரட்டை அயல்நாட்டினர், மிக நல்லவர்கள். இரட்டை அயல் நாட்டினரை பார்த்து பாப்தாதா குஷி அடைகின்றார் ஆஹா! இரட்டை அயல் நாட்டினரே ஆஹா! ஏனென்றால் நீங்கள் தான் பாபாவை உலகத் தந்தை (விஷ்வ பிதா) என்று பிரபலப்படுத்தினீர்கள். பாரதத்திற்கு நன்மை செய்பவர் அல்ல, உலகிற்கு நன்மை செய்பவர். முதலில் பாரதத்திற்கு நன்மை செய்பவராக இருந்தார், இப்பொழுது நாலா புறமும் சேவை அதிகரித்த உடன் உலகிற்கு நன்மை செய்பவராக (விஷ்வ கல்யாணி) நடைமுறையில் இருக்கின்றார். எனவே உங்களுக்கு மிக, மிக, மிக அன்பு நினைவுகள் மற்றும் மிக, மிக அதிசயம் செய்து முன்னேறிச் செல்பவர்களை பாப்தாதா பார்க்கின்றார். நல்லது முயற்சி செய்து கொண்டே இருக்கிறார்கள். ஒவ்வொருவரிடத்திலும் விதவிதமாக இருக்கிறார்கள், ஆனால் பாரதத்தைத் தவிர விஷ்வபிதா என்று சொல்வதற்கு நீங்கள் நிமித்தமாகி உள்ளீர்கள். இரட்டை அயல்நாட்டினருக்கு பாப்தாதா இன்று இரட்டை அன்பு கொடுக்கின்றார். தொலைவில் இருந்தாலும், நாடு தொலைவில் இருக்கிறது உள்ளம் அருகில் இருக்கிறது அப்படிதானே! கை உயர்த்துங்கள். மிக நல்லது. பாப்தாதாவும் குஷி அடைகின்றார். மேலும் முன்னேறிச் சென்று கொண்டே இருக்கிறார்கள். அயல்நாட்டினர்அங்கு சாரண காரியங்களை ஆராய்ந்து கொண்டு இருக்கிறார்கள். இதற்கும் வாழ்த்துக்கள்! நல்லது. ஒருவருக்கொருவர் உதவியாளராகி, மேலும் நிமித்த ஜெயந்தி சகோதரி எங்கே? இவர் நிறைய சுற்றி வருகிறார். நன்றாக சேவை செய்து

கொண்டிருக்கிறார். உங்களுடன் (சாத்தி) துணையாக இருப்பவர்களும் நல்லவர்களாக இருக்கிறார்கள் -பாப்தாதா இரட்டை அயல்நாட்டினருக்கு இரட்டை அன்பு நினைவுகள் கொடுக்கின்றார் வாழ்த்துக்கள்! வாழ்த்துக்கள்! வாழ்த்துக்கள்! நல்லது.

நாலா புறமும் உள்ள குழந்தைகளுக்கு உள்நாடு ஆகட்டும், வெளிநாடு ஆகட்டும் அனைத்து குழந்தைகளுக்கும் பாப்தாதா உள்ளத்தின் அன்பு நினைவுகள் மற்றும் நல்ல விஷயத்தைச் சொல்லிக் கொண்டு இருக்கிறார் -நாலா புறமும் உள்நாடு மற்றும் வெளிநாட்டிலும் சேவையின் மீது கவனம் நன்றாக இருக்கிறது. வளர்ச்சி ஆகியிருக்கிறது. மேலும் வளர்ச்சி அடைந்துக் கொண்டே இருக்கும், வாழ்த்துக்கள்! வாழ்த்துக்கள்! வாழ்த்துக்கள்!

முன்னி சகோதரியுடன்: அனைவரும் குஷியாக இருக்கிறார்கள். திருப்தியாக இருக்கிறார்கள், சேவை செய்து கொண்டு இருக்கிறீர்கள், செய்து கொண்டே இருப்பீர்கள்.

தாதி ஜானகியுடன்: (பாப்தாதாவிற்கு ரோஜாமலர் மாலை அணிவிக்கப்பட்டது). இந்த மாலை உங்கள் அனைவரது அன்பினுடையதாகும் நிமித்தமாக இவர் (தாதி) அணிவித்துக் கொண்டிருக்கிறார்கள் ஆனால் உங்கள் அனைவரது அன்பு பாப்தாதாவை வந்தடைந்து விட்டது. அனைவரது அன்பும் பாப்தாதாவை வந்ததடைந்து கொண்டிருக்கிறது. அனைவரையும் முன்னால் அழைத்து வர முடியாது ஆனால் தூரத்திலிருந்தே பாப்தாதா ஆஹா! குழந்தைகளே ஆஹா! என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்.

மோஹினி சகோதரி: சரி நன்றாகி விட்டீர்கள், இப்போது நன்றாக இருப்பீர்கள்.

ரத்தன் மோகினி தாதிக்கு குல்பர்கா பல்கலைக்கழகத்திலிருந்து டாக்டர் (முனைவர்) பட்டம் கிடைக்க இருக்கிறது: நல்லது.

**டாக்டர் நிர்மலா தீதியுடன்:** நன்றாக கவனித்து கொண்டிருக்கிறீர்கள், இடமும் (ஞானசரோவர்) நன்றாக நடந்து கொண்டிருக்கிறது. வாழ்த்துக்கள்!

**ஹன்சா சகோதரியுடன்:** (யார் செய்கிறார்களோ அவர்களுக்கு) உள்ளுக்குள்ளேயே புண்ணியக்கணக்கின் அனுபவம் ஆகிக் கொண்டிருக்கும். ஆகிறதா? நீங்கள் தாதியை கவனித்துக் கொண்டிருக்கிறீர்கள், இதில் அனைத்தும் வந்து விடுகிறது. ஒரு தாதிக்கு சேவை செய்யவில்லை! அனேக பேருக்கு சேவை செய்து கொண்டிருக்கிறீர்கள். 3-சகோதரர்களும் பாப்தாதாவுக்கு பூச்செண்டு கொடுத்தனர்.

சரி, நல்லது. அனைவரும் நிர்விக்னமாக இருக்கின்றனர். அனைத்து வேலைகளும் சரியாக நடந்து கொண்டிருக்கிறது மேலும் எதனுடைய விஷயங்கள் இருக்கின்றனவோ, அதுவும் சரியாகிக் கொண்டிருக்கிறது! ஆகிக் கொண்டிருக்கிறது தானே! வாழ்த்துக்கள்.

**ப்ரிஜ்மோகன் சகோதரருடன்:** நீங்கள் டாபிக்-ஐ மாற்றவில்லையா? (மாற்றியிருக்கிறது. பாப்தாதாவுக்கு காட்டப்படுகிறது) இதிலிருந்து புரிந்து கொள்வார்களா? எது குறிப்பாக கீதையைப் பற்றி இருந்ததோ, அது இதனுடன் சிறிது மறைந்து விட்டிருக்கிறது. இப்போது இன்னும் யோசியுங்கள். யோசித்தீர்கள் என்றால் சரியாகி விடும்.

ஹரித்வாரில் சாதுக்களின் சம்மேளனம் (மாநாடு) நடத்திக் கொண்டு இருக்கிறார்கள்: நல்லது. அவர்களை எழுப்புங்கள்.

**ரமேஷ் சகோதரருடன்:** காரியங்கள் சரியாக இருக்கிறது தானே!

**டாக்டர் பனாரஸி சகோதரருடன்:** சேவை சரியாக செய்து கொண்டிருக்கிறீர்கள், வாழ்த்துக்கள், களைப்படைவதில்லை. நல்லது. வரதானம் இருக்கிறது உங்களுக்கு!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 27.02.2014 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## சிவ அவதாரத்தின் போது வீணானவைகளை முடிப்பதற்கான பரிசை பாபாவிற்குத் தாருங்கள், விசேசமான கவனம் வைத்து ஒரு மாதத்திற்கு தடையற்ற நிலையை அனுபவம் செய்யுங்கள்!

இன்று அனைத்து செல்லமான குழந்தைகளுக்கும் சிவ அவதாரம், சிவ ஜெயந்தியின் நல்வாழ்த்துக்கள்! நல்வாழ்த்துக்கள்!! இன்றைய நாளில் பாப்தாதா பார்த்தார், காலையில் இருந்தே அனைவரது உள்ளத்திலும் பரமாத்மா அவதாரத்தின் நினைவாக அளவில்லா குஷி நிறைந்து இருந்தது. ஏனெனில் பாபாவின் அவதாரத்தின் கூடவே குழந்தைகளாகிய உங்களின் தெய்வீக பிறந்த நாளும் ஆகிறது. ஆக குழந்தைகள் தந்தைக்கு வாழ்த்துக்கள் தெரிவிக்கின்றனர். மேலும் பாப்தாதா உங்கள் ஒவ்வொருவருக்கும் உங்களது தெய்வீகமான பிறவிக்காக இலட்சம் மடங்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறார். ஒவ்வொருவரின் மனதிலும் பிறந்த பொழுதில் இருந்து இன்று வரை சங்கமயுகத்தின் நினைவுகள் சேர்ந்து கொண்டு இருக்கின்றன. உங்கள் அனைவரது புத்தியிலும் சிவ அவதாரத்தின் குஷி நிறைந்திருக்கிறது. மேலும் பாபாவிற்கும் குழந்தைகளின் தெய்வீக பிறப்பிற்காக அளவு கடந்த குஷி உள்ளது. ஆஹா! அற்புதமான இனிமையிலும், இனிமையான குழந்தைகளே! ஆஹா! ஏனெனில் பாபாவின் கூடவே குழந்தைகளாகிய உங்களின் இந்த அலௌகீக, தெய்வீக, பூஜிக்கத்தக்க பிறவியாகும் இந்த சங்கமயுகத்தில் பாபாவின் கூடவே அவதரித்துள்ளீர்கள். அதாவது புதிய பிறவி எடுத்து உலக மங்கள சேவைக்கு நிமித்தமாகி உள்ளீர்கள். பாபாவின் கூடவே

குழந்தைகளாகிய நீங்களும் ஒவ்வொரு சேவையிலும் துணையாக உள்ளீர்கள் அனைவருக்கும், உற்சாகம், ஆர்வம் உள்ளது. எப்படியாவது இந்த உலகத்தை மாற்றியே தீர வேண்டும்! இந்த ஆர்வம் உள்ளதல்லவா? யாருக்கு? ஆர்வம் உள்ளதோ அவர்கள் கை உயர்த்துங்கள். நல்லது!

பாப்தாதாவும் கூட பார்த்தார், பெருவாரியான குழந்தைகளிடம் தங்களது இராஜ்யத்தில் வருவதற்கான மிகுந்த குஷி உள்ளது. ஏனெனில் நமது இராஜ்யம் வந்தேவிட்டது என்பதை அறிகிறீர்கள். இந்த சிவராத்திரி அனைத்து குழந்தைகளுக்கும் பாபாவின் அவதாரத்தின் குஷியைக் கொடுக்கிறது. ஆக இன்று அனைவரது மனதிலும் சிவதந்தையின் நினைவு நிறைந்துள்ளது. நமது பாபா வந்து விட்டார்! நமது இராஜ்யமும் வந்தேவிட்டது பாப்தாதாவும் குழந்தைகளின் உற்சாகம்-ஆர்வத்தை கண்டு குழந்தை களுடைய மகிமையின் பாடலைப் பாடுகிறார் ஆஹா! குழந்தைகளே! ஆஹா! பாபா பார்த்தார், விசேஷமாக சேவையில் ஈடுபட்டிருக்கும் குழந்தைகள் இரவும் பகலுமாய் நமது இராஜ்யம் வந்தேவிட்டது என்னும் பாடலை உள்ளத்தில் பாடிக் கொண்டே இருக்கின்றனர். தற்பொழுது அந்த இராஜ்யத்தில் செல்வதற்கான வழியினை (ஏற்பாடு) அறிவீர்கள்.

ஆக இன்று சிவராத்திரி அன்று ஒவ்வொரு குழந்தையும் தனது உள்ளத்து அட்டவணையை சரிபார்க்க வேண்டும், நமது இராஜ்யத்தில் செல்வதற்கு தனக்குள் முழுமைத் தன்மையை எவ்வளவு தூரம் கொண்டு வந்திருக்கிறேன். ஏனெனில் முழுமையான இராஜ்யத்திற்கு நாம் செல்ல வேண்டும். அங்கு துக்கத்தின் பெயர் அடையாளமே கிடையாது ஆகவே இப்பொழுதில் இருந்தே உங்கள் உள்ளத்தில் சதா தடையற்று இருப்பதற்கான சம்ஸ்காரத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்களா? தடை வருவதற்கு முன்னால் தடையற்ற நிலையின் அனுபவம் ஏற்படுகிறது. தற்போது பாப்தாதா குழந்தைகளின் தடைகளை அழிக்கும் விசேஷ தன்மையைப் பார்த்துக் கொண்டிருக்கிறார் மேலும் பார்க்கவும் விரும்புகிறார். பாபாவினுடைய தடைகளற்ற உடனிருப்பவர்களாகி நடப்பதற்கான சமஸ்காரம் ஒரு சில குழந்தைகளிடம் உள்ளது. கவனம் இருக்கிறது ஆனால் கவனம் இருப்பதின் அர்த்தமே கூடாது, இந்த விஷயத்தின் மீது நல்ல கவனம்

உள்ளது ஏனெனில் நீங்கள் நிமித்தமாக உள்ள குழந்தைகள், தடைகளற்ற நிலையின் அனுபவிகள் ஆகும்போது உங்களின் தடைகளற்ற நிலையின் அதிர்வலைகள், புருஷார்த்தம் செய்து கொண்டிருக்கும் குழந்தைகளுக்குப் போய்ச் சேரும்.

இன்று பாப்தாதா பார்த்துக் கொண்டிருந்தார், தடைகளற்ற ஸ்திதி எவ்வளவு நேரம் இருக்கிறது? சில சில குழந்தைகளின் ரிசல்ட் நல்ல கவனம் வைப்பதாக இருந்தததைப் பார்த்தார். அந்த குழந்தைகளுக்கு இன்று சிவ அவதார தினத்தன்று. சிவ அவதாரத்தின் ஞாபகார்த்தமாகும், ஆக இன்று தடைகளற்று இருப்பதின் லட்சியம் கொள்பவர்களுக்கு பாப்தாதா அவதார தினத்தின் வாழ்த்துக்களையும் தெரிவித்து, உள்ளத்திற்கு ஓய்வளிக்கும் அன்பையும் வழங்கிக் கொண்டிருக்கிறார். ஆஹா! குழந்தைகளே ஆஹா! என கீதத்தையும் பாடிக் கொண்டிருக்கிறார். கவனம் வைப்பது என்றால் டென்ஷன் இருக்கக் கூடாது அதன் அடையாளம் கவனம் வைப்பது -டென்ஷன் இல்லாதிருப்பது. இம்மாதிரி குழந்தைகளும் இருந்தனர், ஆனால் சதா கவனமாயிருக்கும் குழந்தைகள் எவ்வளவு (பாபா) விரும்புகிறாரோ அதைவிட குறைவாகவே உள்ளனர் என்பதையும், பாப்தாதா சோதித்துக் கொண்டிருந்தார். ஆக இன்றைய சிவ அவதார தினத்தன்று பாபா இதையே விரும்புகிறார், அதாவது ஒவ்வொரு குழந்தையும் தனது புருஷார்த்த அளவின்படி, தங்களிடம் குறித்து வைத்துக் கொள்ள வேண்டும், அதையும் உங்கள் வசதிப்படி நீங்களே நிர்ணயித்துக் கொள்ளலாம். அந்தளவு தடைகளற்றிருக்க வேண்டும். ஏனெனில், போகப் போக தடைகளற்றிருப்பதில் கவனமாய் இருப்பது மிக அவசியம். எனவே பாப்தாதா விரும்புகிறார், முழு உலகின் நாலா புறங்களிலுமுள்ள குழந்தைகள் தற்போது தமது தைரியத்தின் பிரகாரம் முடிவு செய்து கொள்ள வேண்டும். இவ்வளவு நேரம் நான் ஆத்மா தடைகளற்றிருக்க முடியுமா? மேலும் கவனமாய் இருந்து பார்க்கவும்.

தடைகளற்றிருப்பது எளிது தான், என்று நினைப்போர் கை உயர்த்துங்கள். நல்லது! கை உயர்த்துங்கள், சக்தி இல்லையெனில் உயர்த்தாதீர்கள். பாப்தாதா ஒரு மாதத்தின் ரிசல்ட்டைப் பார்க்க விரும்புகிறார், அதிகமாகக் கூறவில்லை! ஆக ஒரு மாத சங்கல்பத்தில் கூட தடை இல்லா நிலை, வீணான சங்கல்பங்கள் கூட இல்லை! நில்

என்றவுடன் நிற்பது! தற்போது சங்கல்பத்தின் மீது கவனம் மிகவும் அவசியம். எனவே ஒவ்வொரு சங்கல்பத்தின் மீதும் தடை இல்லாதிருக்கிறதா என்று சோதிக்க வேண்டும் வீணான சங்கல்பங்களும் கூடாது. அம்மாதிரி தங்களது சங்கல்ப சக்தியின் மீது கவனம் உள்ளதா? தங்களது சங்கல்ப சக்தி இருக்கிறதானே!

தடையில்லாத திட்டத்தை சிந்தித்துப் பாருங்கள், ஒரே ஒரு மாதத்திற்காக என்ன நினைத்தீர்களோ, அது நடந்ததா என்று சோதித்து பாருங்கள். ஏனெனில் மாயாவும் கேட்டுக் கொண்டிருக்கிறது. எப்படிப்பட்ட சூழ்நிலையின் மாயாவாக இருந்தாலும் சரி, ஆனால் சூழ்நிலையின் பிரபாவம் மனதின் சுப சங்கல்பத்தில் தடை ரூபமாக ஆகி விட கூடாது. இதில் வெற்றி பெற வேண்டும். ஆக 15-தினங்களுக்குள்ளாக சோதனை செய்ய வேண்டும் -வீணான எண்ணங்களும் இல்லை, பாபா சதா உள்ளத்தில் நிறைந்திருக்கிறார். தற்போது சிறிது காலத்திற்காக இந்த விஷயத்தின் மீது சங்கல்பத்தின் முயற்சியின் மீது கவனம் வைக்க வேண்டும். சொல் மற்றும் செயல் ஆகிய இரண்டும் மேலோட்டமானவை, ஆனால் சங்கல்பமும் வீணானவையாக இருக்கக் கூடாது ஏனெனில் ஒவ்வொரு சங்கல்பத்தின் அவசியம் ஆகும். சொல் மற்றும் செயலும் இருக்கலாம் ஆனால் மன சக்தி சக்திவாய்ந்ததாக இருப்பதன் மூலம் சொல் மற்றும் செயலில் வித்தியாசம் ஏற்பட்டுவிடுகிறது. ஆக பாப்தாதா இன்று மனதின் சங்கல்பத்தின் மீது கவனத்தைச் செலுத்தக் கூறுகிறார். யார் நிமித்த மகாரதிகளாக இருக்கிறார்களோ அவர்கள் மன சக்தியின் மீது கவனம் வைக்க வேண்டும். சொல் மற்றும் செயல் இரண்டும் தானாகவே சரியாகி விடும் ஆக பாப்தாதா மனதின் சங்கல்பத்தின் மீது நமது கவனத்தை ஈர்க்கிறார். ஏனெனில் அவசியமில்லாத வீணான எண்ணங்கள் இவைகள் கூட அதிக நேரத்தை வீணாக்கி விடுகின்றன. அந்த சமயத்தை சேமிக்க வேண்டும் இது உங்களால் முடியுமா? முடியும் என்பவர்கள் உயர்த்துங்கங்கள்! நல்லது! உற்சாகம் ஆர்வம் உள்ளவர்கள் அதிகமாக இருக்கிறீர்கள் சபாஷ்! இந்த உற்சாகம் ஆர்வத்தை செயலில் கொண்டு வாருங்கள். இதில் கூட பாஸ் ஆகி விடுவீர்கள். ஏனெனில் பாபாவைக் கூடவே வைப்பீர்கள் அல்லவா? பாபாவின் துணை இருப்பதால் தானாகவே வீணானவைகள் முடிந்து போய் விடும்.

ஆக, இன்று பாப்தாதா வீணான எண்ணங்கள், அதன் மீது கவனம் வைக்க ஞாபகப்படுத்துகிறார். ஏனெனில் இதில் அதிக நேரம் வீணாகிப் போகிறது. நேரத்தை தீவிர புருஷார்த்தில் ஈடுபடுத்துங்கள். ஆக பாப்தாதா இன்று வீணானவைகளின் மீது கவனம் வைக்க ஞாபகப்படுத்திக் கொண்டிருக்கிறார். ஏனெனில் குழந்தைகள் கூறுகின்றனர், கெட்ட சங்கல்பங்கள் இல்லை அல்லவா! இந்த சிறு சிறு வீணான சங்கல்பங்கள் உள்ளன ஆனால் எப்பொழுது வேண்டுமானாலும் ஏமாற்றத்தைத் தரக்கூடும். எனவே வீணானவைகளைக் குறையுங்கள். ஆக எண்ணம், சொல் மற்றும் செயல் சம்மந்தம் தொடர்பு அனைத்திலும் சோதனை செய்யுங்கள் -வீணானவைகள் எவ்வளவு நல்லவைகள் எத்தனை! ஏனெனில், இந்த சிவராத்திரி தினத்தன்று ஏதேனும் பரிசு கொடுப்பீர்கள் தானே! கொடுப்பீர்களா? கை உயர்த்துங்கள்! ஆக பாப்தாதா இந்த ஒரு பரிசைத் தான் விரும்புகிறார் அது என்னவென்றால், வீணானவைகளை அகற்றிவிடுங்கள்! கவனம் வையுங்கள்! தீயவைகளின் கவனம் என்னவோ இருக்கின்றது. வீணானவைகளின் மீது கவனம் வைக்க வேண்டும் ஏனெனில் வீணானவை காரணமாக அதிக நேரம் வீணாக போய் விடுகிறது. ஆக இன்றைய தினத்தில் சிவஜெயந்தி நாளன்று வீணானவைகளின் மீது கவனம் வைக்கும் ஹோம்வர்க் தருகிறார். இது பிடித்துள்ளதா? கை உயர்த்துங்கள் பிடித்தமாயிருப்பின் அனைவரும் பாஸ் ஆகி விடுவீர்கள். பிடித்தமாக இருந்தால் அவ்வாறு விரும்பும் செயலானது உள்ளத்தின் மூலமாக செய்யப்படுகிறது. ஆக வாழ்த்துக்கள்! வாழ்த்துக்கள்! வாழ்த்துக்கள்! மிகவும் கடினமாக தோன்றவில்லை தானே அட, கவனம் வைப்பதால் முயற்சி குறைவாகவே தேவைப்படுகிறது. ஒவ்வொருவரும் பாருங்கள், அனைவருமே பாஸ் ஆகி விடுவீர்கள். ஒரு மாதத்திற்கு பிறகு கேட்போம் இல்லையா! பெரும்பாலானோர் பாஸ் ஆகி விட வேண்டும், இது நடக்க கூடியது தானே? கை உயர்த்துங்கள்! நல்லது! இதற்கு அனைவருமே கை உயர்த்துகிறீர்கள். பாப்தாதா ஆஹா! குழந்தைகளே! லட்சியத்தின் இலட்சணம் தானாகவே அதாவது எளிதாகவே ஆகி விடுகிறது.

குழந்தைக்கும் பாப்தாதா தீவிர புருஷார்த்தத்தின் பரிசை வழங்குவார். இதில் உங்களுக்கு விருப்பம் தானே! நல்லது! இன்றைய தினம் சிவராத்திரி தினம் அல்லவா? ஆக இன்றைய தினத்தின் விசேஷமான வாழ்த்துக்கள்! மேலும் உள்ளத்தின் அன்பு நினைவுகள்! இன்று பாப்தாதா பார்த்தார், இரட்டை வெளி நாட்டினர் அதிகம் வந்துள்ளனர். எவ்வளவு பேர் என்று பார்க்கலாம் எழுந்திருங்கள். பாருங்கள் எவ்வளவு பேர்! பாப்தாதாவிற்கு மிகவும் குஷி கவனம் நன்றாக உள்ளது பாப்தாதா உள்ளத்தின் ஆசீர்வாதங்களை வழங்கிக் கொண்டிருக்கின்றார் பாரதவாசிகளுக்கும் தான்! இந்நாட்கள் இரட்டை வெளிநாட்டினருக்காக விசேஷ சீசன் அல்லவா! எனவே பல பாகங்களிலிருந்து வந்துள்ளனர். நிறைய நாடுகளிலிருந்து வந்து சேர்ந்துள்ளனர் என்பதைப் பார்க்கின்றார். (80-நாடுகளிலிருந்து 1200-இரட்டை வெளிநாட்டினர் வந்துள்ளனர்) அனைவரும் இரட்டை குஷியுடன் இல்லையா? உடலாலும் மனதாலும் இரண்டு விதத்திலும்! நல்லது சேவையின் மீது கவனம் அல்லது. எவ்வளவு சேவை அதிகரிக்க வேண்டுமோ? அவ்வளவு அதிகரித்துக் கொண்டே செல்லுங்கள் ஏனெனில் திடீரென்று எதுவும் நிகழலாம். எனவே சேவையை அதிகரித்துக் கொண்டே செல்லுங்கள் ஏனெனில் உங்களது இராஜ்யம் வரவேண்டுமல்லவா? ஆக உங்கள் இராஜ்யத்திற்கு சென்று இராஜாங்கம் செய்வீர்கள் தானே! எவ்வளவு முடியுமோ அவ்வளவு ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அறிமுகத்தைத் தாருங்கள். பாபா வந்து போய் விட்டார் என்றால் அது குழந்தைகளுக்குத் தெரியாமல் போய் விடும். எனவே எவ்வளவு முடியுமோ அவ்வளவு பாபாவின் செய்தியைத் தாருங்கள். பிறகு பட்சாதாபப்படுவார்கள் -பாபா வந்தார், ஆனால் எங்களுக்கும் கூறப்பட்டது ஆனால் நாங்கள் தான் செல்லவில்லை! நீங்கள் உங்களது தெரிவிக்கும் சேவையை அதிகரித்துக் கொண்டே செல்லுங்கள் எவரும் புகார் செய்யக் கூடாது. நாங்களும் மிக அருகாமையில் இருந்தோம், நாங்களோ அதே தெருவில் தான் இருந்தோம், இருப்பினும் எங்களுக்குத் தெரியாமல் போயிற்று. இரட்டை வெளிநாட்டினருடைய ரிசல்ட் மிக நன்றாக உள்ளது. மதுபனோடு மிக அன்பாக இருக்கிறார்கள். உங்களது சேவைக்குப் பிறகு தான் பாப்தாதா உலகின் சேவாதாரி என்று மிக பிரசித்தமானார் என்பதை ஏற்கனவே கூறியுள்ளோம். எவரேனும் இன்னும் பாக்கியிருந்தால் எந்தளவிற்கு முடியுமோ அந்தளவு செய்தியைத் தாருங்கள் அதுவும், நமது தந்தை வந்துள்ளார் என்னும்

செய்தி அவர்கள் (ஞானத்தின் படி) நடந்தாலும் சரி நடக்காவிட்டாலும் சரி அது அவர்கள் விருப்பம், ஆனால் உங்கள் தரப்பிலிருந்து செய்தி கிடைக்க வேண்டும், பிறகு பட்சாதாபப்படுவார்கள்! இருந்தாலும் அவர்களுக்கும் தெரிய வேண்டும் அல்லவா? பிறகும் கூட உங்களது ரிசல்ட் நன்றாகவே உள்ளது மிகவும் நல்லது! எங்கிருந்தும் முயற்சி செய்து வந்திருந்தாலும் சரி, அந்த முயற்சியினுடைய பலன் உங்களுக்குக் கிடைக்கும். மேலும் அவ்வாறு சேமிப்பும் உள்ளது மிக நல்லது அமருங்கள். இரட்டை வெளிநாட்டினர் பாருங்கள் தலைப்பு என்ன? இரட்டை வெளிநாட்டினர் ஒருபோதும் மறப்பதில்லை நாம் இரட்டை வெளிநாட்டினர்.

**சேவையினுடைய முறை இராஜஸ்தானுடையதாகும் 5000-பேர் வந்துள்ளனர்:** ஒவ்வொரு மண்டலத்தினரின் சேவை இருப்பதால் ரிசல்ட் நன்றாக உள்ளது. அந்த மண்டலம் குறிப்பாக கவனம் செலுத்துகிறது. பெரும்பான்மையோரின் ரிசல்ட் நன்றாகவே உள்ளது. நீங்கள் எப்படி புரிய வைக்கிறீர்கள், ரிசல்ட் நன்றாக தானாகவே தான் உள்ளது! மிகவும் நல்லது என்று ஒவ்வொரு மண்டலத்திற்கும் பெயர் கிடைக்கிறது. நல்ல சேவையில் சகயோகிகளாகவும் இருக்கிறீர்கள். மேலும் மண்டலத்திற்கும் விசேஷமாக கிடைக்கிறது தாதிகளின் கவனமும்! இது நன்றாக இருக்கிறதல்லவா! கை உயர்த்துங்கள்!

**முதல் முறையாக அநேகர் வந்துள்ளனர்:** முதல் முறையாக வருவோர் முதல் நம்பரை எடுக்க வேண்டும் ஏனென்றால் இவ்வளவு சமயம் தவறவிட்டுள்ளீர்கள். அந்த சமயம் காலத்தை முழுமை செய்ய வேண்டும். எனவே தீவிர புருஷார்த்தி ஆக வேண்டும் இலேசாக, தொய்வாக இருக்கக் கூடாது ஆனால் தீவிரமான புருஷார்த்தியாக இருக்க வேண்டும் சம்மதம் தானே! தீவிர புருஷார்த்தி!

**தாதி இரத்தன் மோகினிஜி அவர்களுக்கு டாக்டர் பட்டம் (முனைவர்) கிடைத்துள்ளது:** இதுவும் நிறுவனத்தின் பெருமையாகும் ஆக பிரம்மா குமாரிகள் அனைத்துமே செய்ய முடியும் இல்லையென்றால் பிரம்மா குமாரிகள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்று தான் நினைக்கின்றனர், இதன் மூலம் அவர்கள் அனைத்து தரப்பிலும் செல்ல முடியும் என்பது தெரிய வரும். நல்லது!

தாதி ஜானகி -அற்புதமான பாபா அனைத்து உள்ளங்களையும் ஈர்த்துக் கொள்கிறார் அற்புதம் அற்புதம்! உள்ளத்திற்கு ஓய்வளிப்பவர் அல்லவா! அந்த திலாராமிடம் வந்து சேர்ந்து விட்டார் (அனைவருக்கும் எப்படி தெரியும்) தெரிந்து போய் விடும் யார் பாக்கி இருக்கிறார்களே அவர்களுக்கு தெரியவருகிறது தற்போது உற்சாகம் ஆர்வமாக இருக்கக்கூடியவர்கள் ஆங்காங்கு அனைவரையும் அனுப்பி வையுங்கள், நீங்கள் செய்வியுங்கள் பாபா செய்வித்துக் கொண்டிருக்கிறார். பாபா இன்னும் செய்வித்துக் கொண்டே இருப்பார் எங்கே போவார்? (சரீரத்தினுடைய தொந்தரவு ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது) அது பரவாயில்லை! குழந்தைகளை முன்னேறச் செய்வதற்கு நிமித்தமாக உள்ளீர்கள் ஏனெனில் குழந்தைகள் தான் எதிர் நோக்க வேண்டியுள்ளது பிறகும் கூட குழந்தைகளின் மூலம் தான் செய்ய வேண்டி யிருக்கிறது

மோகினி சகோதரி: பாப்தாதாவிற்கு வாழ்த்துக்களை கூறுகிறார். உங்களுக்கு இலட்சம் மடங்கு வாழ்த்துக்கள்!

ரமேஷ் சகோதரர்: வாழ்த்து அட்டை (greetings card) தருகிறார். உங்களுக்கு ஆயிரம் மடங்கு பன்மடங்கு வாழ்த்துக்கள்.

பிரிஜ்மோகன் சகோதரருடன்: கவனம் உள்ளது மேலும் முன்னேறி செல்லுங்கள்.

பூபால் சகேதரருடன்: சரி, மிக நல்லது!

பாப்தாதாவிற்கு அனைவராலும் அனுப்பப்பட்ட வாழ்த்து கார்டுகள் காண்பிக்கப்பட்டது (ரஷ்யா மற்றும் நளினி சகோதரின் கார்டுகள் காண்பிக்கப்பட்டன) பாப்தாதா நன்றாகப் பார்த்தார் என்று கூறுங்கள். அவர்களுக்கு பழம் அல்லது டோலி அனுப்புங்கள்.

வெளிநாட்டு மூத்த சகோதரிகளுடன்: அனைத்து மகாரதிகளும் ஒன்றாகக் கூடியுள்ளீர்கள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டிலிருந்து வந்தவர்கள்! இந்த ஒரு ஒற்றுமை நன்றாக உள்ளது. (அனைத்து

தேசங்களும் சேர்ந்து ஒரு பெரிய சேவை செய்யலாம்) புருஷார்த்தமும் கூட செய்து கொண்டிருக்கின்றனர். சேவையும் செய்து கொண்டிருக்கின்றனர் மேலும் வெற்றியும் கிடைத்துக் கொண்டிருக்கிறது பாப்தாதா. மிகவும் குஷியாக இருக்கிறார் உள்நாட்டினரானாலும் சரி, வெளிநாட்டினாராலும் சரி, மேலும் அந்த முயற்சியின் பலனும் கிடைத்துக் கொண்டிருக்கிறது. எனவே வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள்! நிமித்தமாக நீங்கள் தானே இருக்கிறீர்கள்! பாப்தாதா உங்களுக்கு சக்தி அளிக்கின்றார் ஆனால் உலகின் முன்னர் குழந்தைகள் தான் செய்ய வேண்டும்.

(கோவையிலிருந்து குல்சார் தாதிக்கு மருத்துவம் செய்த டாக்டர் வந்துள்ளார்) இப்பொழுது நீங்கள் இரட்டை டாக்டர் ஒரு டாக்டராக அல்ல, இரட்டை டாக்டர் ஆக வேண்டும். பக்காவாக ஆகி விட்டீர்கள் நல்லது! முன்னேறிக் கொண்டே செல்லுங்கள் சேவையிலும் முன்னேறுங்கள் உங்களிடமோ செய்தியை கொடுப்பதற்கான ஏற்கனவே தயாராக உள்ள சாதனம் (மருத்துவம்) இருக்கிறது அதன் மூலம் நன்கு சேவை செய்யுங்கள். நல்லது!

பாப்தாதா தனது பொற்கரங்களால் சிவபாபாவின் கொடியை ஏற்றினார்! அனைவருடைய உள்ளமும் ஒரே ஒரு வார்த்தையையே கூறிக் கொண்டிருக்கின்றன ஆஹா சிவராத்திரி! ஆஹா சிவபாபா! ஆஹா!

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 15.03.2014 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# வாழ்க்கையில் தினமும் ஹோலி (தூய்மை) ஆகி தூய்மையின் அதிர்வலைகளை நாலா புறமும் பரப்ப வேண்டும், முடிந்ததை முடிந்ததாக்கி வெற்றியினுடைய வரதானத்தை சொரூபத்தில் கொண்டு வர வேண்டும்!

எல்லா பவித்ரமான குழந்தைகளுக்கும் ஹோலிக்கான வாழ்த்துக்கள்! நீங்கள் ஒவ்வொரு தூய்மையானக் குழந்தையும் இன்று பாப்தாதாவுடன் ஹோலி கொண்டாட வந்துள்ளீர்கள் என்றால் பாப்தாதாவும் கூட எல்லா தூய்மையானக் குழந்தைகளுக்கும் ஹோலியினுடைய வாழ்த்துக்களை அளிக்கின்றார். ஒவ்வொரு குழந்தையும் எவ்வளவு அன்பானவர்கள் என்பதை தந்தையும் குழந்தைகளும் அறிவார்கள். புனிதத்திலும் புனிதமான தந்தை ஒவ்வொரு குழந்தைகளுக்கும் மிக்க சிநேகத்துடன் ஹோலியினுடைய வாழ்த்துக்களை அளித்துக் கொண்டிருக்கின்றார். எல்லாக் குழந்தைகளும் புனிதத்திலும் புனிதமான தந்தையின் தூய்மையானக் குழந்தைகள். இன்று ஒவ்வொரு குழந்தையும் தன்னை தூய்மையாக்க, தூய்மையாக்கக்கூடிய நிலையை அறிந்துள்ளீர்கள். ஒவ்வொரு குழந்தையும் எது வரை மனம், சொல், செயல், சம்பந்தம், தொடர்பில் புனிதமாகி உள்ளார், தூய்மையாகி உள்ளார் என்பதை தந்தையும் கூட அறிவார், நீங்களும் அறிவீர்கள் ஏனெனில் பாப்தாதாவிற்கு புனிதத்திலும் புனிதமான குழந்தைகள் மிகவும் பிரியமானவர்கள். எனவே இன்று ஒவ்வொரு குழந்தையும் புனிதத்திலும் புனிதம் அடைவதற்கான வாழ்த்துக்களைப் பெற்றுக் கொள்ளுங்கள். ஒவ்வொரு புனிதமான குழந்தையும் நம்பர்வார் தான் ஆனால் பாப்தாதாவுடைய

அன்பின் அதிகாரிகள். பாப்தாதா நாலா புறமும் உள்ள குழந்தைகளை, உள்நாடோ, வெளிநாடோ, ஒவ்வொரு குழந்தையும் மிகவும் இதயப்பூர்வமாகவும், அன்பாகவும் தூய்மை ஆவதற்கான வாழ்த்துக்களை அளித்துக் கொண்டிருக்கின்றார். வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள்!

இதற்கும் கூட பக்தியில் ஒரு நாள் கொடுத்துள்ளனர் ஆனால் ஒவ்வொரு நாளுக்கும் மகத்துவம் கொடுத்துள்ளனர். நீங்களும் கொண்டாடுகிறீர்கள், பக்தியிலும் கொண்டாடுகின்றனர், சாதாரணக் குழந்தைகளும் கொண்டாடுகின்றனர் ஆனால் ஒவ்வொரு குழந்தையும் தனது ரூபத்தின் மூலம் கொண்டாடி வருகின்றனர். குழந்தைகளோ அமிர்த வேளை முதல் தந்தைக்கு வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள் என்று கூறிக் கொண்டே உள்ளனர். நாலா புறத்திலிருந்தும் -உள்நாடோ, வெளிநாடோ, கிரமாமோ -ஒவ்வொரு குழந்தையும் மனதார தந்தைக்கு மற்றும் உங்கள் அனைவருக்கும் ஏராளமான வாழ்த்துக்களை அளிக்கின்றனர் மற்றும் குழந்தைகளின் வாழ்த்துக்களுக்கு பாப்தாதாவும் மிக்க சிநேகத்துடன் வாழ்த்துக்கள் அளிக்கின்றார்.

இன்று அமிர்த வேளையில் நாலா பக்கத்திலிருந்தும் ஹோலி வாழ்த்துக்கள், ஹோலி வாழ்த்துக்கள் என்ற குழந்தைகளின் இதயத்தின் பாடலை தந்தை கேட்டார். தந்தையும் கூட இப்போது நேரிலேயே ஒவ்வொரு குழந்தைக்கும், எவ்வளவு பேர் இருந்தாலும், ஒரேடியாக இறுதியிலுள்ள குழந்தைக்கும் கூட வாழ்த்துக்கள் வாழ்த்துக்கள் வாழ்த்துக்கள்! கூறிக் கொண்டிருக்கின்றார். எல்லோருடைய முகத்திலும் இப்போது தந்தையுடைய சிநேகத்தில் மூழ்கி இருப்பது தெரிந்து கொண்டிருக்கிறது. குழந்தைகள் தினமும் இதே சந்திப்பினுடைய குஷி மற்றும் மகிழ்ச்சியில் முன்னேறிக் கொண்டே செல்லட்டும் என்று பாப்தாதா நாலா புறமும் உள்ள குழந்தைகளுடைய கண் மூலம் திருஷ்டி அளித்துக் கொண்டே இந்த சந்திப்பைக் கொண்டாடிக் கொண்டிருக்கின்றார். எப்படி தினத்தின் பெயரே ஹோலி, அந்த மாதிரி வாழ்க்கையில் ஒவ்வொரு நாளும் ஹோலி ஆகி, அதாவது தூய்மையாகி, தூய்மையின் வைப்ரேஷன் நாலா பக்கமும் பரப்பிக் கொண்டே இருங்கள்.

பாப்தாதா ஒரு விஷயத்தில் குஷி அடைகின்றார், என்ன பார்த்தார்? ஒவ்வொரு குழந்தையும் பாப்தாதாவிற்கு வாழ்த்துக்கள் கூறிக் கொண்டிருந்தனர் மற்றும் பல்வேறு இடங்களுடைய வாழ்த்துக்களினால் வாழ்த்துக்களின் பை நிரம்பி விட்டது. இந்த வாழ்த்துக்கள் சதா ஞாபகத்திலிருக்கட்டும், ஹோலி வாழ்த்துக்கள். இன்று பாப்தாதா நாலா புறமும் உள்ள குழந்தைகளுக்கு அமிர்த வேளை முதல் மனதார வாழ்த்துக்களை அளித்தார் -ஒவ்வொரு குழந்தையும் ஒவ்வொரு பாடத்திலும் முன்னேறிக் கொண்டே செல்லட்டும், பாப்தாதா ஒவ்வொரு குழந்தையுடைய துணைவன் ஆவார். இப்போது இன்றைய நாள் பாப்தாதாவும் நேரில் வந்துள்ள ஒவ்வொரு குழந்தைக்கும் இதயத்தின் ஆசீர்வாதங்களுடன் வாழ்த்துக்களும் அளித்துக் கொண்டிருக்கிறார். வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள்! ஹோலி, எந்த ஒரு நொடி கடந்ததோ, அந்த நொடிக்காக என்ன கூறுவீர்கள்? முடிந்து விட்டது! ஒவ்வொரு குழந்தையும் அமிர்தவேளை முதல் தனது நேரப்படி வாழ்த்துக்களின் பாடலை, இதயத்தின் பாடலை, வாய் மூலமோ இல்லை ஆனால் இதயத்தின் வாழ்த்துக்களின் பாடலை பாப்தாதாவின் காதுகளில் ஒலிக்கச் செய்தனர். பாப்தாதாவும் ஒவ்வொரு குழந்தைக்கும் நேரிலேயே வாழ்த்துக்களுக்கான பதில் அளித்துக் கொண்டிருக்கின்றார், ஒவ்வொரு குழந்தைக்கும் இதயத்தின் ஆசீர்வாதங்களுடன் உளப்பூர்வமான அன்புடன் சேர்த்து வாழ்த்துக்களையும் அளிக்கின்றார் -வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள்!

இன்று முதல் தினமும் அமிர்தவேளையில் தனது முயற்சியின்படி தந்தையின் ஆசீர்வாதங்களை எடுத்துக் கொள்ளுங்கள். தந்தையின் ஆசீர்வாதங்கள் என்ன? பாப்தாதா ஒவ்வொரு குழந்தைக்கும் தீவிர புருஷார்த்தி சொரூபத்தில் பார்க்க விரும்புகிறார். எந்த ஒரு விஷயம் வந்தாலும், விஷயங்களின் வேலை வருவது ஆனால் குழந்தைகள் உங்களுடைய வேலை தந்தையினுடைய உளப்பூர்வமான ஆசீர்வாதங்களை எடுத்துக் கொள்வது. தினமும் அமிர்தவேளையில் தந்தையின் ஆசீர்வாதங்களை எடுத்துக் கொள்ளுங்கள். முழு நாளும் அந்த மாதிரி அனுபவம் செய்யுங்கள், பாப்தாதா நமது பாதுகாப்பாளராகி கூடவே இருக்கின்றார் மற்றும் தந்தையுடன் கூடவே இருப்பது என்றால் என்ன? தந்தை என்ன சொல்கிறாரோ, அமிர்தவேளை எந்த முரளி

கேட்கிறீர்களோ அதில் அன்பு நினைவுகளின் கூடவே ஆசீர்வாதமும் உள்ளது. எனவே தினமும் ஆசீர்வாதங்களைக் எடுத்துக் கொண்டு பறந்து செல்லுங்கள் மற்றும் பறக்க வையுங்கள். ஆகவே ஹோலி கொண்டாடுவது என்றால் கடந்த மற்றும் நிகழ்காலத்தை சதா வெற்றி சொரூபம் ஆக்க வேண்டும். வெற்றி நமது பிறப்புரிமை என்ற வரதானம் உள்ளது. அந்த நினைவின் மூலம் முழு நாளும் அடிக்கடி நினைவு செய்யுங்கள், பாப்தாதாவின் வரதானம் உள்ளது -வெற்றி ஒவ்வொரு குழந்தையுடன் கூடவே உள்ளது ஏனெனில் பாப்தாதா கூடவே இருக்கிறார் என்றால் வெற்றியும் சதா ஒவ்வொரு குழந்தையுடன் கூடவே உள்ளது, அதை நடைமுறையில் மட்டுமே கொண்டு வர வேண்டும், வெற்றி சொரூபமோ உள்ளது. சொரூபம்தான் வெற்றி! இன்றைய நாள் இந்த வரதானத்தை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும் -வெற்றி நமது பிறப்புரிமை! இந்த நினைவு வெற்றியில்லா விஷயங்களையும் கூட வெற்றி பெற வைக்கும். இன்றைய நாள் சதா வெற்றி சொரூபம் ஆவேன், இது இன்றைய நாளின் பாப்தாதாவின் வரதானம் வெற்றி எனது பிறப்புரிமை, இதை சதா ஞாபகத்தில் வையுங்கள்.

எனவே ஹோலி என்றால் முடிந்ததை முடிப்பது! ஹோலி என்றால் முடிந்து விட்டது! எனில் யார் என்ன செய்திருந்தாலும் இன்று முடிந்ததை முடித்து விட்டு, இனி மேல் முன்னேற, வெற்றி எனது பிறப்புரிமை -அமிர்தவேளை தினமும் இந்த வரதானத்தை நினைவில் இருத்தி, முழு நாளும் சோதனை செய்யுங்கள் மற்றும் வெற்றி சொரூபம் ஆகுங்கள். இப்போதோ அதிகமாகவே ஞானவான்கள் ஆகி விட்டீர்கள், உலகிற்கே செய்தி அளிக்கிறீர்கள் மற்றும் பாப்தாதாவும் கூட ஒவ்வொரு குழந்தைக்கும் இந்த வரதானத்தை அளிக்கின்றார் -வெற்றி உங்களுடைய பிறப்புரிமை! ஆகவே அமிர்தவேளையில் வெற்றி எனது பிறப்புரிமை என்பதை தினமும் நினைவில் வைக்க வேண்டும் மற்றும் நடைமுறையில் ஒருவேளை எந்த ஒரு விஷயம் வந்தாலும் வெற்றியினுடைய வரதானத்தை நினைவு செய்ய வேண்டும் மற்றும் நடைமுறையில் கொண்டு வர வேண்டும்.

இன்று ஹோலி தினத்தினுடைய விசேஷ வரதானம் -தந்தைக்குச் சமமாக, பிரம்மாதந்தைக்குச் சமமாக சம்பன்னம் ஆகவே வேண்டும்.

தந்தையைப் பின்பற்றுங்கள்! ஏனெனில் பிரம்மாதந்தை சாகார் ரூபத்தில் இருந்தார், இப்போதும் கூட உதவி செய்கிறார் ஆதலால் பிரம்மாதந்தையைப் பின்பற்றுங்கள். வெற்றி எனது பிறப்புரிமை, அதிகாரி தானே! அதிகாரி தானே? கை தூக்குங்கள். எங்கு வெற்றியின் அதிகாரம் உள்ளதோ அங்கு மாயாவுடைய பெரிய விஷயம் என்ன இருக்கப் போகிறது. மாயாவின் விளையாட்டைப் பார்த்துக் கொண்டே இருங்கள், மாயாவின் வேலை வருவது, உங்களுடைய வேலை என்ன? வெற்றியடைய வேண்டும். இது சதா நினைவில் இருக்கட்டும் -வெற்றியினுடைய வெற்றி ரத்தினம் நான்! ஆக முடியும் தானே. ஆக முடியுமா? வெற்றியினுடைய அதிகாரிதானே, நல்லது.

இன்று மிக மிக ஏராளமான வாழ்த்துக்கள்! எல்லோரும் நலமா. கை தூக்குங்கள். இப்படித் தூக்குங்கள். மிகவும் நன்றாக உள்ளது. பாப்தாதாவும் கூட ஏராளமான வாழ்த்துக்களின் கூடையை நிரப்பித் தருகின்றார். என்ன வேண்டுமானாலும் ஆகட்டும், நினைவிருக்கட்டும் தந்தையினுடைய பரிசு சிறியது அல்ல! நல்லது.

நாலா புறமும் உள்ள உள்நாடு, வெளிநாடு குழந்தைகளுக்கு இன்றைய நாளின் வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள்!

**சேவையின் வாய்ப்பு -டில்லி, ஆக்ரா:** 25,000-பேர் வந்துள்ளனர், 14,000-டில்லி, ஆக்ராவினர். மிக்க நல்லது. டில்லிக்கு இந்த வரதானம் உள்ளது, நாடகப்படி நமது ராஜ்யத்திலும் டில்லிக்கு விசேஷ இடமுண்டு, அங்கு லக்ஷ்மி நாராயணனின் ராஜ்யம் இருக்கும். வெளிநாட்டினர் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்? நாமும் கூட டில்லியைச் சேர்ந்தவர்களாக இருப்போம் என வெளிநாட்டினர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். எங்கிருந்தாலும் சரி ஆனால் டில்லியோ முக்கியமாக இருக்கும் ஆதலால் வந்து போவது என்பதும் இருக்கும், விழாக்களின்போது வருவீர்கள்தானே. சந்தித்துக் கொண்டே இருப்போம். நடனமாடிக் கொண்டே இருப்போம். குஷியாக ராஜ்யம் செய்து கொண்டிருப்போம். இப்போது சங்கம யுகத்தில் இருப்பது போலவே அங்கும் கூட இருப்பார்கள் எவ்வளவு அருகாமை நிலையின்படி இப்போது இருக்கிறீர்களோ அந்தளவே அங்கும் கூட பரிவாரத்திற்கு அருகாமையில் இருப்பீர்கள். வெளிநாட்டினர் எங்கு

வருவீர்கள்? டில்லியில் வருவீர்கள். எல்லோரும் சேர்ந்தபடி மிக நன்றாக ராஜ்யம் செய்வோம். நல்லது.

<u>இரட்டை வெளிநாட்டினர்:</u> இரட்டை வெளிநாட்டினரோ பாதி ஹால் நிரம்பி உள்ளனர். நன்றாக உள்ளது. இப்போது பாரதவாசிகளைப் போல வெளிநாட்டினர்களும் ஒவ்வொரு நாட்டிலும் இருந்து வந்து தனது லாபத்தை எடுத்துக் கொள்கின்றனர். நன்றாக உள்ளது. நல்லது வந்தீர்கள் மற்றும் சென்று, பின் மற்றவர்களையும் கூட கூட்டி வருவீர்கள். நல்லது.

நல்லது. ஒவ்வொரு குழந்தைக்கும் பாப்தாதா உள்ளத்தின் அன்பைக் கொடுத்தபடியே 'குட் நைட்' (good night) கூறுகின்றார். நல்லது, இரட்டை வெளிநாட்டினர் நன்றாக முன்னேற்றம் அடைந்துள்ளனர். முயற்சியிலும்கூட ஆங்காங்கு மிக நல்ல கவனம் கொடுத்துள்ளனர், பாப்தாதா அந்தக் குழந்தைகளுக்கும் விசேஷமாக ஒவ்வொருவருக்கும் அன்பு மற்றும் நினைவுகளைத் தருகின்றார்.

<u>தாதிகளுடன்</u>: எல்லோரும் நன்றாக நடத்தி கொண்டிருக்கிறீர்கள். நிமித்தமாகி காரியம் செய்து கொண்டிருக்கிறீர்கள், நன்றாகச் செய்து கொண்டிருக்கிறீர்கள், செய்து கொண்டே இருப்பீர்கள்.

<u>மோஹினி சகோதரி:</u> ஒவ்வொருவருக்கும் வரதானம் உண்டு. வரதானம் நடத்திக் கொண்டிருக்கிறது மற்றும் கூடவே வந்தடைந்து விடுவீர்கள். ராஜ்யமும் கூடவே செய்வீர்கள் தானே. இன்று எல்லா பக்கத்திலிருந்தும் தாதிகள் வந்துள்ளனர்.

<u>ருக்மணி தாதி:</u> இப்போது நன்றாக பார்ப்பதில்லை ஆனால் புத்தி நிறைந்து உள்ளது அதனால் இப்போதும்கூட எது நடக்கிறதோ அதைத் தெரிந்தும் உள்ளீர்கள், நடந்து கொண்டுமிருக்கிறீர்கள், நடத்திக் கொண்டுமிருக்கிறீர்கள். சரிதானா, வாழ்த்துக்கள். நல்லது.

<u>மூன்று சகோதரர்கள்:</u> திரிமூர்த்தி முழு யக்ஞத்தின் மீதும் கவனம் வைத்திருக்கிறீர்கள். இந்த திரிமூர்த்தியின் யக்ஞத்தைப் பார்த்துக் கொள்வதற்கு நிமித்தமாகி இருக்கிறீர்கள் மற்றும் துணைவனாகவும்

இருக்கிறீர்கள். கூட இருப்பவர்களும் மிகச் சிறந்தவர்கள். எப்படி நடத்திக் கொண்டிருக்கிறீர்களோ அதுவும் கூட சரிதான் மற்றும் ஒருவர் மற்றவருக்கு அருகில் வாருங்கள். சம்ஸ்காரத்தில் அருகில் வாருங்கள். எப்படியும் அருகில் இருக்கிறீர்கள் ஆனால் சம்ஸ்காரம் ஒத்துப்போவதிலும் கவனம் தேவை. அப்படித் தெரியணும் மூவர் இல்லை ஆனால் ஒருவர் என. கூட இருப்பவர்களும் இன்னும் சிறந்தவர்கள். பாப்தாதாவிடம் எவ்வித புகாரும் இல்லை, நன்றாகவே உள்ளது ஆனால் இன்றும் நன்றாக ஆக வேண்டும். யக்ஞத்தின் வேலைகள் மிகவும் நன்றாக நடந்து கொண்டிருக்கிறது, பரவாயில்லை, கவனத்துடன் இருக்கிறீர்கள் மற்றும் இனியும் கவனத்துடன் இருப்பீர்கள். ஒவ்வொருவரும் எடுத்துக் கொண்ட பொறுப்பை நன்றாக கவனித்துக் கொண்டிருக்கிறீர்கள், பாப்தாதாவிற்கு குஷி!

ஹரித்துவாரில் சந்யாசிகளின் மாநாடு நடக்கவிருக்கிறது, இதற்கான உங்களுடைய பிரேரணை தேவை: எப்போதும் இத்தகைய மதப்பற்றுள்ள இடங்களுக்குச் செல்லும்போது அங்குள்ளவர்கள் மீது சுப பாவனை வைத்து, அவர்களை மகிமை செய்ய வேண்டும், அப்போது அவர்கள் புரிந்து கொள்வார்கள் இவர்கள் நமக்கு மதிப்பு மரியாதை அளிக்கிறார்கள் என்று. நல்லது.

ரமேஷ் சகோதரர்: பலருடைய நினைவுகளைக் கூறினார், அனைவருக்கும் கூறுங்கள் பாப்தாதாவும் நினைவுகளை அளித்தார் என்று.

குஜராத்தில் சரளா தீதியுடைய அம்ருத் மஹோத்சவத்தை அனைவரும் விமரிசையாகக் கொண்டாடினார்கள்: நல்லது. பிறந்ததிலிருந்தே அவர் வரதானி ஆவார். இப்போது வரதானமோ உங்கள் கழுத்து மாலையாகி விட்டது ஆதலால் எப்படி நிமித்தமாகி சென்று கொண்டிருக்கிறீர்களோ அப்படியே இன்னும் முன்னேறிக் கொண்டே செல்லுங்கள், அதிகப்படுத்திக் கொண்டே செல்லுங்கள், அதிகப்படுத்திக் கொண்டே செல்லுங்கள். நல்லது.

அமர் சகோதரி: இவரும் நன்றாக உதவி புரிகிறார். நல்லது, இருவருமே நல்லவர்கள்.

நல்லது. ஒவ்வொருவருக்கும் பாப்தாதா அன்பு நினைவுகளை விசேஷமாகக் கொடுக்கின்றார். மேடை மீது வந்தால் சற்று குழப்பமாகி விடும் ஆனால் பாப்தாதா தூரத்திலிருந்தே ஒவ்வொருவருக்கும் திருஷ்டி மற்றும் அன்பைத் தருகின்றார்.

(பாபா அடுத்த சீசனில் வருவாரல்லவா!). சங்கம யுகமோ கூடவே இருப்பதற்கான யுகம், கூடவே செல்வதற்கானது, கூடவே ராஜ்யம் செய்வதற்கானது. தந்தை வேண்டுமானால் சாகாரத்தில் கூடவே இருக்க மாட்டார் (சிவபாபா சத்யுக ராஜ்யத்தில் கூடவே இருக்க மாட்டார்) ஆனால் கூடவே உங்களுடைய ராஜ்யத்திற்கானத் தூண்டுதல் தந்து கொண்டே இருப்பார். (ரதத்தையும் கூட சரியாக வைக்க வேண்டியுள்ளது). ரதத்தைச் சரியாக வைப்போம். நல்லது.

ருக்மணி சகோதரி: தாதி நிர்மல் சாந்தா அவர்களுடைய நினைவைத் தந்தார், இன்று தீதியினுடைய புண்ணிய நினைவு நாள் -எங்கிருந்தாலும், குழந்தை குஷியாக உள்ளது, நீங்களும் குஷியாக இருங்கள். (பாபா, பாட்னா சேவைக்குச் செல்கின்றேன்). நல்லது, முன்னேறிக் கொண்டே செல்லவும்.

'எதிர்காலத்தின் சக்தி' (The Future of Power) நிகழ்ச்சி பாரதத்தில் 35-இடங்களில் நடந்தது, அதன் பொருட்டு மிக அழகிய கேக் செய்யப்பட்டது, அதை பாப்தாதா மற்றும் மூத்த தாதிகள், சகோதரர்கள் வெட்டினார்கள்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## **30.03.2014 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்**

## எப்பேற்பட்ட சுற்றுப்புற சூழ்நிலையைப் பார்த்தாலும் பாபாவின் அன்பு (சிநேகம்) மற்றும் சகயோகத்தின் மூலமாக முன்னோக்கி சென்று கொண்டே இருங்கள், ஒவ்வொருவருடைய சிறப்புத்தன்மையைப் பாருங்கள். தானும் தீவிர முயற்சியில் ஊக்கம் மற்றும் உற்சாகத்தில் இருக்க வேண்டும் மற்றும் உடன் இருப்பவர்களுக்கும் ஊக்கம் உற்சாகத்தைக் கொடுக்க வேண்டும்!

ஓம் சாந்தி! இன்று பாப்தாதா ஒவ்வொரு குழந்தைகளுக்கும் பாப்தாதாவிடம் மனதில் எவ்வளவு அன்பு இருக்கிறது, இந்த அன்பின் தோற்றத்தை ஒவ்வொரு குழந்தைகளின் முகத்தின் மூலமாகப் பார்த்துக் கொண்டிருக்கின்றார். எவ்வளவு குழந்தைகளினுடைய அன்பு பாப்தாதாவிடம் உள்ளதோ அதைவிட அதிகமாக ஒவ்வொரு குழந்தைகளுக்காகவும் பாபாவின் மனதில் அன்பு உள்ளது இந்த மனதின் அன்பானது அனைத்துக் குழந்தைகளையும் அந்த சக்தியின் மூலம் நடத்திக் கொண்டிருக்கின்றது. பாப்தாதா பார்த்துக் கொண்டிருக்கின்றார். ஒவ்வொரு குழந்தைகளுக்குள்ளும் பாபாவிடம், பாப்தாதா இருவரிடத்திலும் மனதில் மிக அதிகமான அன்பு உள்ளது. பாப்தாதாவிற்கும் ஒவ்வொரு குழந்தைகளுக்காகவும் மனதில் அன்பு உள்ளது. ஒவ்வொருவரினினுடைய மனதிலும் பாப்தாதாவின் அன்பு

நினைவுகள் நிறைந்துள்ளது. இந்த அலௌகீக அன்பு ஒவ்வொருவரையும் நடத்திக் கொண்டிருக்கின்றது. ஆங்காங்கே எவ்வளவு குழந்தைகள் இருந்தாலும் பாப்தாதா வினுடைய மனதின் அன்பானது குழந்தைகளை வழி நடத்திச் செல்கிறது. ஒவ்வொரு குழந்தையும் பாப்தாதாவின் அன்பில் பரிவாரத்தின் அன்பில் வரிசைக்கிரமமாக நடந்து கொண்டிருக்கின்றனர். இந்த அலௌகீக அன்பினை முழு கல்பத்தில் இந்த சங்கமயுகத்தில் மட்டும் தான் அனுபவம் செய்கின்றீர்கள். பாப்தாதாவும் ஒவ்வொரு குழந்தைகளின் மனதின் அன்பைப் பார்த்து ஒவ்வொரு குழந்தைக்காகவும் மனதார ஆசீர்வாதத்தைக் கொடுக்கின்றார், குழந்தைகள் சதா மனதில் அன்பானவரின் மனதின் அன்பை எடுத்துக் கொண்டு முன்னோக்கிச் செல்லுங்கள். பாப்தாதாவின் மனதின் அன்பு, பரிவாரத்தின் மனதின் அன்பு ஒவ்வொரு ஆத்மாவையும் நடத்திக் கொண்டிருக்கின்றது மேலும் நடத்திக் கொண்டிருக்கும். பாபாவின் அன்பு எவ்வாறு ஒவ்வொரு குழந்தையையும் நடத்திக் கொண்டிருக்கின்றது என்பதை பாப்தாதா ஒவ்வொரு குழந்தையின் நெற்றியின் ரேகையின் மூலமாகப் புரிந்து கொள்கிறார். இப்பொழுது பாப்தாதா ஒவ்வொரு குழந்தையையும் மகாவீரர்களாக்கி நடந்து கொள்வதற்கான ஆசீர்வாதத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கின்றார்: ஒருபொழுதும் களைப்படையக்கூடாது, பயப்படக்கூடாது. பாபாவிற்கு ஒவ்வொரு குழந்தையும் மிகவும் அன்பானவர் தான். இந்த அன்பு தான் முன்னோக்கிச் செல்ல வைக்கின்றது. மேலும் முன்னோக்கி சென்று கொண்டிருப்பீர்கள். இந்த மாதிரி பிரபுவினுடைய அன்பு, மனதினுடைய அன்பு ஒவ்வொருவரையும் வரிசைக்கிரமமாக அனுபவத்தின் மூலம் நடக்கிறார்கள். மேலும் ஒவ்வொரு குழந்தையின் மனதிலும் ஊக்கம், உற்சாகம் உள்ளது ஆனால் வரிசைக்கிரமமாக பாபாவிற்குச் சமமாக மாற வேண்டும். அனைவருக்கும் ஊக்கம் உள்ளது தானே! பாபாவிற்குச் சமமாக மாற வேண்டும் தானே! மாறிக் கொண்டிருக்கின்றீர்கள், மேலும் மேலும் ஆவீர்கள். கையை உயர்த்துங்கள். பாபாவிற்கும் மனதார அன்பு உள்ளது. சதா குழந்தைகளினுடைய குணத்தைப் பாடுகின்றார், ஆஹா குழந்தாய்! ஆஹா! என்று, விருத்தி அடைந்துள்ளீர்கள், மேலும் விருத்தியாகிக் கொண்டே செல்லுங்கள். பாருங்கள், முழு உலகத்திலும் பாப்தாதாவினுடைய சம்மந்தத்தை நடைமுறையில் அனுபவம் செய்யக்கூடியவர்கள் எவ்வளவு பேர்? மேலும் யார் உள்ளார்! நீங்கள்

அனைவரும் வெளிப்படுத்துபவர்கள், மனதார அன்பு உள்ளது. மேலும் அன்பினுடைய பாலனையின் மூலமாக மேலும் மேலும் முன்னோக்கி செல்கின்றீர்கள். அனைவரும் அன்பின் பாலனையின் மூலமாக முன்னோக்கிச் செல்கிறீர்களா? அல்லது ஏதாவது தடைகள் வந்து விட்டால் நின்று விடுவது இல்லை தானே! பாப்தாதா பார்க்கின்றார் முன்னோக்கி செல்வதற்கான சங்கல்பம் அதிகமான குழந்தைகளிடம் உள்ளது, எவ்வளவு தான் சிறிதாகவோ, பெரியதாகவோ தடைகள் வந்தாலும் அநேக குழந்தைகள் பாபாவினுடைய அன்பு மற்றும் ஞான ஆதாரத்தின் மூலமாக நன்றாக முன்னோக்கி சென்று கொண்டிருக்கின்றனர், மேலும் செல்வார்கள் என்பதை பாப்தாதா பார்க்கின்றார். பாப்தாதா குழந்தைகளாகிய உங்களைப் பார்த்து ஒரு விஷயத்தில் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றார். அது எந்த விஷயம்? விசயங்கள் எவ்வளவு தான் வந்தாலும் பயமற்றவர்களாக அநேகர் முன்னோக்கிச் செல்கின்றார்கள். பாப்தாதா குழந்தைகளின் லட்சியம் மற்றும் லட்சணத்தைப் பார்த்து மகிழ்ச்சி அடைகின்றார், ஆகையினால் ஒருபோதும் எப்பேற்பட்ட சூழ்நிலை வந்தாலும் அதனுடைய பிரபாவத்தில் வராமல் பாபாவின் சிநேகம் மற்றும் சகயோகத்தின் மூலம் அநேகர் முன்னோக்கிச் செல்கின்றனர், மேலும் முன்னோக்கிச் செல்ல வேண்டும். ஒருவரை ஒருவர் பார்க்கும்பொழுது அவருடைய சிறப்புத் (விசேஷம்) தன்மைகளைப் பாருங்கள், மற்ற விசயங்களைப் பார்க்காதீர்கள். முன்னோக்கிச் செல்ல வேண்டும். முன்னோக்கிச் செல்ல வேண்டும் என்ற லட்சியம் உள்ளது தானே, கூறுங்கள். அவர்கள் கையை உயர்த்துங்கள். ஒருவர் மற்றவர்களுடைய பலவீனமான விசயங்களைக் கேட்டாலும், கேட்காமல் இருக்க வேண்டும். தானும் முன்னோக்கி செல்லுங்கள் மேலும் கூட இருப்பவர்களையும் முன்னேறச் செய்யுங்கள். பாப்தாதா இந்த மாதிரி குழந்தை களையும் பார்க்கின்றார், நல்ல முயற்சி செய்து கொண்டிருக்கின்றார்கள், ஆனால் தீவிர முயற்சியினுடைய அலைகளை தன்னிடம் கொண்டு வந்து பிறரிடமும் தீவிர முயற்சியின் அலைகளைக் கொண்டு வாருங்கள். ஊக்கம் உற்சாகத்தில் கொண்டு வாருங்கள், உதவியாளராகவும் மாறுங்கள். முயற்சி செய்யாதவர்களின் சூழ்நிலையில் வராமல் அவர்களையும் ஊக்கம் உற்சாகத்தில் கொண்டு வாருங்கள். இடையிடையே ஏதாவது ஆத்மாக்களுக்கு முயற்சியில் களைப்பின் அனுபவம் ஏற்படுகின்றது, பாப்தாதா பார்க்கின்றார், சுயம் முயற்சியில்

தீவிரமாக இருக்கக்கூடியவர்கள் பிறரையும் முயற்சியில் முன்னேறச் செய்யுங்கள். சுற்றுப்புற சூழ்நிலையின் அட்டவணையை அந்தமாதிரி மாற்ற வேண்டும். அனைவரும் முயற்சியில் ஊக்கம் உற்சாகத்தின் மூலம் முன்னேறிச் செல்ல வேண்டும், முன்னேற வைக்க வேண்டும். ஏனென்றால் ஒருவர் மற்றவரும் கூட இருப்பவர் தானே! ஆகையினால் அனைவர் மீதும் சுபபாவனையின் ஆதாரத்தில் முன்னேறிச் செல்லுங்கள், ஊக்கம் உற்சாகத்தோடு தன்னுடைய அனுபவத்தையும் கூறி ஒருவருக்கொருவர் உதவியாளராக மாறுங்கள்.

அநேகரின் முயற்சியின் அலை சரியாக சென்றுக் கொண்டிருக்கின்றது ஆனால் கூடயிருப்பவர்களிடம் முயற்சியில் தொய்வு ஏற்படுவதன் காரணமாக கொஞ்சம், கொஞ்சம் அதனுடைய பாதிப்பு ஏற்படுகிறது என்பதை பாப்தாதா பார்த்துக் கொண்டிருக்கின்றார். அதில் கவனம் வைக்க வேண்டும். நான் முதலாவதாகவோ அல்லது எட்டாவது வரையிலும் வந்தே ஆக வேண்டும். அனைவருக்கும் ஊக்கம் உற்சாகம் உள்ளது! எட்டுக்குள் வர வேண்டும் தானே! அல்லது பின்னாடி போய் விடுவீர்களா? நான் வெற்றி அடைவேன் என்று புரிந்திருப்பவர்கள், மேலும் பிறரையும் அடைய வைப்பேன் என்பவர்கள் கையை உயர்த்துங்கள். கையை அனைவரும் நன்றாக உயர்த்துகின்றீர்கள். அதற்கு நன்றி ஆனால் கையை எப்பொழுதுமே உயர்த்திக் கொண்டிருக்க வேண்டும். அவ்வப்போது இல்லை. சுற்றுபுறச் சூழ்நிலை எவ்வாறு இருந்தாலும் சரி, ஆனால் நீங்கள் உங்களுடைய சூழ்நிலையின் மூலமாக மற்ற சூழ்நிலையை மாற்றம் செய்யுங்கள். சூழ்நிலையில் வராதீர்கள், முன்னேறிச் செல்லுங்கள். மேலும் முன்னேறச் செய்யுங்கள். ஒருவருக்கொருவர் உதவியாளர் தானே! ஆகையால் சதா கொடுப்பது என்றாலே முன்னேறுவதாகும். மேலும் முன்னேறிக் கொண்டேயிருங்கள். இப்பொழுது ஒவ்வொரு குழந்தைகளும் எந்த ஒரு லட்சியத்தில் இருக்கிறீர்கள். தீவிர புருஷார்த்தி முயற்சியில் தொய்வில்லை தானே! சரியாகி விடும், சரியாகி விடும் இந்த மாதிரி நினைக்காதீர்கள். சரியாகியே தீர வேண்டும், ஏனென்றால் பாபாவிடம் அன்பு உள்ளது தானே! பாபாவிடம் அன்பு உள்ளது என்றால் பாபாவிற்கு யாரிடம் அன்பு உள்ளது? தீவிர முயற்சி செய்யும் குழந்தைகளிடம். இப்போது நீங்கள் என்னவாக மாறுவீர்கள்? தீவிர முயற்சியாளர். யார் தன்னை தீவிர

முயற்சியாளராக்கி பிறருக்கும் உதவி செய்வேன் என்று நினைக்கின்றவர்கள் கையை உயர்த்துங்கள். கையை உயர்த்துவதில் அனைவரும் உஷாரனவர்கள்! பாப்தாதாவிற்கு மகிழ்ச்சி. தைரியம் வைத்துள்ளீர்கள் தானே! அப்படியானால் தைரியம் குழந்தைகளினுடையது, உதவி பகவானுடையது (குதா) நிச்சயமாக உதவி கிடைக்கும். ஆக வேண்டும் என்ற இந்த ஆசையை மட்டும் வையுங்கள், செய்தே ஆக வேண்டும். முயற்சி செய்யாதவர் அல்ல. முயற்சியாளர்.

பாப்தாதா மகிழ்ச்சி அடைகின்றார். ஒரு சில குழந்தைகளை இப்பொழுதும் பார்த்துக் கொண்டிருக்கின்றார், முயற்சியில் விசயங்கள் வரும் போது பலவீனம் அடைகின்றார்கள், ஆனால் கூடாது. தைரியசாலியாகி, தைரியசாலியாக பிறரையும் மாற்றுங்கள். தினசரி வரக்கூடியவர்களிடம் தீவிர முயற்சி செய்ய வேண்டும் என்ற லட்சியம் ஓரளவாவது உள்ளது. லட்சியமே இல்லை என்று கூற முடியாது. லட்சியம் உள்ளது. இடையில் ஏதாவது விசயங்கள் வந்து விட்டால் முயற்சி என்ற விசயத்தில் கொஞ்சம் யோசிக்கின்றார்கள். அதனால் செய்வதில் சிறிது காலதாமதம் ஆகின்றது. ஆகையால் தினமும் அமிர்தவேளையில் சோதனை செய்யுங்கள் -என்னுடைய முயற்சியின் நிலை தீவிரமாக அல்லது நடந்து கொண்டிருக்கிறது அடைந்து விடலாம், ஆகி விடலாம், இந்த மாதிரி எண்ணங்களை வைக்கவில்லை தானே! தீவிர முயற்சியாளர் ஆகுங்கள். முயற்சி செய்கின்றீர்கள், ஆனால் சோதனை செய்யுங்கள் தீவிர முயற்சியாளராக இருக்கின்றேனா? பாப்தாதாவிற்கு மிகவும் பிடித்தமானவர் யார்? தீவிரமாக முயற்சி செய்பவர்கள் தான். ஆகையால் ஒவ்வொரு குழந்தையும் என்னவாக மாற வேண்டும்? தீவிர முயற்சியாளராக மாற வேண்டும் தானே! கையை உயர்த்துங்கள். ஆக வேண்டும். ஆக வேண்டுமா அல்லது ஆகிக் கொண்டேயிருக்கின்றீர்களா? இந்த லட்சியதை ஒருபோதும் விடக்கூடாது. தீவிர முயற்சி செய்பவர்களாகவே இருக்க வேண்டும். பிறரையும் கூட மாற்ற வேண்டும் இந்த லட்சியம் இருக்க வேண்டும். யாருடைய மனதில் இந்த இலட்சியம் உள்ளதோ அவர்கள் கையை உயர்த்துங்கள். நல்லது. கையை அனைவரும் உயர்த்துகின்றீர்கள்.

சிறிது மந்தம் ஏற்பட்டாலும் தீவிரமாக மாற்றி விடுங்கள், ஏனென்றால் ஒவ்வொரு மாயாவும் தன்னுடைய வேலையை செய்து கொண்டிருக்கின்றது ஆனால் நீங்கள் அனைத்து குழந்தைகளும் யார்? உங்களுடைய பட்டம் என்ன? மாயாஜீத் (மாயை வென்றவர்கள்) யார் மாயை வென்றவர்களாக ஆவீர்கள்? அவர்கள் கையை உயர்த்துங்கள். அனைவரும் கையை உயர்த்துகின்றார்கள். பாப்தாதாவிற்கு மகிழ்ச்சி ஏற்படு கின்றது. ஏனென்றால் தைரியம் வைத்திருக்கிறார்கள். தைரியம் குழந்தைகளினுடையது உதவி பாபாவினுடையது. தைரியத்தை ஒருபோதும் விடக்கூடாது. பாப்தாதாவின் உதவி முதலில் உள்ளது. தைரியத்தை விட்டு விட்டால் அனைத்தும் போய் விடும். தைரியம் உள்ளது என்றால் தைரியம் குழந்தைகளினுடையது. உதவி செய்வதற்காக பாபா இருக்கின்றார். சரி தானே! தைரியசாலி குழந்தைகள் கையை உயர்த்துங்கள். சிலர் இரண்டு கையையும் உயர்த்துகிறார்கள். நல்லது. கையை உயர்த்துவது சகஜம் ஆனால் முயற்சியினுடைய கையை உயர்த்த வேண்டும். பாப்தாதா மகிழ்ச்சி அடைகின்றார், எப்பொழுதும் குழந்தைகளிடம் ஊக்கம் மற்றும் உற்சாகத்தின் அலைகள் இருக்கின்றது ஏனென்றால் ஒவ்வொரு குழந்தைகளிடமும் முதல் நம்பரில் வருவதற்காக லட்சியம் இருக்கின்றது. இருக்கிறது தானே! இரண்டாம் நம்பரில் வருவதில்லை தானே! முதல் நம்பரில் வந்தே ஆக வேண்டும் என்று எண்ணுபவர்கள் கையை உயர்த்துங்கள். அனைவரும் கையை உயர்த்துகிறார்கள், கையை நன்றாக உயர்த்துகிறார்கள், பாப்தாதா மகிழ்ச்சி அடைகின்றார். நீங்கள் கையை உயர்த்துவதைப் பார்த்து மகிழ்ச்சி அடைகின்றார் ஆனால் மகிழ்ச்சி அடைய வைத்துக் கொண்டே யிருக்க வேண்டும். நல்லது.

<u>இந்த முறை சேவையின் வாய்ப்பு யாருடையது? இந்தூர் மற்றும் போபால் மண்டலம்: (10-ஆயிரம் பேர் வந்துள்ளனர்)</u> பாதி வகுப்பும் அவர்கள் தான். இந்த முறை மொத்தமாக 26-ஆயிரம் பேர் வந்துள்ளனர். அனைத்தைவிடம் விட மிகப் பெரிய குரூப். அப்படி என்றால் வெற்றி தானே? வாழ்த்துக்கள்! யார் சேவைக்காக வந்தவர்கள் கையை உயர்த்துங்கள். நல்லது. தைரியம் குழந்தைகளினுடையது. உதவி பாபாவினுடையது நல்லது. எப்பொழுதுமே தைரியத்தை ஒவ்வொரு காரியத்திலும் வைக்க வேண்டும். நாம் செய்யவில்லை என்றால் வேறு

யார் செய்வார்கள்? நாம் தானே இருக்கின்றோம், அப்படித் தானே! நாம் தான் இருக்கின்றோம் மேலும் பாப்தாதா மகிழ்ச்சி அடைகின்றார். ஏனென்றால் தைரியத்திற்காக உதவி கிடைக்கிறது. நல்லது. வாழ்த்துக்கள்! வாழ்த்துக்கள்!!

இரட்டை அயல் நாட்டு சகோதர சகோதரிகளுக்காக: பாப்தாதா அனைத்து குழந்தைகளின் மீதும் மகிழ்ச்சியாக இருக்கின்றார். ஏனென்றால் வெளி நாட்டினர் இந்த சபையின் பாக்கியத்தை நல்ல முறையில் வெளிப்படுத்துகின்றார். வெளிநாட்டினரைப் பார்த்து மகிழ்ச்சி அடைகின்றார், ஏனென்றால் ஒவ்வொரு முறையிலும் வெளிநாட்டைச் சேர்ந்தவர்கள் கையை உயர்த்தாதவர்கள் இல்லை. மேலும் நல்ல எண்ணிக்கை கயோடு (அதிகமானோர்) வருகின்றார்கள். ஆகையால் வாழ்த்துக்கள்! வாழ்த்துக்கள்! வாழ்த்துக்கள்!!

மதுபன் நிவாசிகளுடன்: நல்லது. மதுபனைச் சார்ந்தவர்களுக்கு அழைப்பு கிடைக்கின்றது. ஆகையால் மதுவனத்தைச் சேர்ந்தவர்கள் நன்றாக சேவை செய்து வருகின்றார்கள். சேவையின் ரிசல்ட் நன்றாக உள்ளது. பாப்தாதா மகிழ்ச்சி அடைகின்றார். ஏனென்றால் மதுபன் நிவாசிகள் ஒவ்வொரு துறையையும் சார்ந்தவர்கள் ஒவ்வொரு துறையிலும் கவனம் வைத்துள்ளார்கள். ஆகவே வாழ்த்துக்கள் வாழ்த்துக்கள். வாழ்த்துக்கள்! மதுபன் வாசிகளுக்காக, நல்லது.

முதல் முறையாக அதிகமானோர் வந்துள்ளனர்: பாதி வகுப்பு முதல் முறையாக வந்தவர்கள் தான். நன்றாகக் கையை உயர்த்துங்கள். நல்லது. நாலா புறமும் இருக்கின்ற விசேஷமான சகோதர சோகதரிகளுக்கு, யார் எப்பொழுதுமே கட்டளை நிலையாக இருக்கின்றார்களோ அந்த மாதிரி குழந்தைகள் பாப்தாதாவின் கவனத்தில் உள்ளார்கள். யார் ஒவ்வொரு காரியத்திலும் முன்னேறிச் செல்கின்றார்களோ அவர்களையும் பாப்தாதா பார்த்துக் கொண்டிருக்கின்றார். விதவிதமான செயல்களில் அந்த ஆத்மாக்கள் தான் கையை உயர்த்துகின்றார்கள். நல்லது. அந்த மாதிரி முயற்சி செய்யக்கூடிய குழந்தைகளை பாப்தாதா பார்க்கின்றார். அவர்களுக்கு விசேஷமாக மிக மிக மிக மனதார அன்பு நினைவுகளை உரித்தாக்குகின்றார்.

**தாதி ஜானகிஜி:** அன்பு நினைவுகளைக் கொடுத்திருந்தார்கள். அவர்களுக்கு உடல் நிலை சரியில்லை, அறையில் இருந்து கேட்டுக் கொண்டிருக்கின்றார். ஜனக் குழந்தைக்கு விசேஷமாக அன்பு நினைவுகளை தருகின்றார். உங்கள் அனைவரின் சார்பாக அன்பு நினைவுகளைக் கொடுக்கின்றேன். ஏனென்றால் அவரின் மனம் இங்குள்ளது, பாக்கி சரீரம் அங்குள்ளது. சபையினர் அனைவருமே அவர்கள் முன்னால் இருக்கின்றனர். நல்ல முயற்சியில் நம்பர் எடுத்துக் கொண்டிருக்கின்றார். ஆகையினால் நோயிலும் முதல் நம்பரில் வந்து விட்டார், இல்லையென்றால், ஒருபொழுதும் வாய்ப்பை இழப்பதில்லை. பாப்தாதா மிக மிக மனதார அன்பைக் கொடுத்துக் கொண்டிருக்கின்றார். உங்களுக்காகவும் (தாதி ஜனாகி கூறுகின்றார்கள் பாபா, அந்த மாதிரி ஒரு மந்திரம் செய்யுங்கள் நான் உங்கள் முன்னால் வரவேண்டும்). இப்பொழுது எழுந்திருப்பது சரியல்ல. வலி உள்ளது தானே!

**மோகினி சகோதரி:** இவர் கூட தைரியம் வைத்துள்ளார். வாழ்த்துக்கள்! முன்னேறுங்கள்!

**ஈஷு தாதி:** எவர் ரெடி! ஒவ்வொரு விசயத்திலும் சரி சரி (ஹான்ஜி) நல்லது, தன்னுடைய பாகத்தை நன்றாக நடிக்கின்றீர்கள்.

**ருக்மணி தாதி:** நன்றாக உள்ளீர்கள் தானே! நல்லது. தைரியம் வைத்து இவ்வளவு முன்னேறி உள்ளீர்கள். நல்லது டில்லியில் உள்ள அனைவருக்கும் மிக மிக வாழ்த்துக்கள், ஒவ்வொரு காரியத்திலும் கவனம் வைத்துள்ளீர்கள். எதற்கும் தயாராக உள்ளீர்கள் (எவர்ரெடி).

(நிர்வயர் சகோதரர் மீட்டிங் சமயத்தில் பாப்தாதா வரவேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக் கொண்டார்): பார்க்கலாம்.

**பிரிஜ்மோகன் சகோதரர்:** நன்றாக நடக்கின்றது. மேலும் மெது மெதுவாக முன்னேற்றம் அடையும்.

**காம்தேவி நிலையத்தின் பொன்விழா:** (மும்பாய்) காம்தேவி அஸ்திவரமாக உள்ளது. நன்றாக நடத்தினீர்கள். (அனைவரும் அன்பு நினைவுகளை கொடுத்தார்கள்) அனைவருக்கும் மிகுந்த அன்பு நினைவுகளைக் கொடுங்கள்.

காட்லி ஸ்டீயோ இரட்டை அயர்நாட்டினரின் சேவையின் செய்தியைக் கொடுப்பதற்கான சாதனம் செய்துள்ளார்கள்: மிக நல்லது.

**கல்கத்தா பாங்கூர் சேவா நிலையத்தின் வெள்ளி விழா:** அனைவரின் சார்பாக பாப்தாதாவின் வாழ்த்துக்களை தெரிவிக்கின்றார். வாழ்த்துக்கள்!

(ஹாலின் வெளியிலும், புல் வெளியிலும், கான்பிரன்ஸ் ஹாலிலும் அநேக சகோதர சகோதரிகள் இருக்கின்றனர்) நாலா பக்கத்திலும் உள்ள எங்கெங்கெல்லாமோ குழந்தைகள் பார்த்துக் கொண்டிருக்கின்றார்களோ பாப்தாதாவும் உங்களைப் பார்த்து அன்பு நினைவுகளைத் தருகின்றார். மேலும் குட் நைட் கூறுகின்றார்.

✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳

## 12.10.2014 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# தீபாவளி திலாராம் (மனதைக் கொள்ளை கொள்பவர்) மற்றும் தீபங்களின் நினைவார்த்தமாகும் -ஒவ்வொரு குழந்தையின் உள்ளத்திலும் திலாராம் நிறைந்திருக்கின்றார்!

ஒவ்வொரு இனிமையிலும் இனிமையான மிக அன்பான தீபத்திற்கு பாபா திலாராம் தீப ராஜருடைய அநேக நல்வாழ்த்துக்கள்! உள்ளத்தில் அன்பு சிநேகம் இருக்கட்டும்! ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் பாப்தாதா நிறைந்துள்ளார். தீபராஜ் உங்களுடைய உள்ளத்தில் நிறைந்திருக்கின்றார் இல்லையா? ஆமாம்! கை உயர்த்துங்கள். எல்லோருடைய உள்ளமும் (வாய் மூலம்) பேசாவிட்டாலும் கூட பேசிக் கொண்டு தான் இருக்கிறது. என்ன பேசுகிறது? தீபராஜனுடைய தீபமான குழந்தைகள் மேலும் அந்த தீபங்கள் சதா, ஒளிர்விட்டுக் கொண்டிருக்கக்கூடிய தீபங்கள் அப்படித்தானே? அப்படியென்றால் கை உயர்த்துங்கள்! ஆஹா! தீப ராஜரின் தீபங்களே ஆஹா! பாப்தாதாவிற்கு தன்னுடைய தீபங்களான குழந்தைகளைப் பார்த்து பார்த்து மிகவும் குஷி ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. மேலும் உள்ளமானது அடிக்கடி ஆஹா! எனது தீபமான குழந்தைகளே! என்று கூறிக் கொண்டும் இருக்கிறது. ஒவ்வொரு குழந்தையும், அதாவது ஒவ்வொரு தீபமும் பாபாவிற்கு மிகவும் அன்பிற்குரியதே! மிகவும் அன்பானது. இல்லையா? அல்லது உள்ளத்தில் வேறு ஏதாவது இருக்கிறதா? திலாராம் தான் பாபா. ஆக பாப்தாதா பார்த்துக் கொண்டிருக்கின்றார், ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் திலாராம் பாபாவே தென்படுகிறார். இவ்வாறு திலாராமினுடைய உள்ளத்தில் நிறைந்திருப்பது தீபாவளியினுடைய நினைவார்த்தமாகும் பெயரே திலாராம் மற்றும் தீபங்கள் என்றுள்ளது! ஒவ்வொவருடைய உள்ளத்திலும் எனது பாபா நிறைந்துள்ளது. எங்கு

என்னுடையது என்று கூறுகின்றீர்களோ அப்பொழுது அந்த என்னுடையதால் (வார்த்தை) மறப்பது மிக குறைவே! ஆக ஒவ்வொருவரின் உள்ளத்திலும் யார் இருக்கின்றார். என்னுடைய பாபா! பாபாவினுடைய உள்ளத்தில் யார் இருக்கின்றார்? ஒவ்வொரு குழந்தையும்! ஒவ்வொரு குழந்தையையும் பார்த்து பாப்தாதா என்ன நினைக்கின்றார்? ஆஹா! எனது அருமை குழந்தைகளே ஆஹா! வரிசைக்கிரமமாக குழந்தைகள் இருக்கலாம் ஆனால் பாபாவைப் பொருத்தமட்டில் ஒவ்வொரு குழந்தையும் ஆஹா, ஆஹா! ஒவ்வொருவரின் உள்ளத்திலும் பாபா நிறைந்திருக்கின்றார். உங்களுடைய உள்ளத்தில் யார் இருக்கின்றார் என யாராவது கேட்டால் என்ன சொல்வீர்கள்? என்னுடைய பாபா. ஏனெனில் என்னுடைய ஒன்றை மறப்பது கடினமே! நினைவு செய்வது மிக எளிது. மறப்பது கஷ்டமாகும். பாப்தாதா பார்த்துக் கொண்டிருக்கின்றார், பெரும்பாலோருடைய உள்ளத்தில் பாப்தாதா நிறைந்திருக்கின்றார், பாபாவும் ஒவ்வொரு குழந்தையையும் பார்த்து பார்த்து கூறுகின்றார், ஆஹா எனதருமை குழந்தையே ஆஹா! இந்த சம்மந்தம் சங்கமயுகத்தில் மட்டுமே வெளிப்படையாக அனுபவம் செய்கிறீர்கள். எல்லோருடைய உள்ளத்திலும் பாருங்கள், என்ன தென்படுகிறது? என்னுடைய பாபா மேலும் பாப்தாதாவினுடைய உள்ளத்தில் என்ன உள்ளது? ஒவ்வொரு குழந்தையும், பாபாவிற்கு எவ்வளவு தான் குழந்தைகள் இருந்தாலும், அனைவருமே உள்ளத்தில் நிறைந்திருக்கிறார்கள். இந்த ஆன்மீக உறவை இந்த சங்கமயுகத்தில் தான் அனுபவம் செய்ய முடியும். ஒவ்வொரு குழந்தையும் என்ன சொல்லும்? என்னுடைய பாபா. பாபா என்ன சொல்வார்? என்னுடைய குழந்தை! இந்த உறவை வெளிப்படையாக இந்த சங்கமயுகத்தில் அனுபவம் செய்கிறீர்கள்.

பாபாவும் ஒவ்வொரு குழந்தையையும் பார்த்து கூறுகின்றார். என்னுடைய செல்லமான குழந்தாய்! மேலும் குழந்தைகளும் என்ன சொல்கின்றனர், என்னுடை செல்லமான பாபா! எல்லோருமே குஷியாக இருக்கிறீர்கள் தானே! குஷி என்னும் சத்துணவு பாபாவின் மூலம் எப்பொழுதுமே கிடைத்துக் கொண்டிருக்கிறது. மேலும் குழந்தைகளும் உள்ளத்தில் பாபாவின் மூலம் கிடைத்துள்ள வரதானங்களின் கூடவே வாழ்கின்றனர். மேலும் இந்த கூட்டத்தில் வெளிப்படையான ரூபத்தில்

பால குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கின்றார், மேலும் குழந்தைகளும் பாபாவை நேரடியாகப் பார்க்கின்றனர். பாபா கூறுகிறார், ஆஹா, குழந்தைகளே, குழந்தைகள் கூறுகின்றனர் ஆஹா, பாபா, மேலும் ஒவ்வொருவருடைய முகத்திலும் என்ன தென்படுகிறது. பரமாத்ம அன்பு ஆக அனைத்து குழந்தைகளும் பாபாவின் வாழ்த்துகளின் மூலமாக மிக எளிதாக பறந்து கொண்டேயிருக்கின்றனர். பறக்கக்கூடியவர்கள் தானே! கை உயர்த்துங்கள்! நடக்க கூடியவர்கள் அல்லவே, பறக்கக்கூடியவர்கள். அனைவருமே பறக்கக்கூடியவர்கள் தானே! அல்லது நடக்கக்கூடியவர்களும் இருக்கிறீர்களா? பறந்து கொண்டு இருக்கிறார்கள். ஏனெனில் இந்த சமயமே பறக்கக்கூடிய சமயமாகும். அனவைருடைய உள்ளத்திலும் இந்த பாடலே ஒலித்துக் கொண்டிருக்கின்றது. ஆஹா பாபா, ஆஹா நான்! அனைவருடைய உள்ளத்திலும் யார் இருக்கின்றார், கூறுங்கள் பார்ப்போம். என்னுடைய பாபா! ஆக, சதா என்னுடைய சொரூபத்தில் அனுபவத்தில் இருக்கிறதா? அல்லது வேலை செய்யும்போது மறந்து போகிறதா? பொதுவாக பார்க்கப்போனால், என்னுடைய ஒரு சிறிய பொருளைக் கூட மறப்பது கடினமாகும். என்னுடையது என்று ஆக்கி விட்டால் நினைவு நிரந்தரமாகும். ஆக ஒவ்வொரு உள்ளமும் என்ன சொல்கிறது? என்னுடைய பாபாவா, அல்லது பிரம்ம குமாரிகளின் பாபாவா! என்னுடைய பாபா! மேலும் பாப்தாதாவும் ஒவ்வொரு குழந்தையையும் பார்த்து குஷி அடைகின்றார் எனது குழந்தாய்!

ஆக, இன்று தீப மாலாவின் (தீபாவளி) தினமாகும். மேலும் பாப்தாதா மற்றும் நீங்கள் அனைவரும் தீபராஜ் மேலும் தீபங்களைப் பார்த்துக் கொண்டிருக்கின்றார். தீபராஜ் ஒவ்வொரு தீபத்தையும் பார்த்து குஷி அடைந்து என்ன பாடலை பாடுகின்றார்? ஆஹா குழந்தாய், ஆஹா! அப்படிப்பட்ட ஆஹா குழந்தைகள் தானே! இவ்வாறு ஆஹா என்று தங்களை நினைப்பவர்களுக்காகக் கை தட்டுங்கள். ஆக இன்று ஒவ்வொரு குழந்தையில் உள்ளத்திலும் இந்த சமயத்தில் யார் நிறைந்திருக்கிறார்? எனது பாபா! அனைவரது முகமும் புன்சிரிக்கின்றது. ஏனெனில் ஆஹா, பாபா ஆஹா!

இன்று நேர் எதிரிலேயே குழந்தைகளும் பாபாவைப் பார்த்துக் கொண்டிருக்கின்றன. பாபாவும் குழந்தைகளை எதிரிலேயே பார்த்துக் கொண்டிருக்கின்றார். ஏனெனில் தூரத்தில் இருந்தாலும் சரி, பாபாவோ உள்ளத்தில் நிறைந்திருக்கிறார். அவ்வாறு பாபா உள்ளத்தில் நிறைந்திருக்கிறார் தானே! கை உயர்த்துங்கள். எல்லோருடைய உள்ளத்திலும் பாபா நிறைந்திருக்கின்றாரா? வேறு எதுவுமே இல்லை. பாபாவின் உள்ளத்திலும் குழந்தைகள் நீங்கள் ஒவ்வொருவரும் உள்ளீர்கள். குழந்தைகள் இல்லாமல் பாபா வாழ முடியாது. மேலும் குழந்தைகளும் பாபா இல்லாமல் வாழ முடியாது. இந்த சங்கமயுகத்தின் பரிசானது பாபா மற்றும் குழந்தைகளினுடைய இந்த சந்திப்பு முழு கல்பத்திலும் ஒரே ஒரு முறை தான் நடைபெறுகிறது. சங்மகயுகத்தில் அடிக்கடி நடைபெறுகிறது ஆனால் ஒரே ஒரு சங்கமயுகத்தில் தான் நடைபெறுகிறது. மேலும் வாழ்க்கை எவ்வளவு எளிதானது. எந்த விதமான ஹடயோக செயல்களையும் செய்யத் தேவையில்லை. என்னுடைய பாபா, அவ்வளவே! என்னுடைய பாபா; அவரை மறப்பது மிக கடினமாகும். பாபாவை என்னுடையவராக்கி விட்டீர்கள், எனவே மறப்பது என்ற கஷ்டம் இனி கிடையாது. ஒரு சிறிய பொருள் கூட என்னுடையதாக இருக்கும் பொழுது எவ்வளவு நினைவில் இருக்கிறது. மேலும் பாபாவிற்கும் ஒவ்வொரு குழந்தையும் அன்பாக இருக்கிறது. இவ்வளவு குழந்தைகள் இருக்கிறார்கள், எனவே பாபா என்னை நினைப்பாரோ இல்லையோ என்பது கிடையாது ஆனால் அப்படியில்லை, பாபா உலகத்திற்கே தந்தையானவர். அதிலும் கூட முக்கியமான (நெருங்கிய) சம்மந்தத்தில் யார் இருக்கிறார்? குழந்தைகளாகிய நீங்கள் தான்! ஒவ்வொருவரும் எவ்வளவு அன்புக்குரியவர்கள். மிக அன்பான பாபா, என்று நீங்கள் கூறுகின்றீர்கள், பாபாவும் கூறுகிறார்: எனது இனிமையிலும் இனிமையான, அன்பிற்கும் அன்பான குழந்தைகளே! ஒவ்வொரு குழந்தையும் பாப்தாதாவின் உள்ளத்தின் அன்பிற்குரியவர்.

ஆக, இன்று கூட உள்ளத்திற்கினிய பாபாவை சந்திப்பதற்காக பாருங்கள், எங்கிருந்தெல்லாம் வந்து சேர்ந்திருக்கிறார்கள்! தீபாவளியைத் கொண்டாடிக் கொண்டிருக்கின்றார்கள். பாப்தாதாவோ சைத்தன்யமான தீபங்களைப் பார்த்து குஷி அடைகின்றார். ஆஹா குழந்தைகளே ஆஹா! ஆஹா ஆஹா அப்படித் தானே! ஆஹா, ஆஹா

என்று அப்படி இருக்கிறீர்களா? யார் இருக்கிறார்களோ கை உயர்த்துங்கள். எல்லோரும் இருக்கின்றீர்களா? பாப்தாதாவின் உள்ளத்திலும் குழந்தைகள் இருக்கின்றனர். யார் பாப்தாதாவின் உள்ளத்தில் நிறைந்திருக்க முடியும்? அதனை நீங்கள் எல்லோரும் அறிவீர்கள் ஆனால் பாபாவின் உள்ளத்தில் குழந்தைகள், குழந்தைகளின் உள்ளத்தில் பாபா இருக்கின்றார்! இந்த சங்கமயுகத்தின் சம்மந்தமானது முழு கல்பத்திலும் கிடைப்பது கிடையாது. இப்பொழுது கிடைத்துள்ளது. அதுவும் இந்த பிறவியின் பாக்கியமாகும். ஆக, தீபாவளியைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறீர்கள் தானே! ஒவ்வொரு தீபமான குழந்தையும் தீப ராஜாவின் செல்லமானவர்கள். குழந்தைகள் தங்களை என்னவாக நினைத்துக் கொண்டாலும் சரி, ஆனால் பாபாவிற்கு ஒவ்வொரு குழந்தையும் பாபாவின் உள்ளத்தின் அன்பானவர்களே! ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் என்ன நிறைந்துள்ளது, குழந்தைகளின் உள்ளத்தில் பாபா, பாபாவின் உள்ளத்தில் குழந்தைகள்!

**இரட்டை வெளிநாட்டினர் 105-நாடுகளில் இருந்து 2000-பேர் வந்துள்ளனர்:** பாரததேசமும் இருக்கவே இருக்கிறது. பாப்தாதா வருவதே பாரத தேசத்தில் தான். பாபாவினுடைய இவ்வளவு அன்பு கிடைத்துக் கொண்டிருக்கிறது, அதற்குப் பதிலாக நாம் என்ன செய்ய வேண்டும் என்று நிர்வயர் சகோதரர் கேட்க -நாம் என்ன செய்ய வேண்டும் என்பது குழந்தைகளுக்குத் தெரியும், வெளிநாடுகளிலிருந்து யார் வந்திருக்கிறார்கள் அவர்கள் எழுந்து நிற்கவும். வாழ்த்துக்கள்! சிந்தி சகோதர சகோதரர்களும் வந்துள்ளனர். நன்றாக வரட்டும்! ஸ்தாபனை ஆன இடத்தின் பெயர் உள்ளது. பாப்தாதாவிற்கு மிகுந்த குஷி ஒவ்வொரு குழந்தையும் இது சிந்தியாக இருந்தாலும் சரி, அல்லது இந்தியாக இருந்தாலும் சரி, ஆனால் ஒவ்வொரு குழந்தையும் பெரும்பாலானவர்கள் குஷியோடு இருக்கின்றனர். இதைப் பார்த்து பாப்தாதாவிற்கு குஷி ஏற்படுகிறது. குஷியை இழந்து விடக்கூடாது. விசயங்கள் (சோதனைகள்) நடக்கும் ஆனால் அந்த விசயங்கள் நமது குஷியை ஏன் எடுத்துச் செல்ல வேண்டும். குஷி என்பது ஒவ்வொருவருடைய தனி சொத்தாகும். அதனை ஒருபோதும் இழக்கக்கூடாது. சோதனைகள் வருகின்றன. அதுவும் பரீட்சைதானே! ஆக எந்த குழந்தை நன்கு முயற்சி செய்கிறதோ அவர் தேர்வின் போது

பாஸாகி விடுகிறார். அவரைப் பொருத்த வரையில் தேர்வு என்பது பெரிய விசயமே அல்ல எப்பொழுதும் ரெடி! இவ்வாறு ரெடியாக இருப்பவர்களுடைய அடையாளம் அவர்களுடைய முகத்தில் சதா குஷியினுடைய அலையானது தென்பட்டுக் கொண்டிருக்கும். எவ்வளவு தான் விசயங்கள் வந்தாலும்! ஆனால் டபுள் சம்மந்தத்தில் இருக்கிறீர்கள். லௌகீகத்திலும் மற்றும் அலௌகீகத்திலும் ஆனால் யார் சதா குஷியாக இருக்கிறாரோ அவர் எப்போதுமே அடி மேல் அடி எடுத்து வைத்து முன்னேறிக் கொண்டேயிருக்கின்றார். அப்படிப்பட்ட குழந்தைகளைப் பார்த்து பாபா சூட்சுமத்தில் அவர்கள் மீது உள்ளத்து அன்பை நிச்சயமாக செலுத்துகின்றார். அதை அவர்களும் உணரத்தான் செய்கிறார்கள், என் மீது பாபா அன்பாக இருக்கிறார் என்று. இப்படிப்பட்ட உள்ளத்தில் குஷி நிறைந்த குழந்தைகள் அநேகம் பேர் உள்ளனர். மேலும் எப்பொழுதுமே குஷியாக இருக்கின்றனர். யார் அவ்வாறு இல்லையோ அவர்களும் எப்பொழுதும் குஷியாக இருக்க வேண்டும்.

**உத்திரபிரதேசம், கிழக்கு நேபாளம், பனாரஸ் (காசி)** ஆகிய பகுதிகளிலிருந்து 10000ம் சகோதர சகோதரிகள் வந்திருக்கின்றனர். நல்லது. மிகவும் நன்றாக செய்தீர்கள், மேலும் செய்வீர்கள். இந்த சேவை மூலமாக உங்களுக்கு திருப்தித்தானே!

இரட்டை வெளிநாட்டினரின் சமர்ப்பணமான சகோதர சகோதரிகளுடன்: நல்லது வெளிநாட்டினரும் நன்கு முன்னேற்றத்தைக் கண்டுள்ளனர். பாப்தாதாவும் குஷியாக இருக்கிறார்.

பாரத தேச டீச்சர்களுடன்: ரத தேசமும் குறைவு கிடையாது. மிக நன்று! யார் யார் என்னென்ன சேவை செய்தனரோ அனைத்துமே நன்றாகத்தான் இருக்கிறது.

அனைத்து குழந்தைகளுக்கும் உள்ளமும் உயிரும் நிறைந்த அன்புடன் பாப்தாதாவின் அன்பு நினைவுகளை ஏற்றுக் கொள்வீர்களாக! இந்த அன்பு நினைவே எப்பொழுது இருந்தால் எந்த வித தடையும் வராது. தடைகளிலிருந்து விடுதலை அடைந்து விடுவீர்கள் என்னுடைய பாபா அவ்வளவே! என்னுடையது என்று இருக்கும்பொழுது யாருமே எதையுமே மறப்பதில்லை, ஆக என்னுடைய பாபா மேலும்

பாபாவினுடைய ஆஸ்தி -இந்த நினைவு வருவதின் மூலம் சதா குஷியாக இருப்பீர்கள்.

ஒவ்வொருவருடனும் பாப்தாதா உள்ளத்தால் சந்தித்துக் கொண்டிருக்கின்றார் பின்னால் அமர்ந்திருக்கிறார்கள், எனவே அவர்களோடு சந்திப்பதில்லை என்று அப்படி கிடையாது. நிச்சயமாக அவர்களோடும் சந்திக்கின்றார். பாப்தாதாவின் அருகில் ஒவ்வொரு குழந்தையும் மிக அருகாமையில் உள்ளது.

இங்கு யார் வந்திருந்தாலும் சரி, வராவிட்டாலும் சரி ஆனால் பாப்தாதா நாலா புறங்களிலுமுள்ள குழந்தைகளுக்கும் அன்பு நினைவுகளைத் தருகின்றார். அனைவரது உள்ளத்திலும் இனிய பாபா, இனிமையான அன்பு! சிலர் கூறுகின்றனர், சிலர் வாயினால் கூறுவதில்லை, ஆனால் அனைவரது உள்ளத்திலும் இருக்கின்றது. பாப்தாதாவும் கூறுகிறார், ஆஹா! குழந்தைகளே ஆஹா!

மோகினி சகோதரி பிரிஜ்மோகன் சகோதரருடைய நினைவை கூறுகிறார். சரீர சுகவீனமான காரணத்தால் அவர் வரவில்லை. இன்று அவருக்கு முக்கியமாக நினைவை கூறுங்கள்.

வெளிநாட்டு முக்கிய சகோதரிகளுடன்: தடைகள் இல்லாமல் சென்று கொண்டிருக்கிறது தானே! நீங்கள் அனைவரும் கூட அன்பால் உள்ளத்தின் மூலமான சேவைக்கு நிமித்தமாக இருக்கிறீர்கள். பாப்தாதா மிகவும் குஷி அடைகின்றார். ஒவ்வொருவரும் தத்தம் சக்திக்குத் தகுந்தாற்போல் என்ன செய்ய வேண்டுமோ இது வரை அவ்வாறு செய்து கொண்டிருக்கிறார்கள் வாழ்த்துக்கள்! வெற்றி என்பதோ உங்களுடைய பிறப்புரிமை மிகவும் நன்றாக நடந்து கொண்டிருக்கிறது; நன்றாக நடக்கவும் செய்யும். ஏனெனில் ஒவ்வொருவரையும் பாபா பார்த்துக் கொண்டிருக்கினறார். மிக நன்றாக முயற்சி செய்து கொண்டிருக்கிறார். வெளிநாட்டில் இருந்து யார் எல்லாம் சேர்ந்திருக்கிறார்களோ அவர்கள் எல்லாம் ரத்தினங்களாக இருக்கிறார்கள். குறைவான எண்ணிக்கையில் சேர்ந்திருக்கலாம், ஆனால் மிக மிக நல்ல ரத்தினங்கள் (ஆஸ்திரேலியா சிட்னியில் மிகப் பெரிய கட்டிடம் கட்டியிருக்கிறார்கள்). சிட்னிகாரர்களுக்கு எனது அன்பு

நினைவுகளைத் தாருங்கள். எல்லா இடங்களும் சரியாக உள்ளனனவா? பாப்தாதாவிற்கு அனைவரது நினைவும் வந்து சேர்கிறது. ஒவ்வொருவரின் உள்ளத்திலும் இப்பொழுது என்ன இருக்கிறது? நன்றாக இருக்கின்றனர், நன்றாக நடந்து கொண்டும் இருக்கிறார்கள், நன்றாக (பிறரை) நடக்கச் செய்யவும் செய்கிறார்கள். நல்ல முன்னேற்றம் தான்!

தீபாவளி நல்வாழ்த்துக்கள்! பாப்தாதாவின் சார்பில் ஒவ்வொரு குழந்தைக்கும் எதிரில் இருந்தாலும் சரி, சென்டர்களில் இருந்தாலும் சரி, உள்நாடு, அல்லது வெளிநாடுகளில் இருந்தாலும் சரி, ஒவ்வொருவருக்கும் பாப்தாதா தீபாவளியின் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றார். மேலும் சதா இவ்வாறே பாப்தாதாவின் மூலம் வெற்றி நட்சத்திரங்களின் சான்றிதழைப் பெற்றுக் கொண்டே இருக்க வேண்டும். இப்பொழுது இச்சமயத்தில் நீங்கள் வெற்றி நிறைந்தவர்கள் தானே! சதா வெற்றி நிறைந்தவர்கள், சதா ஒருவர் மற்றவருக்கு குஷியின் வாழ்த்துக்களை வழங்கிக் கொண்டிருங்கள், மேலும் பெற்றுக் கொண்டும் இருங்கள். அனைவருக்கும் மகிழ்ச்சித்தானே! அனைவருமே தீபாவளி கொண்டாடினீர்கள். அதாவது சதா தீபங்களைப் போன்று ஒளிர்விட்டுக் கொண்டேயிருப்பீர்கள். ஏதேனும் விஷயம் தீபமாலைக்கு கஷ்டம் தராது. சதா குஷியோடு இருக்க வேண்டும், மேலும் குஷியை பிறருக்கு வழங்கவும் வேண்டும்! -தீபாவளியின் இந்த சுலோகன் சதா நினைவில் இருக்கட்டும்.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 05.11.2014 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## உங்களுடைய ஒளி வீசும் திவ்ய சொரூபம் உங்களிடம் வருபவர்களுடைய தீபமும் ஒளி வீசும்படி அதே போலவே இருக்க வேண்டும், உங்களின் சாதாரண சொரூபம் அவர்களின் கண்களுக்குத் தென்படக்கூடாது!

நாலா புறத்திலும் உள்ள சைத்தன்யமான ஒளிர்ந்து கொண்டிருக்கின்ற உங்களுக்கு தீபராஜாவின் ஓம் சாந்தி. இந்த சைத்தன்யமான (உயிரோட்டமுள்ள) தீபங்கள் எவ்வளவு பிரியமானதாக இருக்கின்றன, உங்கள் அனைவரின் நினைவாகத்தான் உலகத்தில் கொண்டாடுகின்றனர். மேலும் சைத்தன்ய தீபங்களாகிய நீங்கள் தீபராஜாவை சந்தித்துக் கொண்டிருக்கின்றீர்கள். ஒவ்வொரு தீபங்களும் தீபராஜாவின் நினைவில் ஜொலித்துக் கொண்டிருக்கின்றன. பாப்தாதாவும் ஒவ்வொரு தீபங்களுக்கும் (ஆத்மாக்கள்) மிகுந்த, மிகுந்த மிகுந்த உளமாற அன்பு நினைவுகளைக் கொடுத்துக் கொண்டிருக்கின்றார். ஒவ்வொரு தீபங்களும் மிகவும் அன்பானவர்களாகவும், மனதில் நிறைந்தவர்களாகவும் இருக்கிறீர்கள். நாலா பக்கத்திலும் உள்ள பிரகாசம் மனதை எவ்வளவு ஈர்க்க வல்லதாக இருக்கின்றது, அனைவருடைய மனதிலிருந்தும் என்ன வெளிப்படுகின்றது? ஆஹா! ஆஹா! ஆஹா! இந்த சைத்தன்ய தீபங்கள் இவர்களின் நினைவாகத்தான் உலகத்தில் கொண்டாடப்படுகின்றது. சைத்தன்யமான தீபங்கள் (ஆத்மா) தீபராஜாவை சந்திப்பதற்காக இங்கு வந்து சேர்ந்துள்ளீர்கள் வரக்கூடிய அனைத்து தீபங்களையும் பார்த்து தீபராஜா கூட எவ்வளவு மனதார சந்தோஷம் அடைகின்றார். ஆஹா! என்னுடைய தீபங்களே ஆஹா! ஒவ்வொருவருடைய தீபங்களின்

ஒளியும் வரிசைக்கிரமமாக ஜொலித்துக் கொண்டிருக்கின்றது. பாப்தாதா அப்பேற்பட்ட ஜோதியைப் பார்த்து அனைத்து தீபங்களுக்கும் வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றார். வாழ்த்துக்கள்! வாழ்த்துக்கள்! வாழ்த்துக்கள்! உங்களுடைய நினைவாகத்தான் உலகத்தில் கொண்டாடி (தீபாவளி) வருகின்றார்கள். மேலும் சைத்தன்யமான தீபங்களாகிய நீங்கள் தீபராஜாவோடு சந்திப்பைக் கொண்டாடி வருகின்றீர்கள். இந்த சந்திப்பானது மிகவும் அன்பானதாகவும் தனிப்பட்டதாகவும் இருக்கின்றது. ஒவ்வொரு தீபங்களின் மனதில் யார் மூழ்கி இருக்கின்றார்? தீபராஜாவான என்னுடைய தந்தை ஒவ்வொருவருடைய முகத்திலும் தீப ராஜாவின் நினைவு மூழ்கியிருப்பதைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்.

இன்றைய நாள் நீங்களும் உலகத்தில் உங்களுடைய ஞாபகார்த்தத்தை (தீபாவளி) பார்த்துக் கொண்டிருக்கின்றீர்கள் தானே! எவ்வளவு பக்தர்கள் நாலா புறத்திலிருந்தும் தீபங்களாகிய உங்களை நினைவு செய்து கொண்டிருக்கின்றார்கள் ஆனால் சைத்தன்ய தீப ரூபத்தில் நீங்கள் தீபராஜாவை சந்தித்து கொண்டிருக்கின்றீர்கள். இந்த சந்திப்பின் தினத்தை தீபாவளி என்ற ரூபத்தில் கொண்டாடிக் கொண்டிருக்கின்றார்கள். நீங்கள் அனைவரும் கூட உங்களுடைய ஞாபகார்த்தத்தைப் பார்த்து சந்தோஷம் அடைகிறீர்கள். மேலும் மனதில் ஆஹா! தீப ராஜா ஆஹா! ஒவ்வொரு வருடத்திலும் கொண்டாடுமளவு ஞாபகார்த்தத்தை ஏற்படுத்தி விட்டீர்கள். இந்த தீபத்தின் ஒளி என்ன என்பதை நீங்கள் புரிந்து கொண்டிருக்கிறீர்கள்! என்ன பிரகாசம் பக்தர்கள் ஏதாவது தீபங்களை ஏற்றிக் கொண்டிருக்கின்றார்கள் ஆனால் நீங்கள் உண்மையான தீபங்கள் புரிந்து கொண்டிருக்கிறீர்கள், தீப ராஜா மற்றும் தீபங்களின் சந்திப்பானது நடந்து கொண்டிருக்கின்றது. பாப்தாதா ஒவ்வொரு தீபத்தையும் பார்த்து முன்னால் இருந்து பின்னால் வரை உள்ளவர்களையும் தூரத்தில் இருந்து பார்த்து சந்தோஷம் அடைகின்றார். ஆஹா தீபராஜாவின் தீபங்களே ஆஹா! உங்களுடைய ஞாபகார்த்தத்தைப் பார்த்துக் கொண்டிருக்கின்றீர்கள். மேலும் சைத்தன்யமான ரூபத்தில் தீபராஜாவோடு சந்திப்பை கொண்டாடிக் கொண்டிருக்கின்றீர்கள். ஒவ்வொரு தீபத்திற்கும் தத்தம் பிரகாசம் எவ்வளவு பிரியமானதாக இருக்கின்றது; அதாவது ஸ்தூலத்தில் 10-12 தீபங்கள் ஒன்றாக வைத்தால் அந்த பிரகாசம் (ஜோதி) எவ்வளவு

நன்றாக இருக்கின்றது. மேலும் பாப்தாதா சந்தோஷம் அடைகின்றார், பாப்தாதாவிற்கு எவ்வளவு சைத்தன்யமான தீபங்கள் எதிரில் பார்க்க முடிகின்றது மேலும் பாப்தாதா ஒவ்வொரு தீபத்திற்கும் இதைத்தான் கூறுகின்றார், ஆஹா! தீபங்களே ஆஹா! ஆனால் பாப்தாதா மட்டும் தான் சைத்தன்ய தீபங்களைப் பார்க்க முடியும்! அல்லது பாபாவின் குழந்தைகள் ஒருவருக்கு ஒருவர் மற்றவரை பார்த்துக் கொண்டிருக்கின்றார். நீங்கள் அனைவரும் எந்த ரூபத்தில் அமர்ந்திருக்கின்றீர்கள்! சைத்தன்ய தீபத்தின் ரூபத்தில் இருக்கிறீர்கள் அல்லவா! ஒவ்வொருவருடைய ஜோதியின் காட்சியை பார்க்கும்பொழுது மிகவும் உண்மையானதாகவும் மற்றும் அழகாகவும் தென்படுகின்றது. அனைவருடைய முகமும் தீபத்தைப் போன்று பிரகாசித்துக் கொண்டிருக்கின்றன. நீங்களும் உங்களை அதே ரூபத்தில் தெரிந்து கொண்டுள்ளீர்களா? மேலும் தன்னை சாட்சியாகப் பார்த்து எவ்வளவு புன்முறுவல் அடைகின்றீர்கள். பாப்தாதாவும் கூட ஒவ்வொரு புன்முறுவலோடு இருக்கின்ற தீபங்களைப் பார்த்து சைத்தன்யமான தீபங்களோடு தீபாவளி கொண்டாடிக் கொண்டிருக்கின்றார். ஒவ்வொரு தீபங்களும் தன்னுடைய தெய்வீகமான பிரகாசத்தைப் பரப்பிக் கொண்டிருக்கின்றன. அதாவது அத்தனை தீபங்களும் ஸ்தூலத்தில் ஒளி வீசிக் கொண்டிருந்தால் எவ்வளவு அழகான காட்சியாக இருக்கும் ஆனால் பாப்தாதா சைத்தன்யமான உண்மையான தீபங்களின் மாலையைப் பார்த்துக் கொண்டிருக்கின்றார். ஒவ்வொரு தீபமும் தனக்குத் தகுந்தாற்போல் நடைமுறையில் தாரணா சொரூபத்தை பாப்தாதா பார்த்துக் கொண்டிருக்கின்றார். மேலும் குஷி அடைகின்றார். ஆஹா! என்னுடைய ஒளிர்ந்து கொண்டிருக்கின்ற தீபங்களே ஆஹா!

பாப்தாதா சைத்தன்யமான தீபங்களான உங்களைப் பார்த்து எவ்வளவு சந்தோஷம் அடைந்து கொண்டிருக்கின்றார். ஆஹா! தீபங்களே ஆஹா! உங்கள் அனைவருக்கும் கூட தன்னுடைய சொரூபமாகி தீபத்தின் பிரகாசம் தென்படுகின்றதா? பாப்தாதாவிற்கு மிகவும் ஒளிர்ந்து கொண்டிருக்கின்ற தீபங்கள் வரிசைக்கிரமமாக உள்ளது, ஆனால் ஒளிர்ந்து கொண்டிருக்கின்ற சபை பார்த்து அவ்வளவு சந்தோஷம் அடைகின்றார். ஆஹா ஒளிர்ந்து கொண்டிருக்கின்ற தீபங்களே ஆஹா! சதா ஒளிர்ந்து கொண்டிருக்கின்ற ஜோதியே, பக்தர்கள் எவ்வளவு

அன்பாக நினைவு செய்துக் கொண்டிருக்கின்றார்கள் மேலும் தன் முன்னால் உள்ள தீபங்களைப் பார்த்து சந்தோஷம் அடைகின்றார், ஆஹா! தீபங்களே ஆஹா! நீங்கள் அனவைரும் சேர்ந்து உலகத்தில் தீபத்தை ஏற்றினீர்கள், மேலும் ஏற்றிக் கொண்டிருக்கின்றீர்கள். அப்படியிருக்க பாப்தாதா என்ன பார்க்கின்றார்! சைத்தன்யமான தீபங்களைப் பார்த்து அதிக சந்தோஷம் அடைகின்றார். ஆஹா குழந்தாய் ஆஹா! ஆஹா தீபங்களே ஆஹா! இப்பொழுது முன்னாடி உள்ள தன்னுடைய ஜோதியையும், தீபத்தின் ஜோதி மூலமாக மற்றவர்களின் தீபத்தை ஏற்றிக் கொண்டே செல்லுங்கள். உலகத்தில் சைத்தன்யமான தீபங்களைப் பற்றித் தெரியாது. ஆகையினால் ஸ்தூலமான தீபங்களை ஏற்றி வருகின்றார்கள் ஆனால் நீங்கள் அனைவரும் இன்று யாரை பார்த்துக் கொண்டிருக்கின்றீர்கள்? ஒளிர்ந்து கொண்டிருக்கின்ற தீபங்களை, சைத்தன்யமாக முகத்தில் பார்த்துக் கொண்டிருக்கின்றீர்கள். பாப்தாதாவும் கூட சைத்தன்யமான ரூபத்தில் ஒவ்வொரு குழந்தையையும் தீபத்தின் ரூபத்தில் ஒளிர்ந்து கொண்டிருப்பதை பார்த்து சந்தோஷம் அடைந்து கொண்டிருக்கின்றார். பிரகாசத்தில் வித்தியாசம் உள்ளது. வரிசைக்கிரமமாகவும் உள்ளது ஆனால் அணையாமல் ஒளிர்ந்து கொண்டிருக்கிறது தானே! ஆகையால் பாப்தாதா ஒளிர்ந்து கொண்டிருக்கின்ற தீபங்களின் சபையைப் பார்த்துக் கொண்டிருக்கின்றார் ஆனால் அவர்கள் வெறும் தீபமாலையை மட்டும் ஏற்றிக் கொண்டிருக்கின்றார், ஆனால் பாப்தாதா ஒளிர்ந்து கொண்டிருக்கின்ற தீபங்களின் சபையைப் பார்த்துக் கொண்டிருக்கின்றார். கூட்டத்தையும் பார்த்துக் கொண்டிருக்கின்றார், கூறுங்கள் எவ்வளவு பிரியமானதாக இருக்கிறது! ஒவ்வொரு சைத்தன்யமான தீபங்களும் தங்களுடைய ஒளியைத் தெரிந்து கொள்ள முடியும். பாப்தாதா சொரூபத்தில் பார்த்துக் கொண்டிருக்கின்றார். மேலும் குழந்தைகள் புத்தியின் மூலமாக தெரிந்து கொண்டிருக்கின்றார்கள், அப்படி என்றால் நீங்கள் அனைவரும் இந்த சபையின் தீபாவளி, உண்மையான தீபங்களின் தீபாவளி, ஒளிர்ந்து கொண்டிருக்கின்ற தீபங்களின் தீபாவளியைப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள் தானே பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள் தானே! அப்படியென்றால் கையை உயர்த்துங்கள். உங்களையும் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள் தானே!

பாப்தாதா சைத்தன்யமான தீபங்களைப் பார்த்து மிகவும் சந்தோஷம் அடைகின்றார். ஆஹா! தீபங்களே ஆஹா! ஒவ்வொரு தீபங்களும் தத்தம் பிரகாசத்தின் அழகை வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். ஒவ்வொருவரின் முகமும் தமது அறிமுகத்தை பிரகாசித்துக் கொண்டிருக்கின்ற முகத்தின் மூலமாக தன்னுடைய அறிமுகத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கின்றனர். ஆகையினால் இன்றைய தினம் தீப ராஜா உண்மையான தீப குழந்தைகளைப் பார்த்து பார்த்து எவ்வளவு புன்முறுவல் அடைகின்றார். ஆஹா! தீப குழந்தைகளே ஆஹா! நீங்களும் கூட தற்போது ஒளிர்ந்து கொண்டிருக்கின்ற ரூபத்தில் தன்னுடைய அநேக பக்தர்களுக்கு காட்சி கொடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். துவாபர யுகத்தில் இருந்து உங்களுடைய பக்தர்கள் எவ்வளவு பேர் இருப்பார்கள்! உங்களுடைய ரூபத்தை தெரிந்தாலும் தெரியாவிட்டாலும் ஆனால் நாடகம் அவர்களுக்கு காண்பித்து விடுகிறது நம்முடைய தீப ராஜாக்கள் வந்து விட்டனர்! நீங்கள் இங்கு சாதாரண ரூபத்தில் அமர்ந்திருக்கிறீர்கள் ஆனால் உங்களுடைய பக்தர்கள் தீபத்தின் ரூபத்தில் பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். மேலும் பாப்தாதா ஆஹா! குழந்தாய் ஆஹா என்ற ரூபத்தில் பார்த்துக் கொண்டிருக்கின்றார். மேலும் குழந்தைகளின் மனதில் ஆஹா பாபா, ஆஹா என வந்து கொண்டிருக்கிறது. அனைவரும் சந்தோஷ வெள்ளத்தில் மூழ்கியிருக்கிறீர்களா? இருக்கிறீர்களா? கையை உயர்த்துங்கள்! ஆஹா! ஆஹா! குழந்தாய் ஆஹா! ஏதாவது ஒரு விசயம் வந்தாலும், அதுவும் ஒளிர்ந்து கொண்டிருக்கின்ற தீபங்களாகிய உங்கள் முன்னால் வந்தாலும், தீபம் உங்களது ஒளிர்ந்து கொண்டிருக்க வேண்டும். அந்த மாதிரியான தீபராஜாக்கள் நீங்கள், உங்கள் முன்னால் வந்தவுடனே அவை தன்னுடைய சொரூபத்தை புரிந்து கொள்ள வேண்டும். அந்த மாதிரி சமயம் வரும் அதாவது உங்கள் முன்னால் வருவதற்கு முன்னரே உங்களுடைய திவ்ய சொரூபமானது தென்பட வேண்டும், சாகாரமான சாதாரண சொரூபம் தென்படக் கூடாது. எவ்வாறு பாப்தாதாவின் முன்னால் வரும் பொழுது பாப்தாதாவைப் போல் அந்த சமயத்தில் பாப்தாதாவை எந்த ரூபத்தில் பார்க்கின்றீர்களோ, அதே மாதிரி நீங்களும் கூட காட்சி கொடுப்பீர்கள். சாதாரணமாக காட்சி கொடுக்க மாட்டீர்கள். சாதாரண ரூபத்திலும் தேவதா ரூபத்திலோ, தேவிகள் ரூபத்திலோ காட்சி கொடுப்பீர்கள். இப்பொழுது கூட சில

குழந்தைகளிடம் நடைமுறையில் இந்த மாதிரி ஸ்திதி தென்படுகின்றது ஆனால் அனைவரும் அந்த ஒரு நிலையை அடைந்தே விடுவீர்கள்.

பாப்தாதா இன்று உங்கள் அனைவரையும் சைத்தன்யமான தீபங்களின் ரூபத்தில் பார்த்துக் கொண்டிருக்கின்றார். மேலும் ஒவ்வொருவருக்காகவும் ஆஹா! ஆஹா! என்று வந்து கொண்டிருக்கின்றது. அனைவரும் குஷியாக இருக்கின்றீர்கள் தானே! சந்தோஷம் தானே! கையை உயர்த்துங்கள். ஆஹா! சந்தோஷம் என்பது உங்களுடைய சொந்த பொருள், சந்தோஷம் என்பது மற்றவரின் பொருள் அல்ல, உங்களுடைய பொருள். அதை உங்களிடமே வைத்துக் கொள்ளுங்கள். போதும். வேறு என்ன செய்ய வேண்டும். நல்லது.

சேவையின் வாய்ப்பு கர்நாடகா, இந்தூர் மண்டலம்: கர்நாடகத்தில் இருந்து 10000-பேர் வந்துள்ளனர். மிகவும் நல்லது. முன்னேறிச் செல்லுங்கள், முன்னேறிக் கொண்டே செல்லுங்கள். நல்லது. யக்ஞ சேவையின் வாய்ப்பை எடுத்தீர்கள். மேலும் அனைவருக்கும் சேவையின் மூலமாக தங்களுடைய அறிமுகத்தையும் கொடுத்தீர்கள், பாப்தாதாவும் கர்நாடக வாசிகளுக்காக அன்பு நினைவுகளைத் தருகின்றார் நல்லது.

இந்தூர்: 3000-பேர் வந்துள்ளனர். மிகவும் நல்லது. ஒவ்வொருவருக்கும் வாய்ப்பு கிடைத்துக் கொண்டிருக்கின்றது. மேலும் அனைவரும் குஷி குஷியாக வாய்ப்பினை நடைமுறையில் கொண்டு வருகின்றனர். பாருங்கள், எவ்வளவு பேர் வந்துள்ளனர், சேவையின் பாக்கியம் மிகவும் நன்றாகக் கிடைத்துக் கொண்டிருக்கின்றது. பிராமணர் பிராமணர்களுடைய சேவை செய்கின்றனர். இந்த பாக்கியம் எவ்வளவு பிரியமானது. மேலும் சந்தோஷத்தையும் கொடுக்கின்றது. எங்களுக்கு வாய்ப்பு கிடைத்திருக்கின்றது என்று நீங்கள் அனைவரும் சந்தோஷம் அடைந்து கொண்டிருக்கிறீர்கள் தானே! நல்லது.

இரட்டை அயல் நாட்டு சகோதர சகோதரிகளிடம்: நல்லது வந்துள்ளீர்கள். இரட்டை அயல் நாட்டினர் ஏதாவது வாய்ப்பு கிடைத்தால் வாய்ப்பை எடுக்க வேண்டும் என்பது அல்ல. அந்த மாதிரி இல்லை. கொஞ்சம் இருந்தாலும் சரி, கூடுதலாக இருந்தாலும் சரி தான்

அனைத்திலும் வந்து விடுகின்றனர். நல்லது. இரட்டை அயல் நாட்டினருக்கு இரண்டு தடவை என்ன? 1000-இரட்டிப்பு தடவை வாழ்த்துக்கள்! மேலும் இங்கே உள்ள மண்டலத்திற்கு யார் சேவையின் நிமித்தமாக இருக்கிறார்களோ அவர்களுக்கு எவ்வளவு தடவை ஆயிரம் வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள். ஒவ்வொருவரும் மனதார சேவை செய்வதானால் வாழ்த்துக்கள் வெளிப்படுகின்றது. இது பாப்தாதாவின் மனதை பார்த்துக் கொண்டிருக்கின்றீர்கள். இரட்டை அயல் நாட்டு குழந்தைகளும் எழுந்து நின்று கொண்டிருக்கின்றார்கள். நன்றாக இருக்கின்றது. இரட்டை அயல் நாட்டினர் ஏதாவது ஒரு பாத்திரத்தில் தன்னுடைய பங்கை எடுத்துக் கண்டிப்பாக எடுத்துக் கொள்கின்றனர். இது பாப்தாதாவிற்கு மிகவும் நன்றாக இருக்கின்றது. அதிசயம் என்னவென்றால் எங்கிருந்தாலும் இங்கு வந்து சேர்ந்து விடுகிறார்கள். ஆகையினால் இரட்டை அயல் நாட்டினருக்கு இரட்டை வாழ்த்துக்கள். மேலும் இங்குள்ள சேவாதாரிகளுக்கும் 1000-தடவை வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள்.

முதல் முறையாக அநேகர் வந்துள்ளனர்: நல்லது. பாப்தாதா பார்த்துக் கொண்டிருக்கின்றார், நல்லது. பாப்தாதா இந்த சாதுவையும் பார்த்துக் கொண்டிருக்கின்றார். (கர்நாடகாவில் இருந்து ஒரு சுவாமிஜி வந்துள்ளார், அவரைப் பாப்தாதா பார்த்துக் கொண்டிருக்கின்றார்) நல்லது. தன்னுடன் கூட இருப்பவர்களையும் விழிப்படைய வைக்க வேண்டும். அந்த மாதிரி ஒரு குரூப்பை கூட்டி வாருங்கள், அது நல்லது. அப்பொழுது அனைவரும் புரிந்து கொள்வார்கள். இவர்களுடைய சேவை கூட குறையக்கூடாது. ஆனாலும் கூட வேலை நன்றாக செய்கிறார்கள், ஆத்மாக்களுக்கு ஏதாவது கூறிக் கொண்டேயிருக்கிறார்கள், ஏதாவது நல்லதாக மாற்றிக் கொண்டிருக்கிறார்கள், சில சாதனங்கள் மூலமாக சரியாக்கி வருகின்றார்கள். ஆகையினால் பாப்தாதா இவர்களுக்கு அன்பு நினைவுகளைக் தருகின்றார். நல்லது.

இன்றைய தினத்தை கொண்டாடீனீர்கள் ஆனால் எப்பொழுதுமே உங்கள் நடைமுறை வாழ்க்கையில், ஒவ்வொருவரின் மனதிலும் சதா பாபா மற்றும் நீங்களும் எப்பொழுதும் பாபாவின் மனதில் இருக்கின்றார், நல்லது.

தாதி ஜானகிஜியிடம்:. சரீரத்தை எவ்வாறு பேணிக் காப்பதைத் தெரிந்து கொண்டீர்கள், நல்லது. இது தான் சக்தி. பாப்தாதா சமயத்திற்கு தகுந்தாற்போல் சக்தியை தந்து கொண்டிருக்கின்றார். நல்லது ஒவ்வொரு குழந்தைகளும் தன் தன் வேலையை நன்றாக செய்து வருகின்றார்கள். ஆகையினால் அனைவருக்கும். வாழ்த்துக்கள். உங்கள் அனைவருக்கும் வாழ்த்துக்கள். வாழ்த்துக்கள்.

**மோகினி சகோதரியுடன்:** நன்றாக உள்ளீர்களா? மிகவும் வித்தியாசம் வந்துள்ளது. (நீங்கள் வரதானத்தைக் கொடுத்துக் கொண்டே செல்லுங்கள்) ஆகி விடும். சேவை செய்யுங்கள். உள்ளுக்குளே செய்யுங்கள். இங்கு அநேகர் வருகின்றனர், மேலும் இடத்திற்கும் செல்ல வேண்டியதாக உள்ளது ஆனால் இங்கு அனைவரும் தானாகவே வந்து விடுகிறார்கள். (இவர் வெளியில் சென்று சேவை செய்ய விரும்புகிறார்) அழைத்துச் செல்லுங்கள். நல்ல ஊக்கம் இருக்கும்.

**ரமேஷ் சகோதரர்:** நல்லது. அனைவரும் சேர்ந்து தங்களுக்குள் சேவையினுடைய திட்டங்களை தீட்டினீர்கள், அது பாப்தாதாவிற்கு நன்றாக உள்ளது. செய்து கொண்டிருக்கின்றீர்கள் மேலும் செய்ய வேண்டும். தங்களுக்குள் சேவையைக் கலந்து ஆலோசனை செய்கிறீர்கள், இன்னும் அதிகமாகச் செய்யுங்கள். நல்லது. தற்போது நன்றாக நடந்து கொண்டிருக்கின்றது.

பிரிஜ்மோகன் சகோதரதர்: எப்பொழுதுமே நன்றாக இருப்பீர்கள். நல்லது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 30.11.2014 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## திலாராமை (உள்ளத்திற்கு ஓய்வு அளிப்பவர்) உள்ளத்தில் வீற்றிருக்கச் செய்து சந்திப்பை கொண்டாடி சதா குஷியாக இருக்க வேண்டும். அமிர்த வேளை ஒரு நாளின் ஆரம்பமாகும். எனவே அமிர்தவேளையில் அமிர்தத்தை நிச்சயமாக அருந்த வேண்டும்!

இன்று குழந்தைகளினுடைய சந்திப்பைப் பார்த்து பாப்தாதா குஷி அடைகின்றார். மேலும் அவருடைய மனமும் கூறுகிறது ஆஹா குழந்தைகளே! ஆஹா! பாபா மற்றும் குழந்தைகளினுடைய இந்த சந்திப்பானது எவ்வளவு அன்பு நிறைந்தது! ஒவ்வொரு குழந்தையும் சிநேகம் மற்றும் உற்சாகத்துடன் சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த சிநேகம் அனைத்து துக்கங்களையும் மறக்கச் செய்து, பாபாவினுடைய சிநேகம் மற்றும் சம்மந்தத்தில் ஆஹா! தந்தையும் மற்றும் குழந்தைகளையும் சந்திக்க வைக்கிறது! ஆஹா! தந்தை குழந்தைகளைப் பார்த்து குஷி அடைந்துக் கொண்டிருக்கின்றார், மேலும் குழந்தைகளும் பாபாவைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்துக் கொண்டிருக்கின்றனர். ஒவ்வொரு குழந்தையும் புன்சிரித்துக் கொண்டேயிருக்கின்றனர். மேலும் பாபாவும் அருகாமையில் உள்ள குழந்தை களானாலும் சரி, அல்லது தூரத்தில் இருக்கும் குழந்தைகளானாலும் சரி, அவர்களைப் பார்த்து மிக மகிழ்ச்சி அடைந்துக் கொண்டிருக்கின்றார். பாபா மற்றும் குழந்தைகளின் இந்த சந்திப்பானது அலௌகீக சந்திப்பாகும். பாபா ஒவ்வொரு குழந்தையையும் பார்த்து குஷி அடைந்து கொண்டிருக்கின்றார். மேலும்

குழந்தைகளும் சாகார ரூபத்தில் கண்ணெதிரே பாபாவைப் பார்த்து மகிழ்ச்சி அடைகின்றனர். இந்த அலௌகீகமான சந்திப்பு எவ்வளவு அன்பானது அதே சமயத்தில் பற்றற்றது. ஒவ்வொருவரையும் பார்க்கும்போது பெரும்பாலோரின் முகமானது மலர்ச்சியுடன் இருக்கிறது, மேலும் பாப்தாதாவும் நாலா புறங்களிலுமுள்ள குழந்தைகளைப் பார்த்து மனதிலே பாடலைப் பாடுகின்றார். ஆஹா! எனதருமை இனிமையான குழந்தைகளே ஆஹா! குழந்தைகளினுடைய உள்ளத்தின் கீதத்தையும் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இது பாபா மற்றும் குழந்தைகளின் மிக அன்பானதும், அதே சமயத்தில் பற்றற்ற சந்திப்பானதாகும். ஒவ்வொருவரின் உள்ளத்திலும் சந்திப்பினுடைய ஆனந்தம் முகத்தின் மூலம் தென்பட்டுக் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு குழந்தையையும் பார்த்து பாபா ஆஹா! குழந்தாய் ஆஹா! என்று கூறி சந்தித்துக் கொண்டிருக்கிறார். கடைசியில் அமர்ந்திருந்தாலும் கூட, பாபாவின் அருகாமையில் அவர்கள் அமர்ந்திருக்கிறார்கள்.

**இன்று சீசனின் (இந்தியர்களுக்கான) முதல் சந்திப்பு.** எவ்வளவு ஆனந்தமான சந்திப்பு, குழந்தைகளின் உள்ளத்திலும் ஆஹா, பாபா ஆஹா! என்று இருக்கிறது. மேலும் பாபாவின் உள்ளத்திலும் ஒவ்வொரு குழந்தைக்காகவும் அவர்கள் முன்னால் அமர்ந்திருந்தாலும் சரி, பின்னால் இருந்தாலும் சரி, பின்னால் இருப்பவர்களும் பாபாவின் முன்னாலேயே அமர்ந்திருக்கிறார்கள். இன்றைய சந்திப்பின் தினத்தை நினைவு செய்து செய்து எதிரிலேயே அந்த சந்திப்பைக் கொண்டாடிக் கொண்டிருக்கின்றனர். பாபாவும் ஒவ்வொரு குழந்தையின் பாக்கியத்தைப் பார்த்து எப்படிப் பாடுகின்றார்? ஒவ்வொரு குழந்தையும் பாபாவின் உள்ளத்தின் அருகாமையிலேயே இருக்கின்றனர், பாபாவும் குழந்தைகளின் சந்திப்பைப் பார்த்து அவர்களுக்காக பாடலைப் பாடுகிறார், முழு உலகத்திலிருந்தும் எவ்வளவு குழந்தைகள் தமது உள்ளத்தின் சம்மந்தம், அந்த சந்திப்பு முகத்தில் தென்பட்டுக் கொண்டிருக்கிறது. மேலும் பாபா இந்தப் பாடலைப் பாடிக் கொண்டிருக்கின்றார், ஆஹா எனது செல்லமான குழந்தாய், ஆஹா! மிக அருமையான குழந்தாய் அஹா! இவ்வளவு நேரம் உள்ளத்தால் சந்தித்துக் கொண்டிருக்கின்றனர், பாபாவிற்கும் குழந்தைகள் இல்லாது மனதிற்கு நன்றாக இருப்பதில்லை. மேலும் குழந்தைகளுக்கும்

உள்ளத்தில் பாபாவின் நினைவானது இருந்து கொண்டேயிருக்கின்றது. உங்கள் அனைவருடைய உள்ளத்திலும் யாருடைய நினைவிருக்கிறது? பாபா என்று தானே சொல்வீர்கள்! மேலும் பாபாவின் உள்ளத்தில் யார் இருக்கிறார்? ஒவ்வொரு குழந்தையையும் பாபா மறக்க முடியுமா? வரிசைக்கிரமமாக, நம்பர் வாரியாக இருக்கலாம், ஆனாலும் குழந்தைகள் தானே!

ஆக இன்று நினைவில் இருக்கக்கூடியவர்களை கண்ணெதிரிலேயே பார்த்து பாப்தாதாவிற்கு எவ்வளவு குஷி! ஒவ்வொரு குழந்தையையும் பார்த்து ஆஹா குழந்தாய் ஆஹா! அவரது உள்ளம் இவ்வாறு கூறுகின்றது, அதேபோன்று குழந்தைகளும் கூறுவர், எமது உள்ளத்தில் யார் இருக்கிறார்? பாபாவும் கூறுகிறார், எனது உள்ளத்தில் யார் இருக்கிறார்? அனைவரும் அறிவர். கூறவேண்டிய அவசியமேயில்லை. பாபா வையும் குழந்தைகள் மறக்க முடியாது, மேலும் குழந்தைகளையும் பாபா மறக்க முடியாது. உள்ளத்தில் சதா பாபாவினுடைய நினைவு இருக்கிறது. அவரே நிறைந்திருக்கிறார். சூட்சுமமாகவும் சந்திப்பு நிகழ்ந்து கொண்டு தான் இருக்கிறது ஆனால் சாகாரத்தில் கண்ணெதிரே ஒவ்வொரு குழந்தையையும் பார்த்து அவர்கள் தூரத்தில் இருந்தாலும் சரி, அருகாமையில் இருந்தாலும் சரி, ஆனால் பாப்தாதாவின் உள்ளத்தில் ஒவ்வொரு குழந்தையின் வரிசைக்கிரமமான நினைவு இருக்கிறது. ஆக இன்று ஒவ்வொரு குழந்தையும் சாகார ரூபத்தில் பார்த்து அருகாமையில் பார்த்து கண்ணெதிரிலேயே பார்த்து ஆஹா குழந்தாய் ஆஹா! என்னும் பாடலைப் பாடிக் கொண்டிருக்கிறார்? எல்லோருடைய உள்ளத்திலும் யார் இருக்கிறார்? எனது பாபா என்று சொல்வீர்கள், மேலும் பாபாவும் என்ன கூறுவார்? எவ்வளவு குழைந்தைகள் எங்கிருந்தாலும் சரி, ஆனால் ஒவ்வொருவரும் உள்ளத்தில் வீற்றிருக்கின்றனர். எனவே தான் பாபாவை திலாராம் என்று கூறுகின்றீர்கள். பாடா ஒவ்வொரு குழந்தையையும் பார்த்து அதுவும் சாகார ரூபத்தில் பார்த்து எவ்வளவு ஆனந்தம் அடைகின்றார். அதை குழந்தைகளும் அறிவர், பாபாவும் அறிவார். அனைவரும் உள்ளத்தால் மகிழ்ச்சியாக உள்ளீர்களா? கை உயர்த்துங்கள். உள்ளத்தில் குஷி நிறைந்துள்ளதா? ஏன்? பாபா அறிவார், ஏதேனும் விசயம் வந்தாலும் நினைவு செய்கின்றனர், மேலும் நினைவு செய்வதால் (அன்பு) வெளிப்படுகிறது. எவ்வளவு குழந்தைகள்

இருந்தாலும் சரி ஆனால் குழந்தைகள் தந்தையை மறப்பதில்லை, தந்தையும் குழந்தைகளை மறப்பதில்லை, இதுவோ சிறிய மண்டபம், அதற்கேற்றார்போல் உள்ளே அமர்ந்திருக்கின்றனர், ஆனால் ஆகாரி ரூபத்தில் (சூட்சும) வெளிப்படுத்திப் பாருங்கள் எவ்வளவு குழந்தைகள் தென்படுகின்றனர் (உலகம் முழுவதிலும்) மேலும் அனைவரும் ஏதேனும் சமயத்தில் நினைவு செய்யத்தான் செய்கிறார்கள். பாப்தாதாவின் அருகில் சூட்சும ரூபத்தில் வெளிப்படுகின்றனர். குழந்தைகளும் அனுபவம் செய்கின்றனர், பாபாவும் அனுபவம் செய்கிறார், ஏனெனில் குழந்தைகள் பாபாவின் சந்திப்பு இல்லாமல் தனியாக ஆகி விடுகின்றனர், மேலும் பாபாவும் குழந்தைகளின் சந்திப்பு இல்லாமல் தனியாக ஆகி விடுகின்றார். சூட்சுமத்திலே அனைவரையும் வரச் செய்ய முடியும் ஆனால் சாகாரத்தில் சந்திப்பதற்கும் சூட்சும ரூபத்தில் சந்திப்பதற்கும் வேறுபாடு உள்ளது. நீங்களும் அதை அனுபவம் செய்கிறீர்கள் தானே! ஆக இன்று சீசனின் முதல் நாள், ஏதேனும் நிகழ்ச்சிகள் ஆங்காங்கு நடந்துக் கொண்டு தான் இருக்கின்றன, ஆனாலும் இங்கு வந்திருக்கின்ற குழந்தைகளோடு சாகார ரூபத்தில் சந்தித்துக் கொண்டிருக்கிறார். ஆக அனைத்து குழந்தைகளும் சதா குஷியோடு இருக்கின்றனரா? அல்லது அவ்வப்போது தானா? யார் சதா குஷியில் இருக்கின்றனரோ, ஏதேனும் விசயம் வந்தால், ஏனெனில் கலியுகம் அல்லவா (வரத்தான் செய்யும்) ஆனால் பாபா மற்றும் குழந்தைகளின் இந்த சம்மந்தமானது அவ்வாறு உள்ளது, குழந்தைகள் கூறுவர், பாபா! பாபா கூறுவார் குழந்தாய் குழந்தைகளின் இந்த சந்திப்பு நிகழ்ந்து கொண்டேயிருக்கின்றது அப்படித்தானே! கை உயர்த்துங்கள், நடக்கிறது தானே! இங்கும் கூட தென்பட்டுக் கொண்டிருக்கிறது, பாபாவின் பாசுத்தோடு இந்த சாதனங்கள் கூட (எலக்ட்ரானிக்) வெளிவந்துள்ளன. அதன் மூலம் வெகு தூரத்தில் இருந்தாலும், கடைசியில் இருப்பவர்கள் கூட மிக அருகாமையில் தென்படுகிறார்கள்.

சங்கமயுகத்தின் சமயத்தில் பாபா வரும்பொழுது அறிவியலும் தனது உதவியை நன்கு செய்கிறது வெகு தூரங்களில் பல இடங்களில் அமர்ந்திருந்தாலும் முரளியை கேட்க வேண்டும் என்றால், கேட்க முடியும், சாதனம் வேண்டும். எப்படி நீங்கள் தந்தையை நினைவு செய்யாமல் இருக்க முடியாதோ அவ்வாறே பாபாவும் குழந்தைகளை

நினைவு செய்யாமல் இருக்க முடியாது. பாபா கூட குழந்தைகளை உணர்வில் கொண்டு வந்து (எமர்ஜ்) சந்திக்கிறார். அவ்வாறு சந்திக்காமல் இருக்க முடிவதில்லை, ஆக இன்றைய தினம் சாகார ரூபத்தில் சந்திப்பதற்கான தினமாகும். பாபா குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார், மேலும் குழந்தைகளும் பாபாவைப் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். மேலும் அனைவரும் குஷி இருக்கின்றனர், ஒரு சிலர் அவ்வப்போது குஷியோடு இருக்கின்றனர், மேலும் ஒரு சிலர் சதா குஷியாக இருக்கின்றனர். ஆக சதா குஷியாக இருப்பவர்கள் பாபாவின் கண் முன்னர் தென்பட்டுக் கொண்டிருக்கின்றனர். ஏனெனில் பாபாவும் குழந்தைகள் இல்லாது இருக்க முடியாது மேலும் குழந்தைகளுக்கும் எப்போதாவது ஏதேனும் (பிரச்சனை) வந்தால் அவர்களும் மறப்பதில்லை, பாபாவிடம் நினைவு வந்து சேர்கிறது, இந்த உறவே அப்படிப்பட்டது மறக்க முடியாதது. பாபா கூறுகிறார் எனது செல்ல மான குழந்தாய், மேலும் குழந்தைகளும் கூறுகின்றனர் என்னுடைய பாபா, ஒரு நாள் கூட மறக்க முடியாது. மறக்க முடியுமா? மறக்க முடியாது. ஏனெனில் பாபா மற்றும் குழந்தைகளினுடைய உறவானது உள்ளத்தின் அடிப்படையிலானது, அது உள்ளம் பூராவும் நிறைந்திருக்கிறது. தந்தையும் இருக்க முடியாது குழந்தைகளாலும் இருக்க முடியாது. இன்று எப்படி ஸ்தூலமாக கண்ணெதிரேலேயே சந்திப்பு நிகழ்ந்து கொண்டிருக்கிறது, அவ்வாறு பாபா குழந்தைகளை எதிரில் கொண்டு வந்து (எமர்ஜ் செய்து) சந்தித்துக் கொண்டிருக்கிறார், குழந்தைகளும் சந்தித்துக் கொண்டிருக்கிறீர்கள் தானே!

ஆக, இன்றிலிருந்து அனைவரும் என்ன முன்னேற்றத்தைக் கொண்டு வருவீர்கள்? ஏனெனில் ஒவ்வொரு சமயமும் முன்னே செல்ல வேண்டும், எப்படி முன்னேறுவீர்கள்? முன்னேறுவது என்பது உள்ளத்தில் பாப்தாதாவை நிறையச் செய்வது. உள்ளத்தின் விசயம் ஒருபோதும் மறக்க முடியாது. மேலும் உள்ளத்தில் சதா நினைவானது நிறைந்திருக்கிறது தானே! எதிரில் அமர்ந்திருப்பது வேறு விசயம், ஆனால் உள்ளத்தால் எப்பொழுது விருப்பமோ அப்பொழுது பாபாவை சந்திக்க முடியும். மேலும் பாபாவும் அவ்விதமாக சந்தித்துக் கொண்டு தான் இருக்கிறார். பாபாவிற்கு குழந்தைகள் இல்லாமல் நிம்மதியே கிடையாது, ஆக சதா பாபா மற்றும் குழந்தைகளின் இந்த சங்கமயுகத்தின் சந்திப்பை செய்யக்கூடிய பாகமானது ஏற்கனவே

நிர்ணயிக்கப்பட்டுள்ளது. யார் எவ்வளவு நினைவு செய்கின்றனரோ அந்த அளவு பாபாவை கண்முன்னால் கொண்டு வர முடியும். ஆக பாப்தாதா குஷி அடைகிறார். எப்பொழுது கண்ணெதிரிலேயே சந்திக்கும் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்கின்றீர்களோ அப்பொழுது பாப்தாதாவும் குஷி அடைகிறார். குழந்தைகள் மகிழ்ச்சி அடைகின்றனர், ஆனால் கூடவே பாப்தாதாவும் பூரித்துப் போகிறார், ஆக அனைவரும் சதா குஷியுடன் இருக்க வேண்டும். அல்லது அவ்வப்போது குஷிக்குப் பதிலாக வேறு எந்த ஸ்திதியும் வந்து விடுகிறதா? யார் சதா நிரந்தரமாக குஷியுடன் இருக்கின்றனரோ மாயாவின் எந்த ரூபத்திலிருந்தும் பாதுகாப்பாக இருக்கின்றனரோ, ஏனெனில் மாயாவானது விதவிதமான ரூபத்தில் வந்து கொண்டிருக்கிறது. வெறும் குஷியாக இருக்கும்போது மட்டுமல்ல, எண்ணங்களை சிந்தித்துக் கொண்டிருக்கும்போது கூட மாயை தனது பக்கம் இழுத்து விடுகிறது. ஆக தற்போது இந்த சந்திப்பிற்குப் பிறகு மனதில் பாபாவை நிரந்தரமாக வையுங்கள். திலாராம் பாபாவிற்கு உள்ளம் தான் மிகவும் பிடித்தமானது. உள்ளத்தில் நினைவு செய்தீர்கள் என்றால் அனைத்து தரப்பிலிருந்தும் நினைவு வரத்தான் செய்கிறது. குறைந்தபட்சம் ஒவ்வொரு வரும் அமிர்தவேளையை நன்கு செய்கிறீர்கள் தானே! அமிர்தவேளையை தினமும் செய்து கொண்டாடுபவர்கள் கை உயர்த்துங்கள் பார்ப்போம்! பெரும்பாலானோர்! ஒவ்வொரு இடத்திலும் அமிர்த வேளையை தனதாக்கி கொள்கின்றனர். நன்கு முயற்சி செய்கின்றீர்கள், அமிர்தவேளைக்கு மகத்துவம் தருகிறீர்கள், ஆனால் மேற்கொண்டு அமிர்தவேளையில் அவ்வப்போது என்பதை தவிர்த்து நிரந்தரம் என்று முன்னேற வேண்டும். ஏனெனில் அமிர்தவேளை என்பது ஒரு நாளின் ஆரம்பமாகும், ஆக அந்த சமயத்தில் நிச்சயமாக செய்ய வேண்டும். அதன் பிரபாபவம் முழு நாளிலும் ஏற்படுகிறது. அனைவரும் குஷியாக இருக்கிறீர்களா? அல்லது இடையிடையே மாயை தனது வாய்ப்பை எடுத்துக் கொள்கிறதா? குஷியை ஒருபோதும் இழக்கக்கூடாது. மாயயை வந்தாலும் கூட பாபாவிற்குக் கூறி மாறி விடவேண்டும். பாபா விடம் அடைய முடியவில்லை என்றால் தனது நிமித்தமாக இருக்கும் பெரியவர் களிடமாவது கூறுங்கள். ஒரு நாள் கூட திரும்ப நடக்காது பார்த்துக் கொள்ள வேண்டும். இல்லையென்றால், அதுவே பழக்கமாகி விடும். இந்த அமிர்தவேளையின் போது அமிர்தம் அருந்துவது மிகவும்

அவசியம் ஆகும். ஆக நிச்சயமாக இந்த சமயத்தை நன்கு பயன்படுத்தி வாருங்கள். நல்லது.

அனைவரும் குஷியாக இருக்கிறீர்கள், குஷியாக இருப்பிர்கள் தானே! உறுதியாக! ஏதேனும் சிறிய அல்லது பெரிய விசயம் வந்தால் குஷி மறைந்து விடக்கூடாது. யாராவது திடீரென்று பார்த்தால் கூட சதா குஷி நிறைந்தவர்களாகத் தென்பட வேண்டும்.

**சேவையின் வாய்ப்பு பஞ்சாப், இராஜஸ்தான் மண்டலம்: (பஞ்சாப்பிலிருந்து 10000-பேர் மற்றும் இராஜஸ்தானிலிருந்து 5000-பேர் வந்துள்ளனர்):** கை உயர்த்துங்கள். இரண்டு குரூப்புகளையும் தனித்தனியாக எழுந்திருக்க செய்தார். இரண்டு மண்டலங்களும் சேர்ந்து நல்ல சேவை செய்துள்ளனர். நல்லது. சேவாதாரிகள் அனேகர் உள்ளனர். தற்போது இவ்வாறு எழுந்து நிற்கும் பொழுது பாதிக்கு மேல் ஆகி விட்டனர். நல்லது. இரண்டு மண்டலங்களுக்கும் வாழ்த்துக்கள்! வாழ்த்துக்கள்! நல்லது. ஏன்? யக்ஞ சேவையினுடைய வாய்ப்பு கிடைக்கிறது. பொதுவாக, குறிப்பாக நேரம் எடுத்துக் கொண்டு சேவையிருந்தாலும் கூட வருவதில்லை ஆனால் இந்த வாய்ப்பு யக்ஞ சேவைக்காக செய்யப்படுவது. (மண்டலத்தின் சார்பில்) இதில் அநேகர் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள முடியும். எல்லா பாடங்களிலும் வாய்ப்பை எடுத்துக் கொள்ள வேண்டும். எந்த சேவை கிடைத்தாலும் செய்யும் ஆல் ரவுண்டராக வேண்டும். நல்லது.

**இரட்டை வெளிநாட்டினர் 300-பேர் வந்துள்ளனர்:** வெளிநாட்டினரும் அநேகர் வந்துள்ளனர். வெளிநாட்டினருடைய வருகையின் நேரமா இது? (இல்லை பாபா, ஒவ்வொரு சந்திப்பிலும் இரட்டை வெளி நாட்டினர் வந்து கொண்டு தான் இருக்கின்றனர்) நல்லது. நல்ல முறையை ஏற்படுத்தியுள்ளீர்கள். இதனால் ஒவ்வொருவருக்கும் வாய்ப்பு கிடைக்கிறது. நல்லது.

பாப்தாதா பார்க்கின்றார், ஒவ்வொரு குழந்தையும் தனது சேவையின் சமயத்தில் நன்கு ஒத்துழைப்பை தந்து கொண்டிருக்கின்றனர், ஆக அனைத்து குழந்தைகளுக்கும் (இவ்வாறு ஒத்துழைப்பைத் தரக்கூடிய) பாப்தாதா 1000-முறை அன்பு நினைவுகளை தந்து கொண்டிருக்கின்றார்.

தாதிகள் பாப்தாவோடு சந்திக்கின்றனர். **மோகினி சகோதரி:** நியுயார்க்கிலிருந்து அன்பு நினைவுகளை அனுப்பியுள்ளார். மோகினிக்கு குறிப்பாக எனது நினைவுகளை அனுப்புங்கள்.

**மோகினி சகோதரி (சாந்திவன்):** உடல் நிலை நன்றாக உள்ளதா? விடுதலை அடைந்து விட்டீர்கள், நல்லது.

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 25.12.2014 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# புதிய வருடத்தில் தீவிர புருஷார்த்தத்தில் கவனம் செலுத்தி, முன்னேறிக் கொண்டே செல்ல வேண்டும், தன்னை சோதித்து மாற்றிக் கொள்ள வேண்டும். கடைசி (தேர்வு) சோதனை திடீர் என்று ஏற்படும். எனவே ஒவ்வொரு பாடத்திலும் பாஸ் மார்க் எடுக்க வேண்டும், சதா கூடவே இருக்க வேண்டும். மேலும் கூடவே இராஜ்யத்திலும் வர வேண்டும்!

புதிய வருடத்தின் புதுமைகள் நிறைந்த நல்வாழ்த்துக்கள் நல்வாழ்த்துக்கள்! நல்வாழ்த்துக்கள்! பாப்தாதா தனது தீவிர புருஷார்த்தி குழந்தைகளைப் பார்த்து அனைத்து குழந்தைகளுக்கும் புதிய ஆண்டின் புதுமை நிறைந்த வாழ்த்துக்களைக் வழங்கிக் கொண்டிருக்கின்றார். இப்புதிய ஆண்டின் ஆரம்பத்தில் ஒவ்வொரு குழந்தையும் எண்ணம், சொல், செயல், சம்மந்தம், தொடர்பு ஆகியவற்றில் தனக்குள் ஏதேனும் புதுமையான இலட்சியத்தை முன் வைத்து நடைமுறையில் இந்த புதிய ஆண்டிற்காக ஏதேனும் புதுமையை புத்தியில் வைத்திருப்பீர்கள் புருஷர்த்தத்தின் ஒவ்வொரு அடியிலும், விசேஷத்தை தங்களது புத்தியில் கொண்டு வந்திருக்கக் கூடும். அனைவருமே நன்றாகச் சென்று கொண்டுதான் இருக்கிறார்கள். ஆக புருஷார்த்தத்தின் அர்த்தமே எடுத்து வைக்கும் அடியில் முன்னேறிச் செல்ல வேண்டும். ஆக பாப்தாதா பார்த்துக் கொண்டிருந்தார், ஒவ்வொருவரும் தனது புருஷார்த்தத்தை முன்னேற்றத்தில் கொண்டு வருவதில் உயர்ந்த

சங்கல்ட்டம் வைத்திருப்பீர்கள். தன் பொருட்டு முன்னேறிச் செல்வதற்கான சங்கல்பம் யார் வைத்திருக்கிறார்களோ அவர்கள் கை உயர்த்துங்கள். பின்னால் இருப்பவர்கள் கூட கை உயர்த்துகிறார்கள், ஆனால் உண்மையிலேயே சங்கல்பம் செய்திருக்க வேண்டும். சங்கம யுகமே அடியை முன்னே எடுத்து வைக்கும் யுகமாகும். ஆக தன்னை முன்னேற்றிக் செல்வதற்கான சாதனம் அல்லது நடைமுறை விதியை ஏற்படுத்தியிருப்பீர்கள், தன் பொருட்டு எளிதான மற்றும் சிரேஷ்ட சாதனத்தை லட்சியத்தின் ரூபத்தில் நிச்சயமாக நினைத்திருப்பீர்கள், யார் இவ்விதமாக முன்னே செல்வதற்கான ஏதேனும் எண்ணம் சொல், செயல் மற்றும் சம்மந்தம், தொடர்பில் அடி எடுத்து முன்னேற்றிச் செல்வதற்கான இலட்சியம் வைத்திருப்பார்களோ அவர்கள் கை உயர்த்துங்கள். நல்லது கையை அநேகம் பேர் உயர்த்தினார்கள். பின்னால் இருப்பவர்கள் கூட கையை உயர்த்துகிறார்கள். நன்கு உயரமாக உயர்த்துங்கள், நன்கு அப்படி உயரமாக! மிக நன்றாக கையை உயர்த்துகிறார்கள், பாப்தாதாவும் கூட புருஷார்த்தத்தின் இந்த கைகளைப் பார்த்து மகிழ்ச்சி அடைகிறார். மேலும் இலட்சியமும், வட்சணமும் ஒன்றாகவே இருக்கும். அப்படிப்பட்ட ஒரு திட்டத்தை தனக்காக நிச்சயமாக தீட்டி இருப்பீர்கள். பாப்தாதா பார்த்தார். அநேகக் குழந்தைகள் தனக்காக திட்டத்தை தீட்டியுள்ளனர். மேலும் பாப்தாதாவிற்கு மிகுந்த குஷி ஏனென்றால் திட்டம் மற்றும் நடைமுறையில் எம்மாதிரி இலட்சியம் வைத்தீர்களோ அந்த லட்சியத்தை நிச்சயமாக பூர்த்தி செய்வீர்கள். பூர்த்தி செய்வீர்கள் தானே? இதில் கை தூக்குங்கள் பார்க்கலாம். நன்றாகவே செய்வார்கள். ஏனெனில் பாப்தாதா தானும் கூட ஒவ்வொரு குழந்தையின் கணக்கு வழக்கை சமயத்தின் பிரகாரம் பார்த்துக் கொண்டுதானிருக்கிறார். மேலும் கூடவே முன்னேறிச் செல்வதற்கான வரதானத்தையும் அளிக்கிறார். பாப்தாதா, பார்த்தார் -பெரும்பாலானோரின் இலட்சியம் என்னவோ நன்றாகவே இருக்கிறது ஆனால் போகப் போக ஏதேனும் சூழ்நிலை இலட்சியத்தை சற்று தொய்வு அடையச் செய்து விடுகிறது. இலட்சியம் மிக் நன்றாகவே வைத்திருக்கிறீர்கள். மேலும் பாப்தாதாவும் இலட்சியத்தைப் பார்த்து குஷியடைகிறார். ஏனெனில் முன்னேறிச் செல்வதில் சற்று முன் பின் வித்தியாசம் தெரிகிறது. பிறகும் பாப்தாதாவும் பார்த்தார். பெரும்பாலனோரின் இலட்சியம் நன்றாகவே உள்ளது. தற்போது இலட்சியம் மற்றும் லட்சணம் இரண்டும் கூடவே

அதிகரிக்க வேண்டும். இதில் கவனம் செலுத்த வேண்டும். இதுவே தற்போதைய அவசியமாகும். நினைத்தவுடன் செயல்பாட்டில் வர வேண்டும். இரண்டும் ஒன்றன் பின் ஒன்றாக கூடவே இருக்க வேண்டும். இது மிகவும் அவசியம் ஆகும். என்ன விசயம் இடையில் வந்தாலும் சரி, இந்த சிறு சிறு சோதனைகள் இருக்கலாம் ஆனால் இதில் முன்னேறிக் கொண்டே இருக்க வேண்டும். இந்த விசயத்தில் கவனம் சற்று அதிகம் தேவை ஏனெனில் பாப்தாதாவிடம் ஒவ்வொரு குழந்தையின் ரிக்கார்ட்டு (பதிவேடு) இருக்கிறது. எப்படி நீங்கள் உங்களுடைய ரிக்கார்டை (சார்ட்) வைத்திருக்கிறீர்களோ அவ்வாறே பாப்தாதாவும் ஒவ்வொரு குழந்தையின் ரிக்கார்டை அவ்வப்போது பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார். இலட்சியம் என்னவோ மிக நன்றாய் உள்ளது. எந்த சமயத்தில் திட்டத்தை தீட்டுகின்றனரோ அப்போது மிகவும் உற்சாகம் ஆர்வத்துடன் தீட்டுகின்றனர் ஆனால் பிறகு அதில் கவனம் (அட்டென்ஷன்) கொடுக்க வேண்டும். ஏனெனில் உங்கள் அனைவருக்கும் தெரியும், இலட்சியத்தைப் பூர்த்தி செய்வதற்கு சற்று கவனத்தை அனைவருமே செலுத்துகின்றனர். ஏனெனில் முதல் நம்பரில் வர வேண்டும். ஆக, தன்னை எந்த நம்பரில் வருவதாக உணர்கிறீர்கள். பாபா பார்த்தார். நன்றாகத்தான் புரிந்திருக்கிறீர்கள். அந்த புரிதலின் கூடவே சுய பரிசோதனையும் நன்றாகச் செய்கின்றனர் ஆனால் போகப்போக ஏதேனும் விசயம் அந்த மாதிரி வருகின்றது என்றால், அதன் காரணமாக தீவிர புருஷார்த்தத்தை சாதாரண புருஷார்த்தமாக மாற்றி விடுகிறது. ஒவ்வொரு வரையும் பார்த்து பாப்தாதா இதையே, கூறுகிறார். கவனம் என்பது அழிவற்றதாக இருக்கட்டும். விசயங்கள் வருகின்றன ஆனால் விசயங்களில் கவனம் குறைவாக இருந்து விடக் கூடாது. பொதுவாக பாபா பார்த்திருக்கிறார், அநேகக் குழந்தைகள் தங்களது இலட்சியத்தை நன்றாகவே வைக்கின்றனர். மேலும் நடக்கவும் செய்கின்றனர் ஆனால்... இந்த ஆனால் என்பது வந்து விடுகிறது. காலமானது தற்போது உங்களை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. இலட்சியம் நன்றாக இருக்கிறது, சுய பரிசோதனையும் நன்றாகவே உள்ளது ஆனால் இடை இடையே ஏதேனும் விசயங்கள் வந்து தன் பக்கம் இழுத்து விடுகிறது. மேலும் இறுதி முடிவு என்பது திடீர் என்று ஏற்படும். அதற்கு குறிப்பிட்ட நாள் தேதி என்பது கிடையாது.

பாப்தாதா ஒவ்வொரு குழந்தையும் நம்பர்-1 புருஷார்த்தியாகவே பார்க்க விரும்புகிறார். மேலும் பாப்தாதா பார்த்தார். ஒவ்வொரு குழந்தையும் கூட இதையே விரும்புகிறார்கள், ஆனால் அவ்வப்போது தீய துணையின் பிரபாவம் (கலர்) ஏற்பட்டு விடுகிறது. அதுதான் சோம்பேறித்தனம்! இவ்வாறு இரண்டு விதமான அனுபவங்களையும் செய்திருக்கிறார். சரியான நேரத்தில் நினைத்தோம் தான் அதில் கவனம் வைப்போம் என்றும் நினைக்கிறார்கள். அங்கு கவனம் வைப்பதின் குறிப்பு என்னவோ இருக்கத்தான் செய்கிறது ஆனால் பல காலமாக இடை இடையே பழக்க தோஷம் ஏற்பட்டு விடுகிறது. இந்த மாதிரி ஒரு ரிசல்ட்டு தான் அதிகமாக இருக்கிறது. சாதாரணமானத் தன்மை என்பது கூடாது. அது சில சமயம் இப்படியும் சில சமயம் அப்படியும் ஆகி விடுகிறது. ஆக, பாப்தாதா விரும்புகிறார், சதா காலமும் தன் மீது கண்கள் கவனமாயிருக்க வேண்டும். சாதாரணத் தன்மை வந்து விடக்கூடாது. இப்போது நீங்கள் அனைவரும் பழையவர்களின் அட்டவணையில் உள்ளீர்கள்,. கொஞ்சம் பேரே புதிதானவர்கள். பெரும்பாலானோர் பழைய பட்டியலில் இருக்கின்றீர்கள். மேலும் இறுதிக் கட்ட சோதனை திடீர் என்று ஏற்படும். குறிப்பிட்ட நாள், தேதி என்பது கிடையாது. ஆக எவரும் தனது விசேஷத்தை நிரந்தரமாக ஆக்குவதே தற்போதைய அவசியமாகும். ஏனெனில் சோதனை என்பது நிரந்தரமாக வருவதில்லை. இடை இடையே சோதனையானது நாடகத்தின் பிரகாரம் நிகழ்கிறது. எனவே, சதா கவனம் வைக்க வேண்டும். மிகவும் கவனம் வைக்கத்தான் செய்கிறார்கள் அவர்களை பாப்தாதா தீவிர புருஷார்த்திகளின் பட்டியலில் வைக்கிறார். கவனம் வைக்கிறார்கள், ஆனால் சில சமயம் தீவிரமாகவும், சில சமயம் இடையே சோதனை வருவதாலும் அதில் சற்று வித்தியாசம் ஏற்பட்டு விடுகிறது.

ஆக பாப்தாதா அனைத்துக் குழந்தைகளையும் பார்த்து குஷி அடையத்தான் செய்கிறார். நாளுக்கு நாள் தன் மீது கவனம் கட்டாயமாக வைக்கின்றனர். தன் மீது கவனம் செலுத்துவதை விட்டு விடக்கூடாது. முதல் நம்பர் என்று இருக்கிறதல்லவா மேலும் பாப்தாதா இடை இடையே இம்மாதிரி கூட்டமாக சந்திக்கும் பொழுது குறிப்பாக கவனம் கொடுத்து வருகிறார் ஆனால் ஒவ்வொருவரது புருஷார்த்தத்தினுடைய வேகத்தைப் பார்க்கும் போது வேறுபாடு தோன்றுகிறது. இதில் சற்று

சோம்பேறித்தனம் தென்படுகிறது நடந்தேறி விடும். போகப்போக சரியாகி விடும் இப்படி ஏதாவது சேர்ந்து கொள்கிறது. மேலும் பாப்தாதா விரும்புகிறார் கோடியில் ஒரு குழந்தை என்பது இருக்கத்தான் செய்கிறது. அப்படிப்பட்ட இவர்களுக்கு கவனம் என்பது இருக்கத்தான் வேண்டும் மேலும் பாப்தாதா அறிவார். இறுதி கட்ட சோதனை என்பது திடீர் என்று நிகழும். சூழ்நிலையும் கூட அவ்வாறே இருக்கும். எனவே தனது பரிசோதனையை சோதித்துப் பாருங்கள், எப்படி பாப்தாதா விரும்புகின்றாரோ, வர்ணனை கூட செய்கிறாரோ அதன் பிரகாரமே எனது சோதனையும் இருக்கிறதா? கேட்டுக் கொண்டுதானிருக்கிறீர்கள். ஆக, பாப்தாதா விரும்புவது என்ன? குறைந்தபட்சம் இரவு படுக்கைக்குச் செல்லும் முன்பு ஒவ்வொரு நாளின் சோதனை அவசியமாகும். ஏனெனில் வேலை பளுவில் களைத்துப் போகிறீர்கள். இதற்காக நேரத்தையும் ஒதுக்குகின்றனர், மனதிலும் வருகிறது ஆனால் உடல் களைப்பு தன்பக்கம் இழுத்து விடுகிறது. ஆக, பாப்தாதா சமயம் பார்த்து மீண்டும் நினைவூட்டுகின்றார். கவனம் செலுத்துவதில் ஒருபொழுதும் சோம்பேறித்தனம் கூடாது.

பாப்தாதா பார்க்கின்றார். பல விதத்தில் புருஷார்த்தம் செய்கின்றனர். கவனமும் வைக்கின்றனர். அதற்காக ஒரே அடியாக சோம்பேறியாகவும் இல்லை ஆனால் இறுதி நேரம் என்பது திடீர் என வரும். எப்படிப்பட்ட சமயமாகவும் இருக்கக் கூடும். எனவே தாதாவும் கூட பொதுவாக இதையே எண்ணுகின்றார். ஒவ்வொரு குழந்தைக்கும் கூறுகிறார், (அட்டென்ஷன் பிரீஸ்) தயவு செய்து கவனம் வையுங்கள் ஒவ்வொரு பாடத்திலும் குறைந்த பட்சம் பாஸ் மார்க்காவது வேண்டுமல்லவா! நம்பர் சற்று பின்னால் இருந்தால் கூட அது வேறு விசயம் ஆனால் கவனம் இருக்கிறதா, மாற்றமும் ஏற்படுகிறதா, என்று இவ்வாறு சோதனை செய்யுங்கள். சோம்பேறித்தனம் வரவில்லைதானே? ஆகி விடும்... நிகழ்ந்து விடும்.. இது என்ன பெரிய விசயம் இதற்குத்தான் கவனம் செலுத்துவதில் சோம்பேறித்தனம் வருவது என்பதாகும். பாப்தாதா ஒவ்வொரு குழந்தையின் புருஷார்த்தத்தில் பெரும்பான்மையாக விளங்குவது குஷிதான் ஆனால் இடை இடையே மாயாவும் தனது வாய்ப்பை நன்கு பயன்படுத்திக் கொள்கிறது. ஆக பாப்தாதா வாழ்த்துக்களையும் தெரிவிக்கிறார் ஆனால் கூடவே கவனம். கவனம் (அட்டென்ஷன்) வைப்பதின் அர்த்தமே நோடென்ஷன் எந்த

விதமான அல்லது எந்த பாடத்திலும் கவனம் என்பது முழுமையாக வைக்க வேண்டும். அப்படி, இப்படி என்று இம்மாதிரி நடக்கத்தான் செய்யும், என்று எண்ணுதல் கூடாது. ஒரு நம்பர் வித்தியாசத்தில் கூட மிகப் பெரிய நஷ்டம் சில சமயங்களில் ஏற்பட்டு விடுகிறது. எனவே பாப்தாதா ஒரு குழந்தையைக் கூட சாதாரண புருஷார்த்தத்தில் பார்க்க விரும்புவதில்லை. இந்த பெருங்கூட்டம் (28,000) என்பது அவ்வப்போது நிகழ்கிறது. மிகவும் நல்லது தான். இப்பெருங்கூட்டத்தைப் பார்க்கும்போதும், பாப்தாதாவை சந்திக்கும் போதும் மிகுந்த உற்சாகத்தில் வந்து விடுகின்றனர் ஆனால் இந்த உற்சாகம் மேற்கொண்டும் தொடர்ந்து நீடிக்க வேண்டும். இதில் அவ்வப்போது சிறு சிறு விசயங்கள் புருஷார்த்தத்தை முழுவதுமாக இழக்கச் செய்வதில்லை ஆனால் லேசாக தொய்வடையச் செய்கிறது. ஆக பாப்தாதா குஷியடைகிறார், பிறகும் கூட இடை இடையே ஏதேனும் நிகழ்ச்சிகளை அதிக மாக (பாபாவை) சந்திப்பதற்காகவே வைக்கிறார்கள். நேரடியாக சந்திப்பதில் உற்சாகம், ஆர்வம் அதிகரிக்கிறது. இதையும் பாப்தாதாவும் பார்த்துக் கொண்டுதானிருக்கிறார். எனவே அனைவரும் தனக்குத் தாமே பொறுப்பாளராகி பரிசோதனை செய்ய வேண்டும் தனக்குத்தானே மிக ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

எல்லோரும் நன்றாயிருக்கிறீர்களா! கை உயர்த்துங்கள்! கை உயர்த்துகிறார்கள். பாப்தாதா இதில் குஷியாகி விடுகிறார் ஆனால் குழந்தைகளும் மிகவும் உஷாரானவர்கள்தானே. அந்த சமயத்தில் நாங்கள் நன்றாகத்தான் இருந்தோம், எனவே கை உயர்த்தினோம் என்று கூறுவார்கள். அதுவும் சரிதான் ஆனால் நீங்கள் அனைவரும் பிறரையும் முன்னேற்றம் அடையச் செய்யக் கூடியவர்கள். மிகச் சரியாக சென்று கொண்டுதானிருக்கிறீர்கள். அது சரிதான், பாபாவும் ஒத்துக் கொள்கிறார் ஆனால் இந்த சான்றிதழ் எப்பொழுதும் இருக்க வேண்டும். அதாவது இந்தளவு கவனம் என்பது சதா இருக்க வேண்டும். ஆக, ரிஸல்ட் என்ன ஆகும், பாப்தாதாவும் குஷியடைகிறார். மேலும் புருஷார்த்தம் செய்யக் கூடியவர்களும். சரிதான். அவர்களின் கூட இருப்பவர்களும் சரிதான். ஆக, அனைவரும் நல்ல புருஷார்த்திகளே ஆக, பாப்தாதாவும் மிகுந்த குஷிபடைகிறார். கையை உயர்த்தும்போது பாப்தாதா தெரிந்து கொள்கிறார், கை என்னவோ உயர்த்தி விட்டோம்

என்று சிலர் கூறுவர் ஆனால் கை உயர்த்தியவர்களுக்கு கூடவே (பாபாவிடமிருந்து) சக்தி கிடைக்குமல்லவா! தங்களுக்கு தாங்களே எண்ணிப் பார்ப்பார்கள் இல்லையா? உதாரணமாக நாளைய தினமே யாருக்கேனும் ஒரு சோதனை வந்து விட்டதென்றால் எதற்காக நான் கை உயர்த்தினேன் என்று மனதில் தோன்றும் அல்லவா? மேலும் தன்னை திருத்திக் கொண்டு முன்னேறிச் செல்ல முடியும். பாப்தாதா இதனையே விரும்புகிறார் -ஒவ்வொரு குழந்தையும் இங்கு கூடவே குஷி குஷியாக அமர்ந்திருக்கிறார்கள். அவ்வாறே இறுதி கட்டத்திலும் இருக்க வேண்டும். ஒவ்வொரு விசயத்திலும் பாஸ், டாஸ் பார்க்கலாம் யோசிக்கலாம் என்பது கிடையாது. நிச்சயமாக பாஸ்! ஆக என்ன நினைக்கிறீர்கள். நிச்சயமாக பாஸ் ஆவீர்களா? அல்லது கொஞ்சம் கொஞ்சம்தான் ஆகுமா? இப்பொழுது பாஸ் ஆகியே காண்பிப்போம் என்பவர்கள் கை உயர்த்துங்கள் பார்க்கலாம். கை உயர்த்துவதைக் கண்டு பாப்தாதா குஷியடைகிறார் மிகவும் நன்றாக இருக்கிறது உற்சாகம் இருக்கிறது ஆனால் மிகச் சிறிய சிறிய விசயங்கள் தடையை ஏற்படுத்தி விடுகின்றன. தற்போது இதனை அழிப்பதற்கான முயற்சி செய்யுங்கள். நினைக்கத்தான் செய்கிறீர்கள், மேற்கொண்டு இது நடக்காது ஆனால் பிறகும் நடந்து விடுகிறது. இதுவரை ரிசல்ட்டில் என்ன விரும்புகிறீர்களோ அந்த மாற்றம் இப்பொழுதே ஏற்பட வேண்டும். தன்னை மாற்றிக் கொள்ள வேண்டும் என எண்ணுவோர் உயர்த்துங்கள்! அந்த மாதிரி அழகாக கையை உயர்த்துகிறார்கள். அதைக் கண்டு பாபாவும் குஷியாகி விடுகிறார். நல்லது. ஆக பாப்தாதா கூடவே இருக்கிறார். கையையும் துணையாகக் கொடுக்கிறார் ஆனால் பாப்தாதாவுடன் கூடவே சதா இருக்க வேண்டுமல்லவா இப்பொழுதோ இரண்டு மணி நேரம் தான் பாப்தாதாவோடு கூடவே இருக்கிறீர்கள் ஆனால் இவ்வாறு துணையோடு இருப்பதை நிரந்தரமாக அனுபவம் செய்யுங்கள். அவ்வளவே உங்களை தனியாக அனுபவம் செய்யாதீர்கள். பாப்தாதாவை சதா கூடவே வைத்திருங்கள்.

ஆக, தற்போது அனைவரும் பின்னர் பாப்தாதாவை சந்திக்கும் வரை இவ்வாறே கை துணையோடு இருக்கும் இதில் இரண்டு கைகளையும் உயர்த்துங்கள். ஆக, தற்போது எப்போதும் இரவில் பாப்தாதாவை எதிரில் வைத்து, முன் நிறுத்தி தங்களது முயற்சியைப் பற்றிய முடிவை தெரிவித்து பாப்தாதாவை குஷிப்படுத்தி விட வேண்டும். ஏதேனும்

தவறுகள் நிகழவில்லையே? மனதாலோ, சொல்லாலோ அல்லது செயலாலோ தவறு இருக்கக் கூடாது. இவ்வாறு நடக்க முடியுமா? இதில் கையை உயர்த்துங்கள். நல்லது கையை உயர்த்தினீர்கள், இதில் பாப்தாதா குஷியடைகிறார் ஆனால் எப்பொழுதாவது ஏதேனும் நடந்து விட்டால் தனது கூடவே இருக்கும் புருஷார்த்திக்கும் கூறி மேற்கொண்டு நடப்பதற்கு உறுதிமொழி எடுங்கள். சரி, வேறு யாருக்கு முன்னால் உறுதிமொழி எடுக்காவிட்டாலும் தனக்குத் தானே எடுத்துக் கொள்ளாலாம், இல்லையெனில், பாபாவை எதிரில் வைத்து உறுதிமொழி எடுங்கள். ஏனெனில் ரிசல்ட்டில் சமயமும் கணக்கில் எடுக்கப்படுகிறது இல்லையா எவ்வளவு நேரம் இருந்தீர்கள் என்று! நல்லது அந்த சமயத்தில் சரியாக இருந்தீர்கள். அதுவும் நல்லதே! ஆனால் இறுதி காலத்து முடிவு ம் ஏற்படும் சமயத்திலும் சோதனை நடக்கும் அல்லவா! எனவே தனக்குத் தானே தினமும் இரவில் படுக்கைக்கு செல்லு முன்) இந்த பெரிய சபை மற்றும் தாம் கை உயர்த்தியதையும் நினைவில் கொண்டு வாருங்கள். நான் பாபாவிற்கு முன்னால் எப்படி கையை உயர்த்தினேன் - (நிச்சயமாக என்னை) மாற்றிக் காண்பிப்பேன் என்றா? அல்லது யோசிக்கின்றேன் என்றா? ஆக, இந்தளவு தைரியம் இருக்கிறதா? இன்றைய நாளுக்கு பின் சம்பூர்ணம் ஆக வேண்டும் என்று நினைத்தீர்களே அது நிரந்தரமாக இருக்குமா? கடந்தது கடந்ததாகட்டும். இன்றைக்கு உங்கள் உள்ளப்பூர்வமாக இந்த பெரிய சபைக்கு நடுவே தன்னைப் பார்த்து எல்லோரும் பார்க்கிறார்கள் என்பதாக மட்டும் யோசிக்காதீர்கள். பாபாவிற்கு முன்னால் உறுதிமொழி எடுக்கிறேன். ஆக, பாபா பார்த்திருக்கிறார். அதாவது மற்ற எல்லோரும் கூட பார்த்தார்கள். இவ்வாறு நடக்க முடியுமா? இது நடக்கக் கூடுமா? மேற்கொண்டு இடை இடையே அவ்வப்போது வரும் சிறு சிறு காரணங்களினால் தனது சம்பூர்ண நிலையின் இருக்கையை விட்டு விடக்கூடாது. இதில் கை தூக்குங்கள். இதில் தைரியம் இருக்கிறதா? நல்லது வாழ்த்துக்கள்! இப்பொழுது யார் கையை தூக்கவில்லையோ அவர்களுக்கு வெட்கம் வரத்தான் செய்யும், எனினும், உற்சாகம் ஆர்வம் இருக்கிறது இதனால் மட்டும் கையை உயர்த்தினால் போதாது, செய்து காண்பிப்போம் என்பதற்காக கை தூக்க வேண்டும். பொதுவாக முடிவு எவ்வாறு இருக்கும் என்பது பாபாவுக்குத் தெரியும் ஆனால் நீங்கள் கை உயர்த்துவதால், இவ்வாறு கை உயர்த்துவது கூட உங்களுக்கு உதவி

செய்யக் கூடும், இவ்வளவு பெருங்கூட்டத்தினிடையே கை உயர்த்தினீர்கள். அது ஒன்றும் சிறிய விசயம் கிடையாது. எனவே தற்போது மாற்றம் கொண்டு வருவதின் அர்த்தம் என்ன என்பதை சிந்தியுங்கள். தற்போது சாகசம் புரிந்தால் சரிதானே ஆக, இவ்வாறு உறுதிமொழி எடுத்து பிறகும் கூட செய்யவில்லையென்றால், பிறகு பின் வரிசையில் வந்து விடுவீர்கள் அல்லவா! ஆக எப்பொழுதாவது இம்மாதிரி தருணம் ஏற்பட்டால் அந்த சமயத்தில் அவ்வளவு பெரிய சபையின் மத்தியில் கை உயர்த்தினேன் அல்லவா என்று நினைத்துப் பாருங்கள். தனக்குத்தானே நன்மை ஏற்படும் மேலும் பாபாவும் குஷியடைவார் ஆனால் நீங்கள்தான் அதைச் செய்ய வேண்டும். ஆக, எப்பொழுதாவது ஏதேனும் பாதகமான சூழ்நிலை வந்தால் நீங்கள் கையை உயர்த்தியதை நினைத்துப் பாருங்கள். அப்பொழுது உதவி கிடைக்கும். வெறும் நினைவு செய்வதால் மட்டுமல்ல. இவ்வளவு சகோதர, சகோதரிகளுக்கிடையே நீங்கள் மனப்பூர்வமாக உறுதிமொழி எடுத்துள்ளீர்கள். அந்த உதவியும் கிடைக்கும். ஏனெனில் பாப்தாதா, விரும்புகின்றார், இப்பொழுது இங்கு முன்னால் எந்தெந்த குழந்தைகளெல்லாம் அமர்ந்துள்ளனரோ தைரியத்துடன் உள்ளனர் இல்லையா? ஆகியே தீர வேண்டும் என்று விரும்புகிறார்கள் இல்லையென்றால் ஏன் கையை உயர்த்த போகிறார்கள்! கையை உயர்த்தவில்லையென்றாலும் யார் பார்க்கப் போகின்றார்கள் என்று நினைக்கலாம் ஆனால் தைரியமாக இறங்கி இருக்கிறார்கள். அந்த தைரியத்திற்கு மேற்கொண்டு நீர் ஊற்றி வளர்த்துக் கொண்டே இருங்கள். உறுதிமொழி அளித்தவுடன் விலகிக் கொள்கிறார்கள். இந்த கை உயர்த்துதலை எப்பொழுதும் நினைவில் கொள்ளுங்கள். அதுவும் எவ்வளவு பெரிய சபையின் நடுவே பாபாவும் இருக்கிறார்! பாபாவுக்கு முன்னால் என்ன இவ்வளவு அதிகமான பிராமணர்களுக்கு நடுவே சங்கல்பம் செய்துள்ளீர்கள். அதனை இலேசாக்கி விடாதீர்கள். விரும்புகிறீர்கள் ஆகையினால் தானே கை உயர்த்துகிறீர்கள். மனதிலே எனது விருப்பம், எனவேதான் கை உயர்த்தினோம் ஆக, இதற்கு மேலும் உயிரூட்டுங்கள். தடையாக வரும் விசயங்களைப் பார்க்காது முன்னேறிச் செல்வதற்கான விசயம் பற்றி யோசியுங்கள். ஆகி விடுவோம்.. வேறு யார் ஆவார்கள்.. ஆகப் போகிறவர்கள் நீங்கள் தானே! எனவே, உங்கள் மீது நம்பிக்கை வையுங்கள். என்ன கூறினீர்களோ அதனை செய்து காண்பிக்க வேண்டும். சரியா?

பொதுவாக இப்படியும் சொல்லப்படுகிறது -நாம் என்ன கூறினோமோ அதை நினைவில் வை. எந்த சமயத்தில் ஏதேனும் நடக்கிறது என்றால் அந்த சமயத்தில் இந்த சமயத்தின் விசயத்தினை நினைத்துப் பாருங்கள். ஏனெனில் இப்பொழுது என்ன சொல்கிறீர்களோ அதனை விரும்புகிறீர்கள் தானே! அதனால் தானே கூறுகிறீர்கள். இப்பொழுது உங்களுக்கு நீங்களே உறுதிபடுத்திக் கொள்ளுங்கள். அமிர்தவேளையில் இந்த காட்சியைக் கொண்டு வாருங்கள். நான் எந்த சங்கல்பம் எடுத்துக் கொண்டேன். மேலும் பாப்தாதா இத்தனை சகோதர, சகோதரிகள் உங்களைப் பார்த்துக் குஷியடைந்தனர். ஆக நீங்கள் இவ்வளவு பேருக்கு மகிழ்ச்சியைத் தந்தீர்கள். சரி அப்படியே செய்கிறோம் எனக் கூறி கை உயர்த்தினீர்கள். அதைப் பார்த்து அனைவரும் மகிழ்ந்தனர். ஆக இவ்வளவு சகோதர, சகோதரிகளின் குஷியை மறக்கலாகாது. நினைவு செய்து பார்க்க முடியும் தானே? நான் இம்மாதிரியான சூழ்நிலையை அனுபவித்தேன். மாறித்தான் ஆக வேண்டும். இந்த மாற்றம் இல்லாது அங்கும் (சத்யுகத்திலும்) கூடவே இருக்க முடியாது. தூரம் தூரமாக இருப்போம். அது நன்றாயிருக்குமா? கடைசி நேரத்தில் சத்யுகம் செல்லுங்கள் என்றால் தெரியாமலே போய் விடும் ஏனெனில் கடைசி நேர ரிசல்ட்டில் கடைசி நேரத்தில் இவர் எத்தனையாவது நம்பரில் வந்துள்ளார் என்று தெரிய வரும்போது அதை அடுத்து என்ன ஆகும்? அந்த சமயத்திலும் நன்றாக இருக்காது. எனவே சங்கல்பத்தை மிக உறுதியாக வைத்துக் கொள்ளுங்கள். சூழ்நிலைகள் பாதகமாக வரத்தான் செய்யும். அது தெரிந்ததே! அனுபவிகள் தானே நீங்கள்! பருஷார்த்தம் செய்ய வேண்டும். முழுமை அடையவே வேண்டும். இதில் நிச்சய பத்தி வையுங்கள். இலட்சியம் என்ன? இவ்வளவு பேர் இங்கு அமர்ந்துள்ளார்கள். எவ்வளவு பேர் இம்மாதிரி வந்து கொண்டிருக்கிறார்கள். அப்படியென்றால் இலட்சியம் என்ன? சம்பூர்ணம் அடைய வேண்டும் அல்லவா? ஆக ஒவ்வொருவரையும் பாருங்கள். இரவு குறிப்பெடுத்துக் கொள்ளுங்கள். என்ன இலட்சியமோ எதற்காக கையை உயர்த்தினோமோ அவ்வாறே நாள் முழுவதும் உங்களது இலட்சணங்கள் இருக்கட்டும். உங்களை நீங்களே பரிசோதியுங்கள். பிறர் செய்தாலும் சரி, செய்யாவிட்டாலும் சரி. உங்களை நீங்களே சோதியுங்கள்!

அனைவரும் குஷியாக இருக்கிறீர்களா? எவ்வளவு குஷி நல்லது ஒருபொழுதும் இந்த குஷியை இழந்து விடாதீர்கள். இது கலியுகத்தின் இறுதி கட்டமாக இருக்கலாம் இருந்தாலும் குஷியாக இருக்கிறீர்கள் இல்லையா? இப்பொழுது குஷி என்றால் சதா காலமும் குஷியாக இருப்பீர்கள். சரியாக கூறினோமா (இவ்வாறு தன்னையே பாபா கூறிக் கொள்கிறார்). இதில் இரண்டு கையையும் உயர்த்துங்கள் பார்க்கலாம். தற்போது ஏதேனும் விசயம் வந்தால், நான் பெரிய அந்த சபையில் இவ்வளவு பிராமணர்களுக்கு நடுவே எந்த விசயத்தில் கை உயர்த்தினேன். கை உயர்த்தினீர்கள் இல்லையா! இதில் மிக உறுதியாக இருக்க வேண்டும். ஏனெனில் சத்யுகத்திலும் கூடவே இருக்க வேண்டும் இல்லையா? அல்லது தனியாக செல்வீர்களா? கூடவே இருப்பீர்கள் தானே! இராஜாங்கம் செலுத்துவீர்கள் என்றாலும் ஒன்றாகத்தானே செலுத்துவீர்கள். எனவே சதா நினைவில் கொள்ளுங்கள். நீங்கள் இவ்வாறு ஒன்றாக இருப்பது அரை கல்பத்திற்கு தொடர்ந்து நீடிக்கும். பின்னால் என்னவானாலும் சரி, ஆனால் அரை கல்பம் கூடவே இருப்பீர்கள். மேலும் யார் நிச்சயத்தோடு இருக்கிறார்களோ அவர்கள் என்ன நினைக்கிறார்கள், அரைக் கல்பம் மட்டுமல்ல ஆரம்ப காலத்திலிருந்து கடைசி வரைக்கும். விதவிதமான ரூபங்களிலே கூடவே இருப்போம். பாப்தாதா ஒரு குழந்தையைக் விட்டு விட ஆசைப்படவில்லை. ஒவ்வொரு குழந்தையும் தினமும் அமிர்த வேளையில் நினைவு செய்யுங்கள் -கூடவே இருக்கிறோம் -ஒன்றாகவே இருப்போம் -ஒன்றாகவே இராஜ்யம் செலுத்துவோம் நல்லது! பாப்தாதாவிற்கு இவ்வாறு கூட்டமாக இருப்பது மிகவும் பிடித்திருக்கின்றது. மேலும் இவ்வாறே சத்யுகத்திலும் கூட சமமாக இருப்போம். ஆக, அங்கும் ஒன்றாகக் கூடுவோம். ஒருவர் மற்றவரோடு வருவோம், ஒன்றாகச் செல்வோம் மேலும் ஒன்றாக சந்திப்போம். எல்லோரும் துணையாக இருப்பவர்கள் தானே, எங்கே கையை உயர்த்துங்கள்! நல்லது. உங்களின் கூடவே ஒன்றாக வசிப்போம். எவ்வளவு நன்றாக இருக்கிறது. தனியாக வாழ்ந்தாலும் சரி, ஆனால் உள்ளத்தால் இணைந்தே இருப்போம் என்பது இருக்கும். ஆடைகள் மாறலாம் ஆனால் மனம் என்பது மாறாது. நல்லது. பிறகு சந்திப்போம்!

**சேவை முறை குஜராத்:** 15000-சகோதர சகோதரிகள் குஜராத்திலிருந்து வந்திருக்கிறார்கள். நல்லது! இப்பொழுது கூட குஜராத்தியினர்

அதிகமாக உள்ளனர். அவர்களின் சேவை முறை தற்போது அல்லவா. குஜராத்தினுடைய முக்கிய விசயம் கூடவே இருப்பார்கள். மேலும் உள்ளத்தாலும் கூடவே இருப்பார்கள். ஏதேனும் இங்கிருந்து கட்டளைப் பிறப்பித்தால் உடனே குஜராத் வந்து விடும். அதிக எண்ணிக்கையில் உள்ளார்கள். இதுவும் சேவையினுடைய பலன் தான். குஜராத்தில் எண்ணிக்கை அதிகம் நல்லது. குஜராத் மிக அருகாமையிலும் உள்ளது. ஒவ்வொரு விசயத்திலும் மிகவும் உறுதுணையாகவும் இருக்கிறார்கள்.

இரட்டை வெளிநாட்டினர்: 500-பேர் வந்துள்ளனர். நல்லது! யார் இரட்டை வெளிநாட்டினரோ வெளிநாட்டினிலிருந்து வந்திருக்கின்றனர். உண்மையில் அவர்கள் இந்த தேசத்தவர்கள் தான் ஆனால் வெளிநாட்டிலிருந்து வந்திருக்கிறார்கள். அவர்கள் எழுந்திருங்கள். நல்லது! ஒரு நிமிடம் நிசப்தம் ஆகி விடுங்கள், ஹாலில் யாருமே இல்லை என்பது போல.

நாலா புறங்களிலும் உள்ள குழந்தைகளுக்கு பாப்தாதாவினுடைய விசேஷமாக ஒவ்வொரு குழந்தைக்கும் அன்பு நினைவுகள் உரித்தாகுக. ஒவ்வொரு குழந்தையையும் பாப்தாதா பார்த்து எவ்வளவு மகிழ்ச்சி அடைகிறார். அவர்கள் எங்கிருந்து வந்தாலும் சரி, வெளிநாட்டவரானாலும் சரி, உள்நாட்டிலிருந்தாலும் சரி, ஆனால் பாபாவினுடையவர்கள் ஆகி விட்டார்கள். இந்த குஷி அனைத்துக் குழந்தைகளுக்கும் உள்ளது.

(நியூயார்க் மோகினி சகோதரியின் நினைவு பாப்தாதாவிற்கு கூறப்பட்டது, கால் மூட்டில் அறுவை சிகிச்சை நடந்துள்ளது) அது சரியாகிப் போய் விடும். எழுந்து நடந்து விடுவார். விசயம் ஒன்றும் பெரிதல்ல. மிகவும் உற்சாகத்தோடு இருக்கிறார். அந்த உற்சாகத்தால் எழுந்து நடந்து விடுவார்.

தாதி ஜானகிஜி அவர்களுடன்: (பாபா தாதிக்கு சரீரம் காரணமாக மிகப் பெரிய சோதனை வந்துள்ளது. நீங்கள் ஏதேனும் மந்திரம் போடுங்களேன்) பாபா இவர்களை விட்டு தனியாகவே இல்லையே மந்திரம் போட்டுக் கொண்டுதானே இருக்கிறார். முழு யக்ஞமும் இவர் கூடவே உள்ளது. எது நடந்தாலும் சரி இவர் யக்ஞத்தின் மூர்த்தியாவார்

(கோவில் விக்கிரகம்). உங்களைப்ப பார்த்து அனைவருக்கும் உற்சாகம் எழுகிறது. நிமித்தமாக இருக்கிறீர்கள்.

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# தனிப்பட்ட சந்திப்புகள் -பார்ட்டிகள் etc

## 1) அனைவரும் தன்னை புனித அன்னப்பறவை என்று நினைக்கிறீர்களா?

அன்னப்பறவை என்றால் வீணானதை விட்டுவிட்டு பயனுள்ளதை எடுத்துக் கொள்வது. அந்த அன்னப் பறவையானது பாலையும் நீரையும் தனித்தனியாக பிரித்து விடுகிறது ஆனால் புனித அன்னப்பறவையான நீங்கள் வீணானது மற்றும் பயனுள்ளதை தனித்தனியாக பிரித்து, வீணானவற்றை விட்டு விட்டு பயனுள்ளதை உபயோகிக்கிறீர்கள். எப்படி அன்னப்பறவை ஒருபொழுதும் கற்களை பொறுக்குவதில்லை, மாறாக முத்துக்களையே பொறுக்கும். அதே போல் புனித அன்னப்பறவையாகிய நீங்கள் எப்பொழுதும் தந்தையின் குணங்களை தாரணை செய்கிறீர்கள். யாருடைய அவகுணங்கள் என்ற கற்களைப் பொறுக்குவதில்லை அப்படிப்பட்ட ஆத்மாக்களைத் தான் புனித அன்னப்பறவை என்று கூறுவது அதாவது தூய்மையான ஆத்மாக்கள், சுத்தமான ஆத்மாக்கள் என்று கூறுவது, எப்படி ஆத்மா சுத்தமாக இருப்பாரோ அப்படியே அவரது உணவு மற்றும் உறவு நெருக்கமும் சுத்தமானதாக இருக்கும். புனித அன்னப்பறவையின் உணவு பழக்கமும் சுத்தமானதாக இருக்கும் மற்றும் பிறருடன் தொடர்பில் வரும்பொழுது உறவு நெருக்கமும் சுத்தமானதாக இருக்கும். அசுத்தமானவை அழிந்து விடுகிறது ஏனெனில் சுத்தமான உலகிற்குச் சென்று கொண்டிருக்கிறார்கள். அங்கு தூய்மையின்மை அல்லது அசுத்தமானதின் பெயர் அடையாளம் கூட இருப்பதில்லை. இப்பொழுது புனித அன்னப்பறவையாக ஆகிறீர்கள். அப்பொழுது தான் எதிர்காலத்தில் மிகத் தூய்மையானவர் என்ற அடைமொழியோடு போற்றப்படுகிறீர்கள். ஒருபொழுதும் தவறுதலாகக் கூட யாருடைய அவகுணத்தையும் தாரணை செய்யாத எப்பொழுதும் கழுத்தில் குணமாலையாக இருப்பவர்கள் நீங்கள். சக்திகளின் கழுத்தில் கூட மாலையைக் காண்பிக்கிறார்கள். தேவதைகளின் கழுத்தில் கூட மாலையைக் காண்பிக்கிறார்கள். எனவே சங்கமயுகத்தில் குணங்களின் மாலையை தாரணை செய்பவர்களின் நினைவுச்சின்னமாக மாலையை காண்பிக்கிறார்கள். தந்தையின் குணங்களை தாரணை செய்து கொண்டே அனைவரது குணங்களையும் பார்க்கக்கூடியவர்கள் நீங்கள், அப்படியானால் இந்த குணமாலை அனைவரின் கழுத்தில் இருக்கிறதா?

குணமாலையை தாரணை செய்பவர்கள் தான் வெற்றி மாலையில் வருகிறார்கள். எனவே மாலை சிறியதாக உள்ளதா அல்லது பெரியதாக உள்ளதா? என்று சோதனை செய்யுங்கள். எந்த அளவு ஒருவர் தந்தையின் மற்றும் அனைவரின் குணங்களை தன்னில் தாரணை செய்வாரோ அந்த அளவே அவர் பெரிய மாலையை அணிவதற்கு உரியவர் ஆகிறார். குணமாலையை நினைவு செய்வதினால் தானும் குணமூர்த்தி ஆகி விடுகிறார்கள். எப்படி தந்தை குணமூர்த்தியோ அதே போன்று குழந்தையும் எப்பொழுதும் குணமூர்த்தி ஆவார்.

**2) எப்பொழுதும் தாமரை மலருக்குச் சமமாக இல்லறத்தில் இருந்து கொண்டே ஒவ்வொரு காரியத்தையும் செய்து கொண்டே விலகியவராக (பற்றற்று) அதாவது தந்தைக்குப் பிரியமானவராக தன்னை நினைக்கின்றீர்களா?**

எந்தளவு ஒருவர் விலகியவராக இருப்பாரோ அவருடைய விலகி இருப்பதின் அடையாளமாக அளவு தந்தைக்கு அந்த பிரியமானவராக இருப்பார். தந்தைக்கு அன்பானவராக எதுவரை ஆகியிருக்கிறீர்கள். அன்பானவரின் அடையாளம் என்ன? யாரிடம் அன்பு இருக்கிறதோ அவருடைய நினைவு இயல்பாகவே இருக்கும். நினைவு செய்ய வேண்டியதிருக்காது. ஒருவேளை அந்த மாதிரி அனுபவம் ஆகிறது என்றால் நீங்கள் அன்பானவர் என்று புரிந்து கொள்ளுங்கள். அன்பின் அடையாளம் இயல்பான நினைவு, ஒருவேளை கடின உழைப்பு செய்ய வேண்டியிருக்கிறது என்றால் குறைவான அன்பு. எங்கு சென்றாலும் அங்கு தந்தை மற்றும் குழந்தைகளின் சந்திப்பு மேளா இருக்கட்டும், எப்படி இணைந்து இருக்கிறார்கள் என்றால் ஒருபொழுதும் ஒருவர் இன்னொருவரை விட்டுப் பிரிய முடியாது. அது போல் தன்னை தந்தையோடு இணைந்திருப்பதாக அனுபவம் செய்யுங்கள். எங்கு சென்றாலும் தந்தையே தந்தை தான். இதைத் தான் நிரந்தர யோகி என்று கூறுவது. தந்தையின் நினைவு செய்வது கடினமாக இருக்க வேண்டாம் மாறாக தந்தையை மறப்பது கடினமாக இருக்க வேண்டும். எப்படி அரைக்கல்பம் நினைவு செய்வது கடினமாக இருந்ததோ அது போல் இப்பொழுது சங்கமயுகத்தில் மறப்பது கடினமாக இருக்க வேண்டும். யார் எவ்வளவு தான் மறக்க வைக்க முயற்சித்தாலும் ஆனால் மறக்கக்கூடாது. அந்த மாதிரி உறுதியான அங்கதனுக்கு சமமாக, எண்ணம் என்ற விரல் நகத்தைக் கூட மாயா அசைக்க

முடியாத அந்த மாதிரியால நிலை உள்ளவர் தாள் தந்தைக்கும் மிக அன்பிற்குரியவராக இருக்கிறார்.

**3) சுயத்தின் மீதும் மற்றும் சேவையின் மீதும் சமநிலை இல்லாமல் இருப்பது சேவையில் ஏதாவதொரு தடை அல்லது டென்ஷன் (குழப்பம்) வருவதற்கான காரணம் ஆகும்!**

தன்மீது கவனக்குறைவு இருக்கின்ற காரணத்தினால் சேவையிலும் ஏதாவதொரு விதமான தடை அல்லது டென்ஷன் (குழப்பம்) உருவாகி விடுகிறது. சேவைத் திட்டம் தீட்டுவதற்கு முன்பாக முதலில் சுயமுன்னேற்றதிற்கான திட்டத்தைத் தீட்டுங்கள். ஈஸ்வரிய மரியாதைகள் என்ற கோட்டிற்குள் இருந்து கொண்டே சேவை செய்யுங்கள். கோட்டை விட்டு வெளியே வந்து சேவை செய்தீர்களானால் வெற்றி கிடைக்க முடியாது. எனவே முதலில் தன்னுடைய தாரணைக்காக ஒரு குழுவை தயார் செய்யுங்கள். தங்களுக்கிடையே திட்டம் தீட்டுங்கள், பிறகு சேவை தானாகவே வளர்ச்சி அடைந்து விடும்.

**4) தன்னை எப்பொழுதும் ஒளியின் மீது விழுந்து எரிந்து போகும் விட்டில்பூச்சி என்று நினைக்கிறீர்களா?**

விட்டில்பூச்சிக்கு ஒளியைத் தவிர வேறு எதுவும் பிடிப்பதில்லை. எப்படி விட்டில்பூச்சி தன்னை அழித்துக் கொண்டு ஒளியில் வீழ்ந்து தன்னை மாய்த்துக் கொள்கிறதோ அதே போன்று தன்னுடைய தேக உணர்வை மறந்து தந்தைக்குச் சமமாக ஆவது இதைத் தான் சமமாக ஆவது என்று கூறுவது அதாவது ஒளியில் மூழ்கி விடுவது. முழு கல்பமும் கடந்து போனது, இப்பொழுது என்ன வேண்டும் என்று விரும்புகிறீர்களோ அவ்வாறே ஆக முடியும் -இது சங்கமயுகத்திற்கு கிடைத்துள்ள சிறப்பு வரதானம் ஆகும். பாக்கியத்தை உருவாக்கக்கூடிய தந்தை இப்பொழுது தான் பாக்கியத்தின் ரேகையை வரைந்து கொண்டிருக்கிறார். என்ன விரும்புகிறீர்களோ அதை உங்களுடைய பாக்கியமாக உருவாக்கிக் கொள்ளுங்கள். நல்லது.

**(5) விதை ரூப நிலை மூலமாக முழு உலகத்திற்கும் சேவை!**

விதை ரூப நிலை அனைத்தையும் விட சக்தி நிறைந்த நிலை ஆகும். அதற்குப் பிறகு அனைத்தும் வரிசைக்கிரமமான நிலை ஆகும். இந்த

நிலை லைட் ஹவுஸின் காரியம் செய்கிறது. முழு உலகத்திற்கும் லைட்டை (ஒளியை) பரப்புவதற்குப் பொறுப்பாகிறது. எப்படி விதை மூலமாக இயல்பாகவே முழு மரத்திற்கும் தண்ணீர் கிடைத்து விடுகிறதோ, அதே போன்று எப்பொழுது விதை ரூப நிலையில் நிலைத்திருக்கிறீர்களோ அப்பொழுது தானாகவே உலகத்திற்கு லைட் என்ற தண்ணீர் கிடைத்துக் கொண்டே இருக்கிறது. எப்படி லைட் ஹவுஸ் ஒரு ஸ்தானத்தில் இருந்து கொண்டே நாலா புறங்களிலும் தன்னுடைய லைட்டை பரப்புகிறதோ அதே போன்று லைட் ஹவுஸ் ஆகி உலகிற்கு நன்மை செய்யக்கூடிய முழு உலகத்திற்கும் தன்னுடைய லைட்டைப் (ஒளி) பரப்புகின்ற சக்திசாலியான நிலை வேண்டும். எப்படி ஸ்தூலமான லைட்டின் பல்ப் அதிக வாட்ஸ் அப்படி உள்ளதாக இல்லை என்றால், நாலா புறங்களிலும் அதன் மூலம் லைட் பரவ முடியாது. ஜீரோ வாட்ஸ் கொஞ்ச தூரம் குறிப்பிட்ட இடம் வரை செல்லும். இப்பொழுது வெறும் பல்ப் ஆகாமல் லைட் ஹவுஸ் ஆகுங்கள். எல்லைக்கப்பாற்பட்ட தந்தையின் குழந்தைகள் எல்லைக்கப்பாற்பட்ட சேவாதாரி. தற்சமயம் எல்லைக் கப்பாற்பட்ட சேவையின் தேவை உள்ளது. ஏனென்றால், எல்லைக்கப்பாற்பட்ட உலகத்தின் பரிவர்த்தனை (மாற்றம்) ஏற்பட வேண்டும். உலக பரிவர்த்தனை செய்வதற்காக முதலில் தன்னுடைய பரிவர்த்தனையை செய்ய வேண்டும். ஒவ்வொரு எண்ணத்திலும் உலகிற்கு நன்மை ஏற்படட்டும் என்ற நினைவு இருக்க வேண்டும்.

**6) எப்பொழுதும் சம்பன்னமாக (நிறைவாக) இருக்கும் ஆத்மாக்களின் அடையாளங்கள்!**

யார் எப்பொழுதும் அனைத்து பொக்கிஷங்களினாலும் நிறைந்து இருப்பாரோ அவர் எப்பொழுதும் திருப்தியாக இருப்பார். திருப்தியின்மைக்கான காரணம் பிராப்தியின்மை யார் நிரம்பிய ஆத்மாக்களோ அவர்களால் தான் பிற ஆத்மாக்களுக்கும் கொடுக்க முடியும். ஒருவேளை தன்னிடம் குறைவு இருக்கிறது என்றால், பிறருக்கும் வழங்க முடியாது. திருப்தி என்றால் சம்பன்ன நிலை. எப்படி தந்தை சம்பன்னமாக இருக்கிறார்! எனவே தந்தையின் மகிமையில் கடல் என்ற வார்த்தையைக் கூறுகிறார்கள், இது சம்பன்ன நிலையை உறுதி செய்கிறது. அப்படி தந்தைக்குச் சமமாக மாஸ்டர் கடல் ஆகுங்கள். நதியோ இருந்தும் வற்றி விடும். சம்பன்ன ஆத்மாக்கள்

எப்பொழுதும் குஷியில் நடனம் ஆடிக் கொண்டே இருப்பார்கள். குஷியைத் தவிர வேறு எதுவும் மனதில் வர முடியாது. திருப்தியான ஆத்மாக்கள் சம்பன்னமாக இருக்கும் காரணத்தினால் யார் மூலமாகவும் தொந்தரவு அடைய மாட்டார்கள் சம்மந்தத்தில் கூட எந்தப் பிரச்சனையும் இருக்காது. ஒருவேளை இருந்தால் கூட அதனுடைய பாதிப்பு இருக்காது எந்த வித உளைச்சலும், தடையும் ஒரு விளையாட்டாகவே அனுபவம் ஆகும். பிரச்சனையும் மனமகிழ்ச்சிக்கான சாதனம் ஆகி விடும். ஏனென்றால் ஞானம் நிறைந்தவராகி பார்ப்பார். அவர் எப்பொழுதும் நிச்சய புத்தியுடன் இருக்கும் காரணத்தினால் நிச்சயத்தின் ஆதாரத்தினால் வெற்றி அடைபவராக இருப்பார். எப்பொழுதும் மகிழ்ச்சி நிறைந்தவராக இருப்பார்.

**7) உலக சேவகன் என்று புரிந்து கொள்வதினால் ஒரே ஒரு (வரின்) ரசனையின் அனுபவம்!**

பாப்தாதாவிற்கு எப்பொழுதும் சேவாதாரி குழந்தைகள் நினைவிலிருக்கிறார்கள், ஏனென்றால் தந்தையின் வேலையும் உலக சேவகனுக்கானது எப்படி தந்தை உலக சேவகனோ அப்படியே குழந்தைகளும் இருக்கிறார்கள். சேவகனுக்கு எப்பொழுதும் சேவை மற்றும் எஜமானன் நினைவிருக்கும். அப்படி அந்த மாதிரி சேவாதாரி குழந்தைகளுக்கும் தந்தை மற்றும் சேவையைத் தவிர வேறு எந்த நினைவும் இல்லை. இதன் மூலமாகத் தான் ஒரே சீரான நிலையில் இருப்பதற்கான அனுபவம் ஆகிறது. அவர்களுக்கு ஒரு தந்தையின் ரசனையைத் தவிர மற்ற ரசனைகள் சுவையின்றி அனுபவம் ஆகும். ஒரு தந்தையின் ரசனை அனுபவம் ஆகும் காரணத்தினால் எங்கேயும் மன ஈர்ப்பு செல்ல முடியாது இதுவே செய்ய வேண்டிய முயற்சி ஆகும் மற்றும் இது தான் லட்சியமும் ஆகும். பாப்தாதா அனைவரையும் தீவிரமாக முயற்சி செய்பவர்களின் பார்வையோடு பார்க்கிறார். முயற்சி செய்பவராக இருந்தால் கூட லட்சியம் வரை சென்றடைய முடியாது.

**8) அனைத்து சம்மந்தங்களின் ரசனையை ஒரு தந்தையிடமிருந்து பெறுபவர் தான் பற்றுதலை வென்றவர்!**

தந்தையை அனைத்து சம்மந்தங்களினால் தன்னுடைய வராசு ஆக்கி விட்டீர்களா? தந்தையின் சம்மந்தத்தில் மட்டுமில்லை ஆனால்

அனைத்து சம்மந்தமும் தந்தையோடு ஆகி விட்டது, தன்னுடையவராக ஆக்கியது என்றால் தந்தையினுடையவராக அவரே ஆவது அப்படி அனைத்து சம்மந்தங்களினால் ஒரு தந்தையைத்தவிர வேறு யாரும் இல்லை என்பதாகும் யாருடைய அனைத்து சம்மந்தமும் தந்தையுடன் ஆகி விட்டதோ அவரிடம் விசேஷமாக என்ன குணம் தென்படும்? அவர் எப்பொழுதும் பற்றுதலற்றவராக இருப்பார். எந்த பக்கத்திலும் பற்றுதல் அதாவது ஈர்ப்பு இல்லை என்றால் மாயாவிடம் தோல்வியும் ஏற்பட முடியாது. அந்த மாதிரி பற்றுதலை வென்றவர் ஆக வேண்டும் அதாவது எப்பொழுதும் தந்தையின் நினைவு சொரூபத்தில் நிலைத்திட வேண்டும். அமிர்தவேளையில் அனைத்து சம்மந்தங்களின் சுகத்தை ஒவ்வொரு நாளும் பாப்தாதாவிடமிருந்து பெற்று மற்றவர்களுக்கும் தானம் கொடுப்பேன் என்ற இந்த நிற்சிந்தனையை நினைவில் கொண்டு வாருங்கள். ஒவ்வொரு சம்மந்தத்தின் சுகத்தையும் பெறுங்கள். அனைத்து சுகங்களின் அதிகாரியாகி பிறரையும் ஆக்குங்கள். அந்த மாதிரி அதிகாரி என்று தன்னை புரிந்து கொள்பவர்கள் எப்பொழுதும் தந்தையை தன்னுடைய துணைவனாக்கி நடந்து கொள்வார்கள் என்ன வேலை இருந்தாலும் ஸ்தூலமான துணைவன் நினைவு வராமல் முதலில் தந்தையின் நினைவு வர வேண்டும். உண்மையான நண்பன் கூட தந்தை தான் இல்லையா? அந்த மாதிரி உண்மையான துணைவனின் துணையை பெற்றீர்கள் என்றால் சுலபமாகவே அனைவரிடமிருந்தும் விலகிய அதே சமயம் தந்தைக்குப் பிரியமானவர் ஆகி விடுவீர்கள் ஒரு தந்தை மேல் பற்றுதல் இருக்கிறது என்றால், மற்றவர்களிடமிருந்து பற்றுதலை வென்றவர் ஆகி விடுவீர்கள்.

**9) டீச்சர்களுக்காக: பாப்தாதாவின் ஒரு சுப பாவனை இருக்கிறது சொல்லலாமா?**

கேட்க மட்டும் செய்வீர்களா அல்லது செய்யவும் செய்வீர்களா? யோசிக்க மட்டும் செய்வீர்களா அல்லது அதன் சொரூபமாகவும் ஆவீர்களா? கேட்பீர்கள், செய்வீர்கள். நல்லது தான் - மிகச் சிறிய சுப பாவனை, பெரிய விஷயம் அல்ல மிகச் சிறிய விஷயம். அனைத்து சென்டர்களும் தடையற்றதாக ஆகி விட வேண்டும் என்று தாதி செய்தி அனுப்பியிருந்தார்கள். அதற்கான பொறுப்பிலிருப்பவர்கள் ஆசிரியர்கள். இன்று வரையிலும் டீச்சர்களின் புகார் வந்து கொண்டிருக்கின்றன. தாதிகளிடம் அந்தக் கோப்பு இருக்கிறது தான் இல்லையா?

அலுவலகத்தில் இருக்கும் ஈஷு (தாதி) சென்டர்களிலிருந்து அந்த அளவு வீணான கடிதங்கள் குப்பைப் பெட்டியே நிரம்பி விடும் அளவிற்கு வருகின்றன என்று கூறுகிறார். அந்த மாதிரி தான் இல்லையா? இதைப் படிப்பதிலும் நேரம் செலவாகிறது. பிறகு கிழிப்பதிலும் நேரம் செல்கிறது பெட்டியில் போடுவதிலும் நேரம் செலவாகிறது. அப்படி இந்த உழைப்பு வீணாகி விட்டது தான் இல்லையா? எனவே பாப்தாதாவின் சுப பாவனை அனைத்து டீச்சர்களும் தந்தையின் வலதுகரம் ஆவீர்கள், இடது கரம் அல்ல வலது கரம் ஆவீர்கள். வலதுகரத்தின் இடத்திலிருந்து சென்டரிலிருந்து குப்பைப்பெட்டி நிரம்பி விடும் அளவிற்கு செய்தி வருவது என்பது நல்லதா? ஆம் அல்லது இல்லை என்று கூறுங்கள். இந்த வருடம் நாங்கள் ஒவ்வொருவரும் இந்த மூன்று சான்றிதழ்களைப் பெறுவோம். என்று சுயம் விக்னவிநாஷக், சென்டர் விக்ன விநாஷக் மேலும் உடன் இருப்பவர் விக்ன விநாஷக் யார் இந்த மூன்று சான்றிதழ்களைப் பெறுவதற்கு தயாராக இருக்கிறீர்களோ அந்த டீச்சர்கள் கையை உயர்த்துங்கள். பாண்டவர்கள் யார் யார் சென்டர்களில் இருக்கிறீர்களோ அவர்களும் கையை உயர்த்துங்கள் (அனைவரும் கை உயர்த்தினார்கள்). நன்றி. இப்பொழுது வீணான காகிதப் பெட்டி காலியாக இருக்கும். படிக்க வேண்டியது இருக்காது. கடிதங்களைத் திறந்து திறந்து கை வலிக்கிறது என்று இந்த ஈஷு கூறுகிறார். எனவே இங்கேயே அமர்ந்திருந்தாலும், வெளிநாட்டில் இருந்து கேட்டுக் கொண்டிருந்தாலும், பாரதத்தில் எங்காவதிருந்து கேட்டுக் கொண்டிருந்தாலும் அல்லது பின்பு முரளி கேட்பவர்களாக இருந்தாலும் பாப்தாதா முழு உலகத்தின் பொறுப்பிலிருக்கும் டீச்சர்களுக்காக இந்த சுப்டாவனை தான் வைக்கிறார். இந்த வருடம் எந்தவொரு புகாரும் வரக்கூடாது. புகாரின் கோப்பு முடிவடைந்து விட வேண்டும். பாப்தாதாவிடமும் அதிகமான கோட்புக்கள் இருக்கின்றன. அப்படி இந்த வருடம் புகாரின் கோப்பு முடிவடைந்து விட்டது. பிறகு அனைவருமே நல்லவர்களாகி விடுவீர்கள். நல்லவர்களிலிருந்து மிக நல்லவர்களாக வேண்டும். விருப்பம் உள்ளது தான் இல்லையா? யார் எப்படிப்பட்டவராக இருந்தாலும் அவரோடு இருப்பதற்கான விதியைக் கற்றுக் கொள்ளுங்கள். யார் என்ன தான் செய்தாலும், அடிக்கடி தடை ரூபமாகி எதிரில் வந்தாலும் ஆனால் இந்தத் தடைகளில் நேரத்தை செலவழிப்பது என்ற இதுவும் எதுவரை இருக்க முடியும். இதற்கும் நிறைவு விழா இருக்க வேண்டும் இல்லையா? எனவே மற்றவர்களைப்

பார்க்காதீர்கள், இவர் அப்படிச் செய்கிறார். இவர் இப்படிச் செய்கிறார் என்றில்லாமல் நான் என்ன செய்ய வேண்டும்? அதை யோசிக்க வேண்டும். ஒருவேளை அவர் மலையாக இருக்கிறார் என்றால் நான் ஒதுங்கிச் செல்ல வேண்டும். மலையை அகற்ற முயற்சிக்கக் கூடாது. இவர் மாறினார் என்றால் நான் மாறுவேன் -இந்த மலை அகன்றது என்றால் நான் முன்னேறிச் செல்வேன் என்பது கூடாது. மலை அகலாது நீங்களும் லட்சியத்தை சென்று அடைய முடியாது. எனவே ஒருவேளை அந்த ஆத்மாவிற்காக சுப பாவனை இருக்கிறது என்றால்; சமிக்ஞை கொடுத்தீர்கள் மற்றும் மனம், புத்தியால் காலி ஆனீர்கள் தன்னையே அந்த விக்ன சொரூபம் ஆகுபவரின் யோசனையில், சிந்தனையில் போடாதீர்கள். எப்பொழுது வரிசைக்கிரமமாக இருக்கிறார்கள் என்றால், வரிசைக்கிரமத்தில் நிலையும் வரிசைக்கிரமமாக இருக்கவே தான் இருக்கும் ஆனால் எனக்கு நம்பர்-1 ஆக வேண்டும். அந்த மாதிரி தடை மற்றும் வீணான எண்ணங்களை வைத்திருக்கும் ஆத்மாக்களுக்காக நீங்கள் பரிவர்த்தனை ஆகி அவர்களுக்காக சுப பாவனை வைத்துக் கொண்டே இருங்கள். கொஞ்சம் காலம் எடுக்கும் கடின உழைப்பு கொஞ்சம் செய்ய வேண்டியதாக இருக்கும் ஆனால் இறுதியில் யார் சுயபரிவர்த்தனை செய்கிறாரோ அவர் கழுத்தில் தான் வெற்றி மாலை விழுகிறது. சுப பாவனையோடு ஒருவேளை அவரை பரிவர்த்தனை செய்ய முடியும் என்றால் செய்யுங்கள், இல்லையென்றால் சமிக்ஞை கொடுங்கள், தன்னுடைய பொறுப்பை முடித்து விடுங்கள் மற்றும் சுயபரிவர்த்தனை செய்து முன்னுக்கு பறந்து கொண்டே செல்லுங்கள். இந்த தடை ரூபம் கூட பற்றுதலின் தங்கக் கயிறு ஆகும். இதுவும் பறக்க விடாது இது மிகுந்த நுண்ணியமான மற்றும் மிகுந்த சத்தியத்தின் திரைச்சீலையின் நூல் ஆகும். இதுவோ உண்மையான விஷயம் தான் இல்லையா என்று இதைத் தான் யோசிக்கிறார்கள். இது என்னவோ நடக்கிறது தான் இல்லையா? இது நடக்கக்கூடாது இல்லையா? ஆனால் எதுவரை பார்த்துக் கொண்டு, எதுவரை நின்று கொண்டே இருப்பீர்கள். இப்பொழுதோ தன்னை நுண்ணியமான நூல்களிலிருந்து விடுபடச் செய்யுங்கள். முக்தி வருடத்தைக் கொண்டாடுங்கள். எனவே குழந்தைகளில் என்னென்ன ஆசைகள் இருக்கின்றன, ஊக்கம் இருக்கிறது உற்சாகம் இருக்கிறது. இந்த அனைத்திற்கும் நிகழ்ச்சி வைத்து பாப்தாதா நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார் ஆனால் இந்த வருடத்தின் இறுதி நிகழ்ச்சியாக முக்தி வருடத்தின் நிகழ்ச்சி

இருக்கட்டும் நிகழ்ச்சியில் தாதிகளுக்கு பரிசுகளும் கொடுக்கிறீர்கள். அப்படி பாப்தாதாவிற்கு இந்த முக்தி வருடத்தின் நிகழ்ச்சியில் தன்னுடைய சம்பூர்ண நிலையின் பரிசைக் கொடுங்கள். நல்லது.

**10) மாயாஜால மந்திரத்தின் நினைவின் மூலம் வெற்றி சொரூபம் மாயாஜால மந்திரம் எப்பொழுதும் நினைவிருக்கிறதா?**

மாயாஜாலத்தின் மந்திரம் என்றால் எது? தந்தையின் நினைவு தான் மாயாஜால மந்திரம் ஆகும். இந்த மாயாஜால மந்திரம் மூலமாகத் தான் என்ன சித்தியை விரும்புகிறீர்களோ அதை அடைய முடியும். எப்படி ஸ்தூலத்திலும் கூட ஏதாவது ஒரு காரியத்தின் வெற்றிக்காக (சித்திக்காக) மந்திரத்தை ஜபிப்பார்கள் அப்படி இங்கேயும் ஒருவேளை ஏதாவதொரு காரியத்தில் விதிமுறையை விரும்புகிறீர்கள் என்றால், இந்த மகாமந்திரம் தான் விதி சொரூபம் ஆகும். இது அந்த மாதிரியான மாயாஜால மந்திரம் ஒரு நொடியில் மாயாஜால வித்தை செய்து விட முடியும் அதாவது மாற்றம் செய்துவிடும். அப்படியானால் அந்த மாதிரியான மாயாஜால மந்திரம் எப்பொழுதும் நினைவிருக்கிறதா அல்லது சில நேரம் மறந்து விடுகிறதா? எப்பொழுதும் நினைவிருக்கிறது என்றால், எப்பொழுதும் சித்தி சில நேரம் நினைவிருக்கிறது என்றால் வெற்றி இருக்காது சில நேரம் மட்டுமே இருக்கும். அப்படி இந்த வருடம் எப்பொழுதும் என்ற வார்த்தையை கீழ்க் கோடிடுவதற்கான விஷயம் ஆகும். நினைவிருப்பது பெரிய விஷயமில்லை ஆனால் எப்பொழுதும் நினைவிருப்பது இது தான் பெரிய விஷயமாகும். இப்பொழுது எப்பொழுதும் என்பதற்கான நேரம் வந்திருக்கிறது. எப்பொழுதும் என்பதை சேர்த்துக் கொண்டீர்கள் என்றால் எப்பொழுதும் வெற்றி அடைபவராக ஆவீர்கள்.

**11) மாயாவின் தாக்குதலிலிருந்து பாதுகாப்பாக இருப்பதற்கான வழி உலகிலிருந்து விலகியவராக மற்றும் தந்தையின் அன்பிற்குரியவராக மாறுங்கள்!**

ஒவ்வொருவரும் தன்னை தந்தையின் அன்பிற்குரிய மற்றும் உலகிலிருந்து விலகியவராக நினைக்கிறீர்களா? யார் தந்தையின் அன்பிற்குரியவராக ஆகிறாரோ, அவர் உலகிலிருந்து விலகியவராக ஆகி விடுகிறார். அப்படி எவ்வளவு விலகிய நிலை இருக்குமோ அந்த அளவே அன்பிற்குரிய நிலையும் இருக்கும். ஒருவேளை விலகிய

இலை இல்லை என்றால், அன்பிற்குரிய நிலையும் இல்லை. யார் தந்தையின் அன்பில் ஐக்கியமாகியிருக்கிறாரோ தன்னையே மறந்திருக்கிறாரோ அவரை மாயா கவர்ந்திழுக்க டிடியாது. எப்படி தண்ணீரால் பாதிக்கப்படாத (வாட்டர் ப்ரூ:ப்) துணி இருக்கிறது. என்றால் அதன் மேல் ஒரு துளி கூட நிற்காது. அதே போல் யார் தந்தையின் முழு ஈடுபாட்டில், அன்பிலேயே ஐக்கியமாகி இருக்கிறார்களோ அவர் மாயாவால் தாக்க முடியாதவர் (மாயா ப்ரூ:ப்) ஆகி விடுகிறார். மாயாவின் எந்தவொரு தாக்குதலும் ஒன்றும் முடியாது. தந்தையின் அன்பு அழியாதது மற்றும் சுயநலமற்றது. இதன் அனுபவியாகவும் இருக்கிறீர்கள் மற்றும் அற்ப காலத்து அன்பின் அனுபவியாகவும் இருக்கிறீர்கள். அந்த அற்ப காலத்து அன்பு இந்த அழியாத அன்பின் எதிரில் ஒன்றுமே இல்லை. தந்தை மற்றும் நான், மூன்றாமவர் யாருமில்லை என்று அந்த மாதிரி நிலை இருக்கிறதா? மூன்றாமவர் இடையில் வருவது என்றால் தந்தையிடமிருந்து பிரிப்பது மூன்றாமவர் வரவேயில்லை என்றால் பிரியவே முடியாது. யார் தந்தையின் நினைவில் மூழ்கியிருக்கிறாரோ அவர் சித்தியை அடைந்து விடுகிறார்.

**12) ஈஸ்வரிய போதையின் மகிழ்ச்சி மூலம் கர்மாதீத் நிலையின் இலக்கு மிக அருகாமையில் இருக்கும்!**

உயர்ந்த ஆத்மாக்கள் நீங்கள் ஞானக்கடல் தந்தை மூலமாக நேரடியாக அனைத்து பிராப்திகளையும் செய்பவர்கள் மேலும் மற்ற ஆத்மாக்கள் யாரெல்லாம் இருக்கிறார்களோ அவர்கள் உயர்ந்த ஆத்மாக்கள் உங்கள் மூலமாக ஏதாவது பிராப்தி அடைகிறார்கள் ஆனால் நீங்கள் நேரடியாக தந்தை மூலமாக அனைத்து பிராப்திகளையும் அடைபவர்கள், அந்த மாதிரி உயர்ந்த போதை இருக்கிறதா? எந்த அளவு போதை இருக்குமோ அந்த அளவு தன்னுடைய கர்மாதீத் நிலையின் இலக்கு அருகில் தென்படும். ஒருவேளை போதை குறைவாக இருக்கிறது என்றால் இலக்கும் தூரமாகத் தென்படும். இந்த ஈஸ்வரிய போதையில் இருப்பதினால் துக்கமான உலகத்தை சுலடமாகவே மறந்து விடுவீர்கள், அந்த போதையிலும் கூட அனைத்தும் மறந்து விடுகிறது இல்லையா? அப்படி இந்த ஈஸ்வரிய போதையில் இருப்பதினால் நிரந்தரமாக பழைய உலகம் மறந்து விடுகிறது. இந்த போதையில் எந்த நஷ்டமும் இல்லை எவ்வளவு போதையை ஏற்றுவீர்களோ அவ்வளவு நல்லது. அந்த

போதையை அதிகமாக குடித்தார்கள் என்றால், இறந்து விடுவார்கள். இங்கே இந்த போதை மூலம் அழியாதவர் ஆகி விடுகிறார். யார் போதையில் இருக்கிறாரோ அவரைப் பார்ப்பவரும் இவர் போதையில் இருக்கிறார் என்று அனுபவம் செய்வார்கள். அதே போல் உங்களையும் பார்த்து இவர் போதையில் இருக்கிறார் என்று அனுபவம் செய்யட்டும். இந்த நேரம் போதை ஏறியது. அடுத்த நேரம் இறங்கியது என்றால் என்ன மகிழ்ச்சி வர வேண்டுமோ அது வராது. எனவே எப்பொழுதும் போதையில் இருங்கள். இந்த போதையில் அனைத்து பிராப்திகளும் இருக்கிறது. ஒரு தந்தையைத் தவிர இன்னொருவர் யாரும் இல்லை என்ற இந்த நினைவு தான் போதையை ஏற்றுகிறது. இந்த நினைவு மூலம் சக்திசாலியான நிலை வந்து விடுகிறது. அப்படி அதிகமாகக் கேட்டிருக்கிறீர்கள். அதனுடைய சொரூபமாகி பிறரையும் அப்படியே ஆக்குங்கள். பாப்தாதா அனைத்து குழந்தைகளையும் சைத்தன்ய சாட்சாத்காரம் செய்விக்கும் சாட்சாத் மூர்த்திகளாகப் பார்க்க விரும்புகிறார். எப்பொழுது சைத்தன்ய மூர்த்திகள் தயாராகி விடுவரோ அப்பொழுது இந்த ஜட மூர்த்திகள் முடிவுக்கு வந்து விடும். மேலும் இதே பாரதம் எல்லைக்கப்பாற்பட்ட கோயில் ஆகி விடும். அனேகம் அழிந்து ஒரே ஒரு பெரிய கோவில் ஆகி விடும்.

**13) சங்கமயுகத்தின் நேரத்திற்கு ஒவ்வொரு அடியில் பல மடங்கு வருமானம் ஆவதற்கான வரதானம் இருக்கிறது!**

எப்பொழுதும் தன்னை ஒரு அடியில் பல மடங்கு சேமிப்பு செய்யும் பல மடங்கு பாக்கியம் நிறைந்த ஆத்மா என்று நினைக்கிறீர்களா? ஒவ்வொரு அடியிலும் சேமிப்பு ஆகிக் கொண்டிருக்கிறதா என்று சோதனை செய்கிறீர்களா? சங்கமயுகத்திற்கு ஒவ்வொரு அடியிலும் பல மடங்கு சேமிப்பு ஆகும் என்ற இந்த வரதானம் தான் கிடைத்திருக்கிறது. அப்படியானால் ஒரு நொடி கூட மற்றும் ஒரு நொடி கூட சேமிப்பு ஆகவில்லை என்றால் எவ்வளவு நஷ்டமாகி விட்டது. உலகில் கூட ஒருவேளை ஒரு நாளில் சம்பாத்தியம் இல்லை என்றால் கவலை ஏற்பட்டு விடும். அதுவோ எல்லைக்குட்பட்ட சம்பாத்தியம், இதுவோ எல்லைக்கப்பாற்பட்ட சம்பாத்தியம். இப்பொழுதைய ஒரு அடி பல மடங்கின் சம்பாத்தியத்தை சேமிக்கக்கூடியது என்றால் பின்பு எவ்வளவு கவனம் வேண்டும். சாதாரணம் அல்ல. யார் ஒவ்வொரு அடியிலும் பல மடங்கு சம்பாத்தியத்தை சேமிப்பவராக இருப்பாரோ, அவருடைய

அடையாளமாக என்ன தென்படும்? அவருடைய முகத்தில் எப்பொழுதும் பிராப்தியின் பொலிவு தென்படும், எப்படி ஸ்தூலமான ஏதாவது ஒரு பொருளின் ஜொலிப்பு தென்படுகிறது தான் இல்லையா? அதே போல் பிராப்தியின் ஜொலிப்பு முகம் மூலம் தென்படும். தொடர்பில் வருபவர்களும் இவருக்கு ஏதோ பிராப்தி ஆகியிருக்கிறது என்று புரிந்து கொள்வார்கள். அவர்கள் தானாகவே ஈர்க்கப்பட்டு உங்கள் எதிரில் வருவார்கள். அப்படி உங்களுடைய நிரம்பிய முகம் சேவையின் கருவியாக ஆகி விடும். அனைவரும் எப்பொழுதும் குஷியாக இருக்கிறீர்களா அல்லது சில நேரம் குஷியின் பொக்கிஷத்தை மாயா பறித்து விடுகிறதா? மாயாவின் கதவுகள் மூடியிருக்கிறதா அல்லது திறந்திருக்கிறதா? இப்பொழுது கதவை மிக நல்ல முறையில் இரட்டைப் பூட்டைப் பூட்டுங்கள். ஒரு பூட்டு போட்டிருந்தால் கூட மாயா திறந்து விட்டு உள்ளே வந்து விடும். இரட்டைப் பூட்டு என்றால் நினைவு மற்றும் சேவையில் பிஸியாக இருங்கள். ஒருவேளை நினைவில் மட்டும் இருக்கிறீர்கள், சேவையில் இல்லை என்றாலும் மாயா வந்து விடும். இரட்டைப் பூட்டில் மாயா உள்ளே வர முடியாது. தட்டும், ஆனால் உள்ளே வராது. அதாவது தாக்குதல் செய்யாது. மனதால் செய்யும் சேவையும் அதிகமாக இருக்கிறது. தன்னுடைய உள்உணர்வு மூலமாக தன்னைச் சுற்றிய சூழலை சக்தி நிறைந்ததாக ஆக்குங்கள். முழு உலகத்தின் மாற்றம் இல்லையா? அந்த உள்உணர்வினால் சுற்றுப்புறச்சூழல் மாற்றம் அடையும். நல்லது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

## பொருளடக்கம்

☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂